





நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்.ஐயாத்துரை சரவணபவன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுச் சுடர்

**18.08.2015**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# ஐயாத்துரை சரவணபவன்

*அவர்களின்*

**சிவப்பேறு குறித்த**

# நினைவு மலர்

**18.08.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்


அன்போடும் பண்போடும்
பாசத்தோடும்
எம்மை வளர்த்து எமது
வாழ்வில்
நல்வழி காட்டியாக
இருந்து எமது
இலக்குகளை அடைய
உறுதியாக
இறுதி வரையும்
தங்களைஅர்ப்பணித்து
இன்று எம்மை
ஆறாத்துயரில்
ஆழத்திவிட்டு இறைபதம்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"




மலர்வு
12 . 09 . 1928

அமரர்

உதிர்வு
19 . 07 . 2015

# ஐயாத்துரை சரவணபவன்

## அவர்களின் திதிவெண்பா

மாண்புறு சோதிட மணி ஐயாத்துரை சரவணபவன்
மன்மத ஆண்டு ஆடித்திங்கள் மக நட்சத்திரத்தில் - பூர்வபக்க
திருதியை திதி தன்னில் திருகயிலை நாதன்
திருப்பாதம் சேர்ந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

காயமே கோயில் ஆகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை ஆகமனமணி இலிங்கம் ஆக
நேயமே செய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றிவிக் காட்டினோமே

## திருவாசகம்

பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலாப்பிலா ஆனந்த மாய்
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவிசைப்பா

ஏக நாயகனை யிமையவர்க் கரசை
மன்னுயிர்க கமுதினை எதிரில்
யோக நாயகனைப் புயல்வண்ணர்க் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகு திரு விழி
மிழலை வீண் ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே

### திருப்பல்லாண்டு

ஆரார் வந்தா ரமரர் குழாத்தி வணியுடை யாதிரை நாள்
நாராயணனொடு நான்முக ளங்கி யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் தேவர் குழாங் கடிசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியுமாடியும் பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

அண்ண லேயெனை யாண்டுகொண் டருளிய வமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னாற்றிருக் கைலையி லிருந்தநின் கோலம்
நண்ணி யான்தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.

### திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடு முகமொன்றே
ஈசனொடு ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுரு வேல்தாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீயருள வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள்
வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்.

**திருச்சிற்றம்பலம்**

## நாகபூசணி அம்மன் தோத்திரம்

**(நயினை.க.இராமச்சந்திரா)**

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என் இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை யான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகிறேன்.
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே இந்தத்
தரணியிலே சாந்தியையே தருவாய் நீயே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் ஐயாத்துரை சரவணபவன் அவர்களின்
## வாழ்க்கைக் குறிப்புகள்

தந்தையின் பெயர் :- அமரர் சோதிடகலாநிதி சுந்தரன் ஐயாத்துரை

தாயாரின் பெயர் :- அமரர் ஐயாத்துரை கமலாம்பாள்

சகோதரர் விபரம் :-
1. அமரர் நல்லம்மா இராமலிங்கம்
2. அமரர் ஐயாத்துரை அம்பிகாவதி
3. அமரர் ஐயாத்துரை கதிர்காமலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
4. திரு ஐயாத்துரை சுந்தரலிங்கம் (ஓய்வு நிலை தகால் ஊழியர்)

கல்வி கற்ற இடம் :- யா/நயினாதீவு நாகபூசணி வித்தியாசாலை
யா/நயினாதீவு மகா வித்தியாலயம்

மைத்துனர் விபரம் :- அமரர் க.இராமலிங்கம்
அமரர் அ.விசாலட்சி
அமரர் க.நாகபூரெத்தினம்மா
அமரர் சு.நாகமுத்து
அமரர் இ.கனகசபாபதி (ஓய்வு நிலை அதிபர்)

மனைவி பெயர் :- திருமதி மங்கையற்கரசி சரவணபவன்

பிள்ளைகள் விபரம் :- திருமதி கடம்பமலர் விமலராஜா (அதிபர் யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்)
திருமதி கலாநிதி சுந்திரகுமார்
திரு சரவணபவன் கௌரிபாலன் (மாகாண பொறியியலாளர் உள்ளூர்ஆட்சி திணைக்களம் கிழக்கு மாகாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமகள் விபரம் :- திரு செல்லையா விமலராஜா (வியாபாரம்)
திரு குமாரசாமி சுந்திரகுமார் (ஊழியர் யாழ் கச்சேரி)
திருமதி கௌரிபாலன் காயத்திரி (வைத்தியர், பொது வைத்திய உத்தியோகத்தர் மட்டக்களப்பு)

பேரப்பிள்ளைகள் விபரம் :- பிரணவன், பிரணவி, கௌரி, பவன், ராம்ஜி

சேவை விபரம்

| காலம் | இடம் | பதவி |
|---|---|---|
| 1947.08.07 | யா/நயினாதீவு ம.வி | ஆசிரியர் |
| 1949.01.19 | யா/அனலைதீவு வ.த.க.பாட | ஆசிரியர் |
| 1950.02.13 | யா/பலாலி அ.ஆ.ப.கலாசாலை | ஆசிரியர் |
| 1952.01.01 | க/கம்பளை அரச.த.க.பா | ஆசிரியர் |
| 1958.09.01 | க/பேராதனை அ.த.க.பா | ஆசிரியர் |
| 1959.01.01 | கொ/புளுமொன்டல் அ.த.க.பா | ஆசிரியர் |
| 1962.10.22 | யா/நயினாதீவு ம.வி | ஆசிரியர் |
| 1965.01.01 | யா/பலாலி ஆ.ப.கலாசாலை | வர்த்தகம் |
| 1967.01.01 | யா/கனகரத்தினம் ம.மகா.வித் | ஆசிரியர் |
| 1970.05.22 | யா/கொக்குவில் இ. கல்லூரி | ஆசிரியர் |
| 1973.05.02 | யா/மட்டுவில் மகா.வி | ஆசிரியர் |
| 1978.05.17 | யா/ஸ்ரீ ஞான பண்டித வித் | அதிபர் |
| 1985.05.01 | யா/கொக்குவில் நாமகள் வித் | அதிபர் |
| 1988.09.12 | ஓய்வு நிலை | |

விசேட செயற்பாடு :-

"நான் ஓர் ஆசிரியராக, அதிபராக இருப்பதனை விட ஒரு சோதிடராக இருப்பதில் பெருமை அடைகின்றேன்." என அமரர் ஐயாத்துரை சரவணபவன் அவர்கள் அடிக்கடி கூறுவார். சாதி, மத, இன, நாடு பிரதேச வேறுபாடுகளை எல்லாம் கடந்து எல்லா மக்களுடனும் பழக உதவியது இச் சோதிடக் கலையே ஆகும் என்பது அவரின் கருத்தாகும் நீண்ட சோதிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரையல் "சாத்திரியார்" என பலராலும் அழைக்கப்பட்ட சோதிட கலாநிதி சுந்தரர் ஐயாத்துரையாகிய அவருடைய தந்தையரிடமும், மேலும் புத்தூரில் வசித்த சோதிடர் ஒருவரிடமும் தென்னிந்தியாவிலிருந்து அக்காலத்தில் வருகை தந்த ஒட்டுச்சுவடிகளை வாசிக்கும் சோதிடர்களிடமும் தனது சோதிட அறிவை வளர்த்துக் கொண்டார். இதனால் நிறைய அனுபவங்களை அடைந்து பிரபலமான சோதிடராக விளங்கினார். நயினை அன்னையின் அருளும் வாக்குப்பலமுமே. தான் பெயர் பெறக் காரணம் என்பார்.

1965இல் இரண்டாம் தடவையாக ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு வர்த்தக ஆசிரியர் பயிற்சிக்காக சென்றார். விசேடமாக தான் கற்ற வர்த்தகக் கல்வியை யா.கொக்குவில் இந்துக்கல்லூரியில் வர்த்தகத் துறையை உருவாக்குவதற்கு பயன்படுத்தினர். அவரிடம் அப்போது வர்த்தகக் கல்வியைக் கற்ற பலர் இன்று வர்த்தகத்துறையில் நன் நிலையில் உள்ளனர். வர்த்தகத்துறையினைக் கற்றமையால் போலும் அவர் அடிக்கடி கூறும் வாக்கியம்

"எழுதி வாழாதவன் வாழ்க்கை கழுதை புரண்ட களம்"

இவ்வாறு வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனடி சேர்ந்த அன்னாரின் பெருமை பேசவும் அரிதானது.

என் கடன் பணி செய்து கிடப்பதே.

மகள்

திருமதி விமலராஜா கடம்பமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்.இ.நல்லம்மா



அமரர்.ஐ.அம்பிகாவதி



அமரர்.ஐ.கதிர்காமலிங்கம்



அமரர்.ஐ.சரவணபவன்



அமரர்.சு.ஐயாத்துரை அமரர்.ஐ.கமலாம்பாள்



திரு.ஐ.சுந்தரலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் அப்பா அன்னையிடம் வேண்டி பெற்றுக்
கொண்டவை.

**கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்**
**கபடு வாராத நட்பும்**
**கன்றாத வளமையும் குன்றாத இளமையும்**
**கழுபிணியிலாத உடலும்**
**சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்**
**தவறாத சந்தானமும்**
**தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்**
**தடைகள் வாராத கொடையும்**
**தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு**
**துன்பமில்லாத வாழ்வும்**
**துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய**
**தொண்டரொடு கூட்டு கண்டாய்**
**அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே**
**ஆதி கடவூரின் வாழ்வே**
**அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி**
**அருள்வாமி அபிராமியே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நெஞ்சில் நிலைத்த அண்ணர்,**

சப்த தீவுகளிலே 64 சக்தி பிடங்களிலே ஒன்றான புவனேஸ்வரி பீடமாக விளங்குகின்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் அருள் பாலிக்கும் அற்புதமான பூர்வ புண்ணிய பூமியிலே வேண்டுவார் வேண்டுவதை ஈவான் ஆகிய இரட்டங்காலி முருகன் குடிகொண்ட 2ம் வட்டாரம் கருமாண்டிப்புலம் வீட்டிலும் பின்னர் 5ம் வட்டாரம் 1948ம் ஆண்டு மொட்டை நான் தென்னங்குழியிலும் வசித்து வந்தோம்.

உயர்வேளாள குடிப்பரம்பரையில் எமது தகப்பன் வழித்தோன்றலாக பிரான்ஸ் சின்னத்தம்பி கந்த உடையார், கதிர்காம உடையார், வேலாயுத உடையார், கணபதி செங்கமலையர் சுந்தரன் ‚ அபிராமி அம்மா ஐயாத்துரை அவர்களை மகனாகப்பெற்றார். தாய்வழி பிராமணவழி சடைஐயர், சுப்பஐயர், கார்த்கேயஐயர் ' தெய்வானையின் மகள் அபிராமி அம்மா எமது தாயார்ட நாகநாதியாரின் மகள் கமலாம்பாள் ஐயாத்துரை கமலாம்பாள் அவர்களுடைய பிள்ளைகளாக ஐவர் பிறந்தோம். ஆசை அக்கா நல்லம்மாவுடன் மூன்று அண்ணர் அம்பிகாவதி, கதிர்காமலிங்கம், சரவணபவன் தம்பி சுந்தரலிங்கம் பெற்றதாயும் பிறந்தமண்ணையும் என்றும் போற்றுதற்குரியது.

எனது அன்பிற்குரிய அண்ணன் 12.09.1928 பிறந்து ஆரம்பக்கல்வி திண்ணைப்பள்ளிக்கூடம், நாகபூஷணி வித், ஸ்ரீ கணேசவித்தியாசாலை, மகாவித்தியாலயம் உயிர்பேறுகள் மூலம் ஆசிரியராகவும் அதிபராகவும் கல்வித்துறையில் பல பொறுப்பான பதவிகளை வகித்தவர்.

சோதிடத்தை தந்தைவழிப் பேரன்மாருடனும் தந்தையாரிடமும் திரிபுறக்கற்றவர். ஒருவரை பார்த்தவுடன் கூறும் ஞானம் பெற்றவர். சோதிடக் கலைஞராகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லுனராகவும், ஆட்சியாளராகவும் திகழ்ந்தவர் அவருடைய தத்துவார்த்தமான சிந்தனையுடன் கூடிய தர்க்கங்களும், பகுத்து ஆராய்ந்து வாதிடும் திறனும் உடையவர்.

புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறி பற்றி வாழ வேண்டும் அந்நெறியே சிவநெறியாகும். இதனை எமக்கு காட்டி தாமும் வாழ்ந்து. சைவசமய அறிவினையும், இறைபக்தியையும், ஆன்மீக உணர்வையும் விருத்தியடையச் செய்தும், திருமுறைகள் ஓதுவதின் மூலம் துன்பங்களை துடைத்து அமைதி அடைய முடியும் எனவும் எந்நேரமும் நாம சங்கீர்த்தத்தினால் இறைவனைத் தம் வசப்படுத்தி பேரருளை பெற்று இறை சிந்தனையோடு வாழ்ந்து அனைவருக்கும் உதவிய அண்ணருடைய இறப்பு என்பது உடம்புதான் உருவம் மறையவில்லை. ஆத்மா இரட்டங்காலி முருகன் நாகபூஷணி அம்பாளுடைய பாதங்களில் நித்திய பேரானந்தம் அடைக.

**திரு.ஐயாத்துரை சுந்தரலிங்கம்**
**ஓய்வுநிலை தபால் ஊழியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தப்பாவை எண்ணி பெருமைப்படும் பெறாமகன்

ஈழமணித் திருநாட்டின் தலையாக அமைந்து யாழ்ப்பாணக்குடாநாடும் அதனை அண்டிய ஐப்த தீவுகளும் இச்சப்த தீவுகளில் மிகப்பெருமை மிக்கதும் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரிபீடம் அமையப்பெற்றதும் நயினாதீவாகும். அங்கு பிறந்த மக்கள் ஏதோ ஒருவகையில் அம்மையின் அருளாட்சிக்கு உட்பட்டு காலத்துக்கு காலம் கவிஞர்கள், ஞானிகள், சான்றோர்கள், கல்வியியலாளர்கள் தோன்றி தாம் பிறந்த மண்ணிற்கு பெருமை சேர்த்து வந்துள்ளனர். இந்த வகையில் அம்பிகையின் வழிபடுநர் பரம்பரையிலே தோன்றியவர் அமரர் சுந்தரன் ஐயாத்துரை அவர்கள். (அவர் தனது பரம்பரையிலான கந்த உடையார், கதிர்காம உடையார், வேலாயுத உடையார், கணபதி, செங்கமலையர் சுந்தரன் வழிவந்நவர்கள்)

அந்நயினை நகரில் தோன்றினாலும் இணுவையூர் கணேசையரிடம் தமிழைக்கற்று தேறியவர் அவரது சக மாணவராக பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் இருந்தார் எனக் கூறியுள்ளார். அவரது தமிழ்ப் புலமையில் ஓலைச்சுவடிகள் பல ஆதாரமாக இருந்தன. ஐயாத்துரை அவர்கள் தாளாத அறிவுத் தேடலும் தமிழ்ப்பற்றும் சைவப்பற்றும் சோதிட ஆராய்வு நோக்கும் கொண்டிருந்தார். அத்துடன் இவரது நூல்கள் மூலம் பிற நூல்கள் மூலமும் அறியப்பட்டுள்ளது. பிள்ளைகளையும் தனது வழியிலே நடாத்தி இரு மகன்களை ஆசிரியத் தொழிலில் அமர்த்த முடிந்தது. தமது ஊரினில் சிறப்புடன் தலைநிமிர்ந்து வாழ வழிசமைத்தார்

"வளரும் பயிரை முளையிலே காணும் நிலையுடன்" தனது எதிர்காலம் கூறும் சோதிட ஆற்றலாலும் மகன் சரவணபவனது தனித்திறமையை இளம் வயதிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்கண்டு சோதிடக் கலையிலுள்ள சூட்சுமங்கள் மற்றும் மந்திரங்களை கற்பிப்பதற்காக கலைகளை குரு.்.சீடனுக்கு ஓதுவதற்கு சிறந்த நேரம், கிரகண நாள் ஆகும். அன்று கிரகணநேரம் கடலில் கழுத்துமட்ட நீரில் வைத்து புகட்டுதல் வேண்டும். இந்நிலையில் திரு.ஐயாத்துரை அவர்களும் சரவணபவனுக்கு (வாகடங்கள்) மந்திரங்களை கடலில் வைத்து புகட்டியுள்ளார். அதுமட்டுமன்றி தனது நண்பரான புத்தூரிலுள்ள பிரபல சோதிடருடைய வீட்டிலும் குருகுல கல்விக்கும் அவரை அனுப்பி பயிற்றுவித்துளளார். இதனை திரு.சோதிட கலாநிதி சு.ஐயாத்துரை அவர்களே பெருமைபடக் கூறியுள்ளார்.

சிறுபராயத்திலிருந்து திரு.சரவணபவன் தான் எதிலும் முதன்மை நிலைக்கு வரவேண்டும் என்ற அவாவின் காரணமாகவும் நன்நோக்கு காரணமாக 18 வயது முடியுமுன் ஆசிரியப் பணியினை ஏற்றுக் கொண்டார். ஆசிரியப்பணி என்பது மாணவனை விடயத்தை புரிய வைப்பது என்பதில்லை. அதற்கு மேல் மாணவனின் தனிச்சிறப்பை ஆய்ந்து, அறிந்து வழிகாட்டியவர் ஆசிரியரான சரவணபவன். அவர்தம் ஆலோசனைகளை ஏற்று வளர்ந்தவர்கள் அனைவரும் நல்ல உயர்நிலையில் திகழ்வது எடுத்துக்காட்டாகும். என்றும் மாணவ வயது கொண்டமவர்களைக் கண்டால் அவரது முதலாவது கேள்வி கல்வி சம்மந்தமாகவே இருக்கும். கற்பதற்கும் அதன்வழி தொழில் தேடவும் நல்ல ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் பொறுப்பேற்பவராகவும் செயற்பட்டு எமது பரம்பரையில் தனது உடன் பிறவா சகோதரர்கள் மற்றும் தனது பேறாமக்கள் அனைவரையும் உயரிய நிலைக்குச் செல்ல கலங்கரை விளக்காக செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடன் கலந்துரையாடலில் கிடைத்த உத்வேகம் இன்றுவரை வழிகாட்டியாக உள்ளது. வெளிச்ச வீட்டின் பிரயோசனத்துக்கும் வீட்டு விளக்கிலுள்ள உபயோகத்துக்கும் உள்ள வித்தியாசம் போல் வாழ்க்கையில் வேறுபாடுகளை உணர வைத்தவர். ஆசிரியத்தொழிலில் ஆசிரியராக, அதிபராக, பரீட்சை மேற்பார்வையாளராக, பரீட்சை மதிப்பீட்டாளராக சகல கடமைகளையும் நேர்மையாகவும் கடவுள் பணியாகவும் செய்தவர். செய்தொழில் அவரது கடவுளாகும். நயினை அம்பிகையிலும் நயினை மண்ணிலும் மட்டற்ற மதிப்பும் பற்றும் கொண்டவர்.

தனது பிள்ளைகளை உயர்கல்வி கற்பிப்பதற்கு யாழ் வந்த போது சகோதரர்களின் பிள்ளைகளையும் (எங்களையும்) அழைத்து வந்து ஆதரவு தந்து கற்பித்ததுடன் துறைசார் கல்விக்கும் வழிகாட்டினார். இக்குடும்பம் கல்வியில் நல்லதொரு நிலையில் அகிலத்தில் கல்விக் கடமைகளைச் செய்கிற நிலைக்கு வித்திட்டவர் எனது சிறிய தந்தையார். நான் அவரைக் காணும் போதெல்லாம் அவரை வீழ்நது வணங்கும் போதும் ஆசீர்வதிப்பார். இறுதியாக நான் இலங்கை வந்து வீழ்ந்து வணங்கிய போது "எங்கிருந்தாலும் நல்லாவே தான் இருப்பாயடா" என்று ஆசீர்வாதம் செய்தார்.

அவருடைய பிரிய பத்தினி மங்கையற்கரசி பேருக்கு ஏற்ற தாய் அவருக்கு எதிர்வார்த்தை பேசாதவர். எமக்கும் உறவுகளுக்கும் எல்லா வழிகளிலும் உணவிட்டு பராமரித்துள்ளார். சித்தப்பாவின் வீடு எந்நேரம் நான்கு ஐந்து பேரைக் கொண்ட சோதிட ஆய்வு நிலையமாகவே இருக்கும். இடைக்கிடை "வாழ்க்கை என்பது ஜீவமரணப் போராட்டம்" எனக் கூறி எல்லோரையும் சாந்தப்படுத்துவார். இதில் யாருக்கும் மனத் துணிவனை வழங்கி விடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது வாழ்வில் மிகச்சிறிய வயதிலேயே நீரிழிவு நோய்க்கு ஆளாயினார். இருப்பினும் எந்தவித பாதிப்பும் இல்லாது 87 வருடங்கள் வாழ்ந்தமை அவரது வாய்க்கு அவர் போட்ட கட்டுப்பாடு எந்தவொரு உணவையும் அளவுடன் உண்பதே உடலுக்கு மருந்தாகும் எனக்கூறியும் வாழ்ந்து காட்டியவர்.

இத்தகைய வழிகாட்டியான எமது சிறிய தந்தையார் காட்டிய வழி நடப்பதில் நாங்கள் பெருமையடைகின்றோம். அவர்களது ஆத்மா சாந்தியடைய எல்லாவல்ல நயினை நாகபூஷணி அம்மை பாதத்தைப் போற்றுகின்றேன்.

ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி

**கலாநிதி கதிர்காமலிங்கம் சோமசுந்தரேஸ்வரன்**
பேராசிரியர்
**DR.Soma Kathirgamalingam**
**B.Sc(Hons) Eng m.Eng Phd, F.Eng**
**MIE(SL) miEAust M.ASCE**
**Lecturer In Tranport Engineering**
**Facutly of Engineering and Surreying**
**Toowoomba QUEENSLAND 4350**
**AUSTRALIA**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகனின் சிலஎண்ணப்பகிர்வுகள்

"தாயிற் சிறந்த கோயிலும் இல்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்பார்கள். தந்தையிடம் தாயின் தயாளம் கண்டவர் குறைவு. வரம் பெற்றுவந்தவர்க்கே கிடைக்கும் அந்த அடைவ ஆண்டவனால் எனக்கு அருளப்பட்டது. தந்தை என்றால் என்ன என்ற கேள்விக்கு தந்தை என்றால் எல்லாம் என்ற கருத்துப்பட வாழ்ந்தவர் எனது அப்பா. "எண்ணியது எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர் திண்ணியாகப் பெறின்" என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய வாழ்ந்துகாட்டியவர் திருவாளர் சரவணபவன் அவர்கள்.

ஒரு வறுமையான குடும்பத்தில் பிறந்து மிகக்குறைந்த வசதிகளுடன் கற்று, தன்னுடன் பிறந்த அனைவருக்கும் மற்றும் உறவினருக்கும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவு உதவிகள் புரிந்து குலத்தொழிலும், செய்தொழிலும் சிறந்து விளங்கி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய நபராக விளங்கியவர் தனது தந்தை.

சங்ககால விருந்தோம்பல் முறையில் சர்வ சாதாரணமாக நடைமுறைப்படுத்தினார். சாதிய மேல்நிலைவாதத்துக்கு அப்பாற்பட்டு ஊர்பிறந்த எவரும் சங்கடமின்றி வந்துதங்கி இளைப்பாறி உணவுண்டு செல்லும் ஒரு சத்திரமாக தனது இல்லத்தை தனது நினைவு தெளிவாக இருக்கும் காலம் வரை செயற்படுத்தினார். கணவனே கண்ட தெய்வம் என்ற நினைப்பினை எனது தாயின் மனதில் இன்று வரை மங்காத பிரகாசத்துடன் பேணிவந்திருக்கிறார்.

"சொல்லுதல் யார்க்கும் எளிதாம். அரிதாம் சொல்லிய வண்ணம் செயல்" கடினஉழைப்பு, நேரம் தவறாமை, கடமை உணர்ச்சி, கண்டிப்பு, கல்வி போன்ற தலைப்புக்களைக் கருதுமிடத்து எனது தந்தையின் வாழ்க்கையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக்கொள்ள ஆயிரம் விடயங்கள் உண்டு. "Be Brilliant in Basics" என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். அதாவது, எமது அடிப்படை அறிவு பிரகாசமாக இருக்குமிடத்துதொழில் ரீதியான வெற்றி நிச்சயம் என்ற கருதுகோளுக்கமைய, பலசோதிட நூல்களின் செய்யுள்கள் அவருக்கு மனப்பாடம். அதனை அவர் சொல்லக்கேட்டு அவற்றுள் சில எனக்கும் மனப்பாடமானது. இதுதான் அவர் ஜப்பான் நாட்டிலும் தனது சோதிடத் தொழிலை விஸ்தரிப்பதற்கான காரணமாக அமைந்தது.

"நோய் நாடிநோய் முதல் நாடி அது தீர்க்கும் வாய் வாய்ப்பச் செயல்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கமைய நடைப்பயிற்சியினாலும், நடைமுறைகளினாலும் சலரோகநோயை அதன் தாக்கங்களிலிருந்து தப்பி அறுபது வருடகாலமாக முகாமை செய்தவர்.

பாடப்பரப்பை தாண்டிய கற்றலே ஒரு மனிதனை முழுமைப்படுத்தும் என்ற கருத்தினை தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள முகாமைத்துவக் கருத்துக்கள் மூலம் விபரிப்பார். உதாரணமாக உயர்ந்த இடத்திலிருப்பவரிடம் உதவி பெறுவதற்கான தொடர்பாடல் முறைமையினை கம்பராமாயணத்திலிருந்து ஒரு பாடல் மூலம் எடுத்து விளக்குவார். இதற்காக விஸ்வாமித்திரர் தசரதமன்னரிடம் இராமனையும் இலக்குமணனையும் அரக்கர்களை அழிக்க கேட்பதற்கு பின்வரும் பாடலை கம்பர் நாட்டாளார் பாடியிருப்பார். அப்பாடலை எனக்கு விளக்கி தொடர்பாடல் திறனை என்னுள் வளர்ப்பதற்கு முயற்சி செய்வார். அப்பாடல் பின்வருமாறு :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் அனைய முனிவரும் இமையவரும் இடையூறு ஒன்று
உடையரானால்.
பல் நகமும் நகு வெள்ளிப் பனிவரையும். பாற்கடலும்.
பதுமபீடத்து
அந்நகரும், கற்பகநாட்டு அணிநகரும் மணிமாட அயோத்தி
என்னும்
பொன்நகரும். அல்லாது, புகல்உண்டோ? இகல்கடந்த
புலவுவேலோய்!"

பாலகாண்டம்

கையடைப்படலம்

ஒருவரிடம் ஒரு உதவியைக் கேட்பதற்கு முன்னர் அவரை உளரீதியாக எப்படித் தயார் செய்வது என்று இந்த செய்யுள் அழகாக விளக்கியிருக்கும். இதேபோல தனது கருத்துகளுக்கு உடன்படாது எதிர்ப்புத் தெரிவிக்கும் போது கூட பின்வரும் பாடல் மூலம் தனது கோபத்தை வெளிப்படுத்துவார்.

"சொல் ஒக்கும் கடிய வேகச்சுடுசரம். கரியசெம்மல்,
அல் ஒக்கும் நிறத்தினாள் மேல்விடுதலும். வயிரக்குன்றக்
கல் ஒக்கும் நெஞ்சில் தங்காது, அப்புறம் கழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்னபொருள் என. போயிற்றுஅன்றே!

பாலகாண்டம்

தாடகைவதைப்படலம்

தனது நல்லறிவுரையை உணர சக்தியற்ற கல்லாபுல்லன் என்று உரிமையோடு சாடுமுவார். தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல் எனும் குறளை அடிக்கடி கூறி எனது வாழ்க்கைப் பாதையின் கடினங்களை தனது கண்ணீரால் கலங்கடித்தார். நான் எனது வாழ்க்கையில் கடந்த வெற்றிகளின் பின்னால் இருந்த பெரிய பிரமாண்டம் அவர். அவர் மரணிக்கும் வரை சிறுவனாக இருந்த நான் இன்று ஓரோநாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியவனாகிவிட்டேன். வார்த்தைகளால் அவர் வாழ்க்கையை அளக்கும் அறிவும் அருகதையும் எனக்கு இல்லை. ஒரு மகனுக்கு தந்தைதான் முதல் நாயகன்

(Hero) என்று சொல்டவார்கள் 45 வருடங்களுக்குப் பின் திரும்பிப் பார்க்கின்றேன். இன்று வரை அவர் தான் கடைசி நாயகன்.

"ஆயிரம் உறவில் பெருமைகள் இல்லை அன்னை தந்தையே அன்பின் எல்லை."

"வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு."

**எந்திரி.ஐ.ச.கௌரிபாலன்**
**(Bsc.Eng Civil, PGD Geotechnical, MIE, CEng, MELGS, MISSMGE, MA, MPA)**
**Provincial Engineer Department of Local Government,**
**Project Engineer (NELSIP) Eastern Province, Project Engineer (Rural Bridges Project) Eastern Province,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத மாமனிதர்

பற்றி வட்டம் திடல் நாகர்பூமி ஸ்ரீமான் சோதிடமாமணி ஐயாத்துரை என்றால் அறியாதவர் இல்லை. இவரின் ஆண்பிள்ளைகளில் ஒருவர் தான் அமரர் ஆசிரியமணி சரவணபவன். "தந்தை எவ்வழி மைந்தர் அவ்வழி" என்பதற்கமைய சோதிடத்துறையிலும் மனையடி சாத்திரத் துறையிலும் ஒப்பாரும் மிக்காருமாகத் திகழ்ந்தவர். யாழ் குடாநாட்டில் மட்டும் அல்ல, இலங்கையின் பல பாகங்களிலும் நன்கு அறியப்பட்ட ஒருவர் என்றால் மிகையாகாது. அவையில் ஒரு நிகழ்வில் பங்குபற்றினார் என்றால், அந்த அவையை ஒரு கலையரங்காக மாற்றி விடுவார். இதனை எவரும் மறுக்காவோ, மறக்கவோ முடியாது. இவரின் இறுதி யாத்திரையின் போது இரங்கல் உரை ஆற்றிய பெருமக்கள் அறுபத்து நான்கு கலைகளுக்கும் ஒரு அமைவிடமாக இருந்தவர் அமரர் என்று குறிப்பிட்டார்கள் உண்மையும் தான்.

எமக்கு கல்வி புகட்டிய காலங்களில், தவறுவிட்டால் பிரம்பினால் ஒரு அடி போடுவார். அந்த அடி வாங்கியவர்களில் நானும் ஒருவன். சிறிது நேரத்தின் பின் பாடம் முடியும் போது கூறுவார் நான் அடித்த அடிகள் எதிர்காலத்தில் நீங்கள் நல்ல நிலைக்கு வருவதற்கான முதற்படிக்கட்டு என எம்மைத் தேற்றுவார். அவரின் கூற்று நிதர்சனமானதை, தான் கலந்து கொள்ளும் மேடைகளில் அரச சேவையில் இருந்த எம் போன்றவர்களை குறிப்பிட்டு பேசுவார். 1959ம் ஆண்டு நடந்த ஒரு பொதுச்சேவைப் பரீட்சையில் நயினாதீவில் இருந்து நாங்கள் சுமார் 16 பேர் சித்தியடைந்தோம். அமரர் அளவற்ற சந்தோசம் அடைந்தார்.

நான் வேலணைப் பிரதேச செயலகத்தில் உதவி அரச அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது ஒருநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பழைய நினைவுகள்



சகோதரங்களுடன்



தந்தையாருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சொந்த அலுவலுக்காக அமரர் வந்தார். அப்போது எனது பணியாக பிரதம லிகிதர் என்னுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அவ்வேளை எனது பணியக சிற்றூழியர் வந்து பெரியவர் ஒருவர் வந்திருக்கின்றார் என்றார். உள்ளே வரும்படி கூறினேன். கதவைத்திறந்து கொண்டு வந்தவரைக் கண்டதும் எனது இருக்கையில் இருந்து எழுந்து கரம் கூப்பி வரவேற்றேன். இருங்கள் என்று இருக்கையைக் காட்டினேன். அமர்ந்து கொண்டார். நான் நின்றபடியே உரையாடினேன். மாமா மருகர் வீட்டில். இப்போ நீங்கள் அதிகாரி. நான் ஒரு பிரதேசவாசி என்று கூறி தான் வந்த விடயத்தைக் கூறினார். இது அவரின் பெருந்தன்மையினைப் புலப்படுத்தகின்றது. எம்மால் மெய்ப்பிக்கப்பட்டது.

எங்களின் கல்வித்தரமும் உயர் பதவிகளும் கிடைத்ததைக்கண்டு உளமார ஆசீர்வதித்த ஒரு மாமனிதர், எந்த சபையாக இருந்தாலும் எம்மை உறவு முறையில் அழைத்து மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் தன்னுள் ஒரு ஆத்ம திருப்தி அடைவார். தமிழ் கூறும் சமூகத்தில் மட்டுமல்ல, மற்றைய சமூக மக்களிடத்தும் தனக்கொரு இடத்தை வகித்தவர் மாமா என்றால் மிகையாகாது. மும்மொழி ஆற்றல், துடிப்பான பேச்சு, அன்பான அரவணைப்பு இம்மூன்றும் இவருக்கு கிடைத்த ஒரு இழப்பாகும். என் செய்வது இயற்கை நியதியை வெல்ல முடியாது.

**"நெருநெல் உள ஒருவன் இன்றில்லை எனும்**
**பெருமையுடைத்து இவ்வுலகு"**

**ஆ.தியாகராசா**
தலைவர்
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறப்பை சரித்திரமாக்கிவிட்ட அனைத்திலங்கை சோதிட கலாநிதி ஐயாத்துரை சரவணபவன் அவர்களின் மறைவு**

பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது கருடா செளக்கியமா? இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் செளக்கியமே கருடன் சொன்னது. பரமசிவன் கழுத்தில் சுற்றி பாம்பு இருந்து பாதுகாப்பை அரணாக வைத்து கருடனைப் பார்த்து பாம்பு கேட்டது கருடா செளக்கியமா பரமசிவன் கழுத்தை சுற்றி காரணத்தால் கருடனைப் பார்த்து அச்சமின்றி பாம்பு கருடனை நோக்கி கருடா செளக்கியமா என்று கேட்கத் தூண்டியது பரமசிவன் கழுத்தைப் பாம்பு சுற்றிக் கொண்டதனால் தான். இக் கேள்வியை பாம்பால் கேட்க முடிந்தது. படிப்பு பட்டம் பதவி என்பது பாம்பு. படிப்பு பட்டம் பதவி முற்றிலும் தகுதியான மனிதனை சென்றடையும் பொழுது படிப்பு பட்டம் பதவி அதி உயர்ந்த தனித்துவமான உச்ச நிலையை அடைகின்றது. தூய ஒழுக்கநெறி அறிவு ஆத்மீகம் சமூகசேவை அனைத்தும் ஒன்றிய ஒரு மனிதனை படிப்பு பட்டம் பதவி சென்றடைகின்ற பொழுது பூரணத்துவமான மனிதனை வைத்து பதவி மேலோங்கி நிற்கின்றது. பூரணத்துவமான ஒரு மனிதனை பதவி சென்றடைகின்ற பொழுது உச்ச நிலையை அடைகின்றது. மாதா, பிதா, குரு (நல்லாசிரியன்) குருவே சிவம் எனக் கூறினார் நந்தி என்கின்றார் திருமூலர். எனவே எழுத்தறிவித்தவன் இறைவன் என்பது தமிழ் மூதாட்டி ஔவை தந்த அமுத வாசகம். நல்லொழுக்கம் நிறைந்த புரணத்துவமான மனிதனை ஆசிரியர் குரு என்ற பதவி சென்றடைகின்ற பொழுது அவர் இறைவனாகின்றார். எழுத்தறிவித்த இறைவனாகவும் குருவே சிவனாக திருமூலர் திருமந்திரம் எடுத்துரைப்பதால் நல்லாசிரியர்களின் மகத்துவமான பணி அனைத்துப் பதவிகளையும் விட நிகரில்லாத உச்ச நிலையை எய்தி நிற்கின்றது. அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய ஒருவர்தான் சோதிட கலாநிதி ஐயாத்துரை சரவணபவன் அவர்கள்.

சோதிடக் கலை இந்துமத தத்துவத்தோடு ஒன்றியது. மலரும் மணமும்(வாசனை) ஒன்றியவை மலரையும் வாசனையையும் பிரிக்க முடியாதோ அதே போன்று இந்து மதமும் சோதிடமும் பிரிக்க முடியாதவை. இந்து மதத்தில் ஒன்றியது சோதிடம். எனவே சோதிடக்கலையும் இந்து மதத்தின் தத்துவத்தை தன்னகத்தே கொண்டு ஆசிரியர் ஆகவும் ஆசிரியர் ஆலோசகராகவும் அதிபராகவும் பணி ஆற்றி ஓய்வாகி ஆன்மீகம் சோதிடம் இரண்டையும் ஆய்வு செய்து அதில் மூழ்கிய நிலையில் 2015.07.19ம் திகதி ஞாயிறு முற்பகல் நயினை நாகபூஷணி அம்பாளின் திருப்பாதங்களில் ஒன்றிய சோதிட கலாநிதி ஐயாத்துரை சரவணபவன் அவர்களின் சேவை மேல் சொன்ன அனைத்து கருத்துகளிற்கும் உதாரணமான குருவாக திகழ்ந்தார். என்பது தான் உண்மை. ஆசிரிய சேவையும், சோதிட ஆய்வும் சோதிடர்களும் சோதிட கலாநிதி ஐயாத்துரை சரவணபவனால் பெருமை பெற்றனர். சேரிடம் அறிந்து சேர் என்பது போல அமரர் அவர்களிடம் ஒன்றிய பதவிகளும் பரமசிவன் கழுத்தை சுற்றிய பாம்புபோல அனைத்திலங்கை சோதிட கலாநிதி ஐயாத்துரை சரவணபவனால் அதி உன்னத நிலையை பட்டம் பதவி பெற்று நிற்கின்றது. அமரர் அவர்களால் பட்டங்கள் வழங்கப்பட்டு சாக்கடைநீராக அப்பட்டங்கள் மதிப்பிழந்த நிற்கின்ற இன்றைய நிலையில் அமரர் அவர்கள் போன்றவர்களால் அப்பட்டங்களுக்கு பெருமை மகத்துவம் கிடைத்திருக்கின்றது.

தாரமும் குருவும் தலை எழுத்துப்படி அமையும் என்றவாறு அமரர் அவர்களுக்குக் குருவாக வாய்த்தவர். இவரது தந்தையார் சுந்தரன் ஐயாத்துரை இவர்கள் இவரிடம் ஒரு தனித்துவமான தெய்வீக ஞானமும் சோதிடத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிய அருள் வாக்காக சிலருக்கு செல்கின்ற அருள் திறனும் இவரிடம் குடிகொண்டு இருந்த காரணத்தால் நயினாதீவு மக்கள் சாத்திரியார் என்றே அழைத்து வந்தனர். சோதிட கலாநிதி சுந்தரன் ஐயாத்துரை என்ற பெயர் மருவி நயினாதீவுச் சாத்திரியார் என்ற பெயர் அன்று யாழ்குடா நாடு வன்னிவரை பரவி இவருக்கு புகழ் சேர்த்தன. நயினாதீவு மக்களின் குலம் கோத்திரம் காணித்தோம்புகள் பற்றிய விபரங்கள் இவரிடம் பொதிந்து கிடந்தன. எனக்கு பெரிய தந்தையாராக இருந்து குறிப்பொழுதி பெயர் வைத்து "பெற்றதாயும் பிறந்தபொன்னாடும் நற்றவ வானில் நனி சிறந்தனவே" என்ற உணர்வையும் ஆன்மீக நாட்டத்தையும் எனக்கு ஊட்டிய பெரிய தந்தையார் பெருந்தகை, குரு அனைத்துமாய் நின்று எனக்கு அருள் வழிகாட்டிய சற்குரு. நயினாதீவில் உள்ள பலருக்கு அன்று சொந்தம் பெயரை விட பட்டப் பெயர் தான் பேச்சு வழக்காக இருந்தது. அந்தப் பட்டப் பெயர்கள் ஒவ்வொருவருக்கும் பொருத்தமான பெயர்களாக இருந்தது. அந்தப் பட்டப் பெயர்களை அவர்களுக்கு சூட்டியவர் சாஸ்திரியார் என்று அன்றைய முதியவர்கள் சொல்வார்கள் அவர்களில் பலர் இன்றில்லை ஆயினும் பட்டப் பெயர் நிலவி வருகின்றது. பட்டப் பெயர் சொன்னால் தான் அவர்களை அறியமுடியும்.

அமரர் அண்ணா சரவணபவன் அவர்கள் நயினாதீவு 5ம் வட்டாரம் பற்றி வட்டம்திடல் என்ற சுற்று வட்டத்தில் கூட்டுக்குடும்பமாய் வாழ்ந்தவர்கள் பூர்வீகக்குடிகள் என்ற பெருமைக்கு வலு சேர்த்து வாழ்ந்த வழித் தோன்றல்களில் முதல் வழிகாட்டியாக கல்விப்புலத்தில் கால்பதித்து அரசபணிக்கு முதல் வழிகாட்டியாக வழிகாட்டியவர்கள் அவர்கள் இன்று நூற்றுக் கணக்கானவர்கள் குடும்ப உறவுகள் அரச உயர் பதவி வரை வகிக்கின்றனர். ஆனால் முதல் வழிகாட்டி என்ற பெருமைக்குரியவர்கள் அமரர் அண்ணா சரவணபவன் அவர்கள் என்பது தான் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே என்ற திருமூலர் வாக்கிற்கமைய என்னை ஆன்மீகத்துறையில் நாட்டமுற வைத்தவர்கள் அமரர் அண்ணா அவர்கள்தான். 1956ம் ஆண்டு அண்ணா அவர்கள் கம்பளை தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராகப் பணி ஆற்றிய காலம் அண்ணா அமரர் ஐயாத்துரை கதிர்காமலிங்கம் அவர்கள் கம்பளையை அண்டிய டாட்றிதோட்டப் பாடசாலை ஆசிரியராகப் பணி ஆற்றினார். நான் படித்துக் கொண்டிருக்கும் பொழுது கம்பளைக்கு அமரர் அண்ணா சரவணபவன் அவர்கள் என்னை அழைத்துச் சென்றார் மூவரும் டாட்றி தோட்டப் பாடசாலையில் இருந்தோம். 1956ம் ஆண்டு தனிச்சிங்களச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறிய நாள் அன்று ஆலயங்களில் உண்ணாவிரதமும் பிரார்த்தனையும் நடைபெற்றது. கம்பளை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற உண்ணாவிரத பிரார்த்தனையில் பெரிய அண்ணா அமரர் கதிர்காமலிங்கம், அமரர் சரவணபவன் அவர்களுடன் நானும் கலந்து கொண்டோம். நூற்றுக்கணக்கானவர்கள் பங்கு பற்றிய நிகழ்வு பிரார்த்தனையில் தேவாரம் படிக்க எவரும் இல்லை. உடனே என்னை "நாம்யார்க்கும் குடி அல்லோம்" என்ற அப்பர் அடிகளின் திருத்தாண்டகத்தைப்பாடி மற்றும் தேவாரங்களை படி என்று சொன்னார் அன்று தான் வாழ்வில் ஒலிவாங்கி முன் முதல் முதலாக நூற்றுக்கணக்கானவர்கள் மத்தியில் இனப்பிரச்சனைக்கு கால்கோள் வைத்த நாளில் சிங்கள நாட்டில் தேவாரம் பாடவைத்து ஆன்மீக பஜனைத்துறையில் ஈடுபடுத்தியவர்கள் அமரர்களான அரு அண்ணாக்கள் என்பதை மறக்க முடியுமா? அன்று கொழும்பு காலி முகத்திடலில் நடந்த சத்தியாக்கிரகம் காடையர்களால் குழப்பப்பட்டு அமரர்.அ.அமிர்தலிங்கம் இரத்தக்காயத்துடன் பாராளுமன்றம் சென்றார். ஆசிரியராய் சோதிடராய் ஆன்மீகவாதியாய் தமிழ் இனப்பற்றாளராய் திகழ்ந்தார் அமரர் சரவணபவன். என்பதற்கு சான்றான நிகழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால் சிறப்பு ஒரு சரித்திரமாக இருக்கவேண்டும். என்று சொன்னவர் மெய்ஞானியாகவும் விஞ்ஞானியுமாக திகழ்ந்த முன்னாள் இந்திய ஜனாதிபதி அமரர் அப்துல்கலாம் அவர்கள் சொன்னவாறு அமரர் ஐயாத்துரை சரவணபவன் அனைத்து இலங்கை சோதிட கலாநிதி அவர்களின் இறப்பு சோதிட ஆய்வாளருக்கு கல்வித்துறையில் கால் பதித்தவர்களுக்கு வரலாற்று ஆய்வாளருக்கு சரித்திரமாக அமைந்துவிட்டது.

கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம் என்பன அமரர் அவர்கள் தினமும் ஓதுகின்ற பாடல்கள்

மைவரும் கண்டத்தார் மைந்தா கந்தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவரும் தொண்டன்றி மற்றறியேன் கற்றகல்வியும் போய்
பைவரும் கேளும் பதியும் கதறப் பழகி நிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே

என்ற கந்தர் அலங்காரப் பாடலுக்கு அமைய கந்தன் திருவடிகளில் அவரின் ஆன்மா "ஆன்மா அழியாது" என்று சிவயோக சுவதமிகள் சொன்னவாறு கந்தன் திருவடிகளில் சரணாகதி அடைந்து விட்டது.

"முற்றுமாய் நிறைந்த பூரணானந்த முத்தி தா நாகபூஷணியே" என்று நயினைச் சித்தர் முத்துக்குமாரசுவாமிகள் நயினை நாகபூஷணித்தாயை வேண்டியவாறு அம்பாள் திருவடிகளை இறைஞ்சிப் பிரார்த்திப்போமாக.

ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி

**நயினை நாகமணி கோபாலகிருஷ்ணன் ஜே.பி**
**தலைவர்**
**சப்த தீவக திவ்ய ஜீவனசங்க சமாசம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனைவியுடன்



பேரப்பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்னர் சேதுபதியின் ஆஸ்தான பரம்பரையில் வந்துதித்த சோதிட கலாநிதி நயினை ஐயாத்துரை சரவணபவன்**

ஞாலத்தின் அருள் முகமாய் விளங்குவது நயினையம்பதி நயினையம்பதி கடந்த 500 வருடங்கட்கு முன்னதாக இராமநாதபுரம், சேதுபதி மன்னர் ஆட்சியின் கீழ் இருந்த காலத்தில் இப்பதியின் பரிபாலனமும் அம்பாள் ஆலய தொடர்புகளும், இம்மன்னன் உடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. மன்னர் சமஸ்தானத்தின் சோதிட விற்பன்னராக விளங்கியவர்களில் சுந்தரரின் கொள்ளுப் பூட்டனாரும் விளங்கியுள்ளார். இவ்வழி வந்தவர்களில் சோதிட கலாநிதி சுந்தரரும் அவர் தம் மகனார் சோதிட தரிசனம் ஐயாத்துரையும் முக்கியமானவர்கள் இவர்களிருவரம் நினைத்த மாத்திரத்தில் இராமநாதபுரத்தில் வாழ்ந்த மன்னர் சமஸ்தான வழி வந்த கணித சோதிட நிபுணர்களுடன் உரையாடி வந்த செய்திகளை அமரர் ஐயாத்துரை அவர்கள் நூலாக்கி வைத்திருந்தார். அந்நூல் கைக்கு எட்டவில்லை இருந்தும் இவர்களது சோதிட ஆட்சி மிகமிக நீண்ட பரம்பரை தொடர்பு என்பது உண்மை இவர்களுடன் நயினை பூசகர்களாக இருந்த பட்டர் மரபினர் நெருங்கியவர்களாக இருந்துள்ளனர். ஐயாத்துரை சோதிடர் எழுதிய நூலில் இக்குறிப்புக்கள் மிக வரிவாக காணப்படுகின்றது. நயினை அம்பாள் வரலாற்றுடன் அவர் வெளியிட்ட மூன்று நூல்களில் பட்டர் மரபு, சேதுமன்னன் தொடர்பு, சோதிட அறிவு பற்றி தொடர்பு தெளிவாக தரப்பட்டிந்தது.

இந்த வகையில் கடந்த நூற்றாண்டுக்கு முன்னதாக நயினையில் வாழ்ந்த சோதிட தரிசனம் சுந்தரர் ஐயாத்துரை தர்மபத்தினி கமலாம்பாள் இல்லற கனிகளாக மூத்த புதல்வி நல்லம்மாளுடன் அம்பிகாபதி, கதிர்காமலிங்கம், சரவணபவன், சுந்தரலிங்கம் என்ற ஐந்த புதல்வர்களில் நான்காவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரராக சரவணபவன் ஒளர்வதைக் காணலாம். தலைசிறந்த முருக பத்தரான சரவணபவன் தமிழ், வரலாறு, கணிதம், புவியியல், அரசியல், சமூகவியல் போன்ற பாடங்களில் தேர்ச்சி மிக்க ஆசானாக, சைவாசிரியனாக பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் பயின்று வெளியேறினார். இக்காலத்தில் தமது தந்தையிடம் காணப்பட்ட அரிய பல நுட்பங்களை சோதிடத்தில் அறிந்ததுடன் அவர் வசமிருந்த பெறுமதி மிக்க சோதிட நூற் சுவடிகளையும் பெற்று இளமைக்காலத்திலேயே தலைசிறந்த சோதிட நுட்ப அறிவிப்பாளராக தன்னை வெளிப்படுத்தினார். கௌரவ திருமதி. ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா தேர்தல் களத்தில் நின்ற காலத்தில் எல்லாம் அக்கட்சியின் நாடியை துல்லியமாக சுட்டி உரைக்கும் சோதிட சிம்மமாக சரவணபவன் விளங்கினார். இதனால் உந்தப் பெற்ற கௌரவ கல்வி அமைச்சர் அல்காஜ் பதியுதீன் மொகமட் இவரை கம்பளை சாகிரா கல்லூரியின் சிறப்பு நிலை தமிழ் ஆசானாக நியமித்தார். கல்வி அமைச்சர் மிகுந்த மரியாதையுடன் இவரை தனது சோதிட குருவாக ஏற்று தாம் சார்ந்த அரச அறிஞர்களுக்கெல்லாம் இவரை அறிமுகம் செய்தார். இவரின் வாக்கின் உயர்வால் சோதிட அதிரடி செய்திகளால் சோதிட வானில் ஐ.ச முதன்நிலை பெற்றார்.

நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் அரசியலறிஞர்கள் செல்வந்தர்கள் இவர் இல்லம் தேடி படை எடுத்த காலம் ஒன்று இருந்தது. இவரது கல்வியைப் பெற்ற பல மாணவர்கள் பல்கலைக்கழகம் புகுந்து சிறப்பு பட்டதாரிகளாகி அமைச்சுகளிலும், கல்வி பாடவிதான பிரிவுகளிலும் கலாசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இன்றும் பணி புரிகின்றனர். இலங்கையின் பல பாகங்களிலும் தமது ஆசிரியப் பணிகளாலும், சோதிடப் புலமையாலும் புகழை நிலை நிறுத்தியுள்ள இப் பெருமகனார் நயினை மகாவித்தியாலயத்திலும் 1962 - 1966 வரை மூத்த ஆசானாக பணிபுரிந்துள்ளார். மேலும் பிற்காலத்தில் கொக்குவில் ஞான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டித வித். மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி. கொக்குவில் ஸ்ரீ நாமகள் வித்தியாசாலை என்பவற்றில் சிறப்பாக பணி புரிந்து ஓய்வு பெற்றவர்.

இன்று உலகில் ஐரோப்பிய நாடுகளில் வாழும் பெரும்பாலான தமிழ் மக்களின் வாழ்க்கை குறிப்பை (சாதகத்தை வாழ்வியலை மிகமிக துல்லியமாக கணித்து வழங்கிய சோதிட மாமேதை ஆவார். பல சோதிடர்களது ஆசானாக வழிகாட்டியோன். சோதிடத்தில் எக் கருத்தையும் இது நடக்கும்) இது நடக்காது எனத் துணிந்து அறுதியிட்டு எழுதி ஒப்பமிட்டு தரக்கூடிய ஒப்பற்ற கணித நிபுணர் இவர் கரத்தால் சுமார் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களினது சோதிடகணிப்பை வரைவு செய்துள்ளார். இவ்வாறான அமரர் ஐயாத்துரை சரவணபவன் அவர்களின் ஆத்மா குகன் பாதம் இடைந்து இன்புற்றிருக்க பிராத்திப்போமாக.

**கலாநிதி நத.வி.மு.நவரத்தினம்**
**மூத்த போராசான் / மேனாள் தலைவர்**
**இராமநாதன் நுண்கலைப்பீடம்**
**யாழ்ப்பல்கலைக்கழகம்**
**இலங்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தக ஆசான்

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதுகளின் முற்பகுதியிற்தான் வர்த்தக பாடங்கள் கல்விக் கலைத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு க.பொ.த(உ/த) வரை கொண்டு செல்லப்பட்டது. கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் வர்த்த பாடம் க.பொ.த(உ/த)இல் அறிமுகப்படுத்தப்பட்டது. அக்காலப் பகுதியில் வர்த்தகக்கல்வி ஆசிரியர்களுக்கு பற்றாக்குறையிருந்தது. கொக்குவில் இந்து இதற்கு விதி விலக்கல்ல இக்குறையினை நீக்கி வைத்தவர் அமரர்.சரவணபவன் ஆசிரியர் அவர்கள். அவர் கொக்குவில் இந்துவில் வணிகத்துறை ஆசிரியராக செயற்பட்டு கல்லூரியில் அத்துறையின் வளர்ச்சியில் தடம் பதித்தவர். அதன் பேறாகவே இன்று இக்கல்லூரி வர்த்தகத்துறையில் முன்னணி வகிக்கின்றது.

அமரர்.சரவணபவன் அவர்கள் சிறந்த வர்த்தக ஆசிரியர் பிள்ளைகளுக்கு அலுப்பு ஏற்படாதவகையில் கற்பிக்கவல்லவர். மொழி ஆற்றல் மிக்கவர் வகுப்பினை கலகலப்பாக வைத்திருப்பவர். பிள்ளைகளுடன் நல்லுறவினைப் பேணவல்லவர். சக ஆசிரியர்களுடனும் கலகலப்பாக பேசி ஆரோக்கியமான சூழலை உருவாக்க வல்லவர். அவரின் பேச்சினை கேட்பதற்கு ஆசிரியர் அறையில் ஒரு கூட்டமே சேர்ந்து விடும். தனது பேச்சு வன்மையால் பிறரைக்கவரும் தன்மையுள்ளவர்.

அமரர் அவர்கள் தன்திறமையினால் முன்னேறி அதிபர் பதவியில் பல பாடசாலைகளை அலங்கரித்தவர். அவர் ஒரு சோதிட விற்பன்னர். என்பதனை பலரும் அறிந்திருப்பர். இவ்வகையாக அறிவாக்கல் மிக்க ஒருவரின் இழப்பு முழுச்சமுதாயத்தையுமே பாதிக்கின்றது. அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அ.பஞ்சலிங்கம்**
**முன்னாள் அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதிட கலைமாமணி

நயினாதீவைச் சேர்ந்த புகழ் பூத்த சோதிடகலைமாமணி, சோதிட கலாநிதி ஐயாத்துரை சரவணபவன் அவர்கள் அமரத்துவமடைந்த செய்தி எமக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் சோதிடக்கலையில் சிகரத்தைத் தொட்டவர்களுள் ஒருவராக விளங்கிய சிறப்பு இவருக்குண்டு. சோதிடம் இவருக்கும் பரம்பரைச் சொத்தாக வந்தது. இவரது தந்தையார் சோதிட விற்பன்னராக விளங்கினார்.

இலங்கையில் புகழ்பூத்து விளங்கியபலர் இவரிடம் அடிக்கடி சோதிடம் கேட்க வந்ததாக பலதடவை கூறக் கேட்டுள்ளோம். புலம்பெயர் மக்கள் பலரும் இவரிடம் சோதிடம் கேட்டுப் பயன் பெற்றனர்.

ஒருவரின் சாதகத்தை மிகவும் துல்லியமாகக் கணித்து பயன் சொல்லும் அறிவு இவரிடம் காணப்பட்டது. அமரர் அவர்கள் இறுதிவரை நல்ல ஞாபக சத்தியுடன் வாழ்ந்து ஆசிரிய பணியாகவும் அதிபர் பணியாகவும் பல பாடசாலைகளில் கல்வி பணி புரிந்து பலரது பாராட்டுக்களையும் பெற்றவர். தனது பிள்ளைகளைப் பெருமையுடன் வளர்த்தவர். "தக்கார் தகவிலர் என்பது அவர்தம் எச்சத்தால் காணப்படும்" என்பதற்கேற்ப இவரின் அன்பு மகன் ந.கௌரிபாலன் இன்று கிழக்கு மாகாண சபையில் மாகாணப் பொறியியலாளராக பலரும் மெச்சத்தக்க வகையில் பணிபுரிந்து வருகின்றார்.

மனித வாழ்வு நிலையற்றது. நேற்று இருந்தவன் இன்றில்லை என்ற நிலையாமைக் கோட்பாட்டையே திருவள்ளுவர்.

"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

என்று குறிப்பிடுகின்றார்.

ஆயிரம் பிறைகண்ட பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய எங்கள் அன்பு மாமாவின் ஆத்மா சாந்தி பெற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பாதாரவிந்தங்களைப் பணிகின்றோம்.

**பேராசிரியர்.மா.வேதநாதன்,**
**தலைவர், இந்துநாகரிகத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்க்கதரசி, சோதிட கலாநிதி.நல்லாசான் ஐ.சரவணபவன்

[12.09.1928 - 19.05.2015]


**பேராசிரியர்.கலாநிதி.கனகசபாபதி நாகேஸ்வரன்**
**தமிழ்ப் பேராசிரியர்,மொழித்துறை,**
**சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிகுல்லோயா.**


எனது கல்வி வளர்ச்சி வரலாற்றிலே ஆரம்ப, இடைநிலைக் கல்வியைப் போதித்த நல்லாசான் தீர்க்கதரிசி, சோதிடகலாநிதி ஐயாத்துரை சரவணபவன் அவர்கள் ஒரு ஞானச் செல்வர். ஆசிரியராகவும், உப அதிபராகவும் கடமையாற்றிய பெருந்தகை. இப்பேராசான் நயினாதீவு 5ஆம் வட்டாரத்தில் ஸ்ரீமான் ஐயாததுரை கமலாம்பாள் தம்பதிக்கு 1928.09.12இல் மகனாகப் பிறந்தார். இவரது தந்தையார் ஐயாத்துரை அவர்கள் மிகப்புகழ்பெற்ற சோதிட விற்பன்னராவார். சரவணவாத்தியார் என்று தான் எமது ஆசானை நாங்கள் அழைப்பதுண்டு. ஆரம்பக் கல்வியினை ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் கற்று அப்பாடசாலையிலேயே சீரேஷ்ட தராதரப் பரீட்சையினை நிறைவு செய்தபின் ஆசிரிய தராதரப் பரீட்சையிலும் சித்திபெற்று நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் ஆசிரியராகக் கடமையாற்றி பின் பலாலி ஆசிரியர் கலாசாலையில் வா்த்தகத் தராதரத்தினைப் பெற்று, பல இடங்களிலும் சேவையாற்றி யா:.கொக்குவில் இந்துக் கல்லூரியில் உப அதிபராகவும் கடமையாற்றியவர்.

சரவணவாத்தியார் குடும்பம் சோதிடக்கலையிலே மிக்கபாண்டித்தியமுடையது. வரன்முறையான பட்டப்படிப்புத் துறை சோதிடத்திற்கு இல்லாமையால் சமுதாயத்திலே பெரும் கணிப்புக்குள்ளாகிச் சோதிட கலாநிதி எனும் கௌரவப் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டவர். பெரும் நாவன்மையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற்பன்னமுங் கொண்ட இவரது கம்பீரமான குரல் மாணவர்களையும், அவையினரையுங் கவர்ந்திழுக்கவல்லது. நல்ல சரீர வளங்கொண்ட நல்லாசான். தெளிவுறப் போதனைகள் நிகழ்த்தவல்ல ஆளுமையுடையவர் தருக்க ரீதியாகச் சிந்திப்பவர். தமிழிலே யாப்பமைதியுடன் கவிபாடும் பேராற்றலுடையவர் இலங்கைத் தாய்த்திருநாடு எங்கள் நாடு என்ற உணர்வுடன் நல்ல தமிழ்க்கவிதைகளைப் பாடிய பாவலர் இவர். கணக்குத் துறையிலே அதீத புலமையடைந்தமையால் எவ்விடத்தையும் தர்க்கரீதியிலே அலசிப்பார்க்கும் திறன் கொண்டவர். நிரம்பிய ஞாபகசக்தி கொண்ட ஆசான் ஐ.சரவணபவன் அவர்கள் நல்லமுறையிலே சிந்தித்துக் கட்டுரைகளை எழுதும் திறனுடையவர். இவரது கட்டுரைகளிலே வரலாற்றுச்செய்திகள் அநேகம் இடம்பெறும். தமக்கும், உண்மைக்கும் நீதிக்கும் உகந்தவைகளை உதிர்ப்பதிலே சமர்த்தர், சாமர்த்தியசாலி நயினையிலே வெளியிட்ட மணிபல்லவ கலாமன்றத்தின் முக்கிய பிரசுரங்களில் நயினைபதி நாகபூஷணி அம்மன் ஆலய வெளியீடுகளிலே இவரது ஆக்கங்கள் இடம்பெறுவது காணலாம். இவரெழுதிய வரலாற்றுக் கட்டுரை "கோமுகி" மலரிலே பிரசுரிக்கப்பட்டுள்ளமை காணத்தக்கது. இவ்விடத்திலே அவரது ஆளுமையின் கீழ்க் கல்வி பெறக்கிடைத்த ஒருவாய்ப்பினால் அவரது புலமை, ஆழம், திடம், ஆசிரியத்துவம், உரைவளம், பேச்சுவாண்மை, அகாயாசமான மொழிப்பிரயோகம் தெளிவான உச்சரிப்பு, சொல்விற்பன்னம் என்பன எம்மிடமும் ஒப்புக் கொண்டன. ஆதிக்கஞ் செலுத்தின தாக்கத்தையுண்டு பண்ணின என்பதுண்மை. காந்தம் போன்று மாணாக்கர்களைக் கவர்ந்திழுத்துக் கற்பித்தலிலே வல்லவர். சரவணவாத்தியார். அவரது கோலவுடை வெள்ளை வேட்டி, நஷனல், வெள்ளைச் சால்வை சரவணவாத்தியாரிடம் கற்றவர்களும், அவரைக் கண்டவர்களும் அவரோடு அளவளாவிக் கதைத்தவர்களும் பாக்கியம் பெற்றவர்களோயாவர். ஒவ்வொருவரிடத்திலும் அவரது சாணாக்கியத்திறமை வித்துவம் படிந்திருக்கும் என்பது நிச்சயம். எம் ஆசானின் பாதங்களிலே கண்ணீரஞ்சலிகள் செலுத்துகிறோம்.

**ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வள்ளுவன் வாழ்க்கைநெறிதனில் வையத்துள் வாழ்வாங்கு**

**வாழ்ந்து, வழி காட்டியபெருமகான் இவர்!!!!**

தோன்றிற் புகழொடுதோன்றுகஎனும்
வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க - நல்
உள்ளத்தால் உலகினிற்காய் வாழ்ந்து
வழி காட்டிய பெருமகான் இவர் !!!!!

மனிதனும் தெய்வமாகலாம் எனும்
ஆன்றோர் அருமருந்தன்னஆய்வுக்கமைய
தெய்வீகக்குணங்கள் அத்தனையையும்
தன்னகத்தே இயல்பாய்க் கொண்டு
தரணிதழைக்கவெனவந்தமைந்த
தன்னலமற்றதலைவர் இவர் !!!!

நாமுண்டுநம்பாடுண்டுஎனும்
தன்னலநோக்கத்தைதவிர்த்து
நல்லாசானுமாய் நல்லதிபருமாய் வல்லதொரு
மாணாக்கர் குலத்தைமெல்லனவே
வாழவழி சமைத்த பெருமகனார் இவர் !!!

துன்பங்கள் துயரங்களென வருவோரை
அன்பால் அரவணைத்து ஆறுதல் மொழிபேசி
சோதிடத்திலும் பல்துறையிலும் பெற்றநிபுணத்துவத்தினை
அவரவர் இடர் களையவென இறைவனையும் வேண்டி
கிரகதோசங்களுக்கும் நிவாரணங்கள் கூறி
ஒருநொடியேனும் மற்றவர்க்காய்
தன்னைஅர்ப்பணித்தமகான் இவர்!!!

தக்கார் தகவிலார் என்பது
அவரவர் எச்சத்தாற் காணப்படுமெனும்
குறளுக்கமைய இல்லறம்தனை நல்லறமாக்கி - இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறத்தின் நற்பயனாய் மூவரை
இவ்வுலக ஈடேற்றத்திற்காய் ஈந்தளித்து
'தந்தை மகற்காற்றும் உதவியாம்
வையகத்து முந்தியிருப்பசெயல்'
என்பதற்கமைய புத்திரியை நல்லதிபராக்கி
புத்திரனை மாகாண பொறியியலாளராக்கி
தம் கடன் பணியேயென ஆற்றிய மகான் இவர் !!!!!

பட்டங்கள் பதிவகிளில் உயர்ந்தாலும்
பண்பின் பெட்டகங்களாக அன்பின் சிகரமாக
மனிதாபிமானத்தின் பிதாமாதாவாக
அண்டிவருவோர் அனைவர்க்கும்
ஆறுதலலித்து அடைக்கலம் கொடுப்பதில்
ஆண்டவனின் அசல் வடிவமாக
பல் துறை அறிவுசார் நிபுணர்களுமாகி
'மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்
நோற்றான் கொல் எனும் சொல்' - எனும்
குறட்பா கூறுவது போல
இவர்களைப் போல் நல்லவர்கள் வல்லவர்கள் - இனி
இவ்வுலகுதனில் பிறந்தேவரவேண்டுமென
மற்றார் வாழ்த்தனைப்பெற்று - தம்
தந்தைக்கு புகழ் பூக்களை மாலையாய்த்

மாலையாய் தொடுத்துமலர் அஞ்சலியாக்கி
அவர்களித்த இந்நற்புத்திரர்களையும்
இவ்வுலகிற்காய் விட்டுச் சென்றமாமகான் இவர் !!!!

**"சமூகதீபம் கலைமாமணி"**
**திருமதி. வசந்தி ஜெயராஜ்**
**திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோமுகி" மலரில் அமரர். ஐ.சரவணபவன் அவர்களால் எழுதப்பட்ட நயினாதீவு வரலாற்றுப் பின்னணி...... என்ற கட்டுரையையும், அன்னாரின் தந்தையார் அமரர். சுந்தரன் ஐயாத்துரை அவர்களால் வெளியிடப்பட்ட மூன்று சிறு நூல்களையும் இங்கு தொகுத்து வழங்குகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

உ
கணபதி துணை.
நயினாதீவு

# நாகபூசணியம்மை திருவூஞ்சல் ஏலம் எச்சரிக்கை பராக்கு கப்பற்பாட்டு நாமாவளி கும்மி மங்களமு மடங்கியது

இஃது
நாயனார் பட்டரின் 30-ம் சந்ததியினரும்
திருவூஞ்சற்பா வழி இறுதியில் வருபவருமாகிய
**ப்ரம ஸ்ரீ பொ.இ.இராமச்சந்திரகால முதல்**
ஓதி வருவது.

பழைய ஏட்டுப் பிரதிகளாய் சிதைவுற்றதில்
மதுரைநகர் வைசியரிடத்தும் எனது கிடுருகத்தும்
யாழ்ப்பாணம் வண்மேற்கு
பரதகலை யடியாரிடத்துமாக எடுத்து
**சைஷயூர்.சு.ஐயாத்துரைச் சோதிடரால்**
அச்சிடப்பெற்றது.

பதிப்புரிமை ஆக்கியோனுக்கே.

**விலை சதம் 20.**

நாவலர் அச்சுக்கூடம், யாழ்ப்பாணம்
1949.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு வரலாறு

இத்துவீபம் நாகதீவு பூந்தோட்டம் பல்லவம் மணித்தீவு நயினா தீவு என நாக்சைனர் ஒல்லாந்தர் மலாயர் பெளத்தர் மலையாளிகள் மதுரை இவ்வகை தரபினரும் மாத்தினரும் காலந்தோறும் தமது நாமகாரணமிட்டழைததனர். சுமார் 1800 வருடங்களுக்கு முன் வைசியரால் மதுரையினின்று அழைத்து வந்த நாயனார் பட்டரும் காலிரிப்பூம் பட்டினமிருந்து அம்பிகை தொண்டாற்ற வந்த கார்காத்த வேளாளன் ஸ்ரீ கண்ணப்பனும் ஒருங்குசேர்ந்து அக்கால அரசினார்பாற் சென்று நயினார்தீவு பட்டரது நாமத்தையே சூட்டுவாராயினர். ஏனைய தீவுகளெல்லாம் இடுகுறிப் பெயராயமைய இது காரணப்பெயர் கொண்டது. முன் இங்கு வசித்த நாகமரபினரும் பின்வந்த பட்டர் மருட்ட மயங்கினர் போலும் (நாகநயினாதீவு) வையாபாடல் நாகதீவு (பெளத்தர்பிடகம்) நயினாதீவு 270 வருடத்துக்கு முந்திய இராமலிங்க முனிவர் (வாக்கியபஞ்சாங்கம்) நயினாதீவு என அழைப்பது எதுபற்றியே அறியோம். குறித்த பட்டரின் 36 சந்ததியாளரும் கண்ணப்பரின் 36 35ம் சந்ததியாளரும் மேற்படி கோவிலின் எதிரி வழக்காளிகளும் யாழ்ப்பாணம், நீர்வேலி, இளவேலி, நவிண்டில் அராலி அச்சுவேலி முதலிய இடங்களிற் குடியேறிய கொக்காபட்டர் கோணிரிபட்டர் கொங்களிபட்டர் விநாயகபட்டர் ஆகியோரும் நாயனார் பட்டரையும் பிற்காலம் நயினாதீவு தோம்பேட்டிலுள்ள பிள்ளையாபட்டர் இராமச்சந்திரர் வரையிற் சந்தித்தவராக பலவூர்க்கோயிற் கணக்கினும் ஊர் உரிமைவந்த புரோகித வகையாலும் காணக்கிடக்கின்றது. பட்டர் என்னசாதி (என்னகுலம்) என்னகோத்திரம் (என்னசூத்திரம்) என்பதை எம்மூரினரும் ஏனைய தேசவாசிகளும் நன்கறியாது பிரமிக்கிறார்கள். பட்டர் சாதியில் சம்மந்தப்பட்டர் வையக்கரைகப்பட்டர் பாம்புக்குட்டிப்பட்டர் பிள்ளைப்பட்டர் எனப்பகுப்புண்டு. இவ்விஷயத்தை இனியாயினும் தெரிந்தவர்வாயாற் கேட்டுணர்வாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழமண்டலச்சதகம் நயினாதீவு

முன்னமோர் கோவணந் தட்டினிலிட்டு முயன்றடிமை
தன்னை மதிக்கச் செய்தோன் தில்லைவாழும்
சபேசனிடம்
துள்ளிபொளிரு மொருநாகபுஷணி தொல்லைமுன்னாள்
மன்னத்தவஞ்செய் நயினையு மீழமண்டலமே.

## இந்நூல் தொகுத்த காரணம்

வெண்பா சங்கராபரணம்

மன்னுமிராகுதெசை மண் நயினையிற் செனனித்
தின்னல்பல வெய்தியிக் கேதுதனில் -
முன்னைவினைப்
போகம் நாகேஸ்வரியின் போற்றூஞ்சல்பா மற்றும்
பாகமச்சிலிட்டேன் பணிந்து.

## நயினாதீவுத்தல விசேடம்.

மாநாய்கர் காலச்செய்யுள்
இராகம் கோதாரகௌளம் தாளம் :- ஏகம்

ஈட்டவல்ல துபல்லவகைக் குடிகளுமீட்டி
ஊட்டவல்ல துபல்வகைப் போகமுமூட்டிக்
காட்டவல்லவிப் பரைபதி காட்டியோண கணிலை
நாட்டவல்லது நாகநாகேஸ்பரி நகரம்.

## தலம் அம்பிகை சக்கரம் ஐங்கோணம்.

விருத்தம் இராகம் எதுலகாம்போதி தாளம்-ஆதி

நாகமெனும் பாவோடி ஐங்கோணத்து
நவில் தென்கீழ் வடமேலாய் நாகம்தாங்க
போகசத்த் நிருதிதிசை காவல்காக்க
புகலுமைய னிருபுணரி பக்கம் தங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகுமையே திருக்கோயில் கொண்டு சவ்வும்
அரி லோடிச் செம்மணத்தம் புலத்துள் நிற்கப்
பாவட்ட மேல்கீளாய் கிலியும் தங்கும்
பப்பாலன் சல்லிமுதன் நயினைபாரே.

## நயினை நாகபூஷணி திருவூஞ்சற்பா.

இராகம் பைரவி.

சீர்பூத்த தென்னிலங்கை தன்னில் மேவும்
திரைபூத்த நடனயினை நகரில்வாழும்
ஏர் பூத்த நாகேஸ்வரியைப் போற்றி
இசைபூத்த செந்தமிழா லூஞ்சற்பாட
ஆர்பூத்த சடைமௌலி அரனாரீன்ற
அருள்பூத்த அறிவின்செய் தொழிலென்றோதும்
கார்பூத்த கரிமுகவன் தனதுபாதம்
கரம்பூத்த மலர்கொண்டே கருதி வாழ்வோம். 1

ஆரணியே அம்பிகையியே யாடீரூஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீரூஞ்சல்
பூரணியே புராதனியே யாடீரூஞ்சல்
புங்கவியே சங்கரியே யாடீரூஞ்சல்
காரணியே கற்பகமே யாடீரூஞ்சல்
காருணியே கன்னிகையே யாடீரூஞ்சல்
நாரணியே நாயகியே யாடீரூஞ்சல்
நாகபரமேஸ்வரியே யாடீரூஞ்சல் 2

பலனோங்கு செம்பவளம் காலகளாகப்
பகர்வைர ரத்தினமே விட்டமாக
குலனோங்கும் தொண்டாளங் கயிறதாக
கூறரிய மாணிக்கம் பலவகையாக
வலனோங்குமூஞ்சல்மிசை யினிதுவைகி
மலர்மகளும் கலைமகளும் வடந்தொட்டாட்ட
நலனோங்கும் திருநயினை தன்னில் வாழும்
நாகபரமேஸ்வரியே யாடீரூஞ்சல் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவகையோடு வலாயன்மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட நாகங்காப்பத்
தவமுடையோர் தீபமோடு தூபங்காட்டத்
தாழ்ந்து கணநாதர்புகழ் மாலைசூட்ட
சொரியும் துவரமலர் வானந்தூர்ப்ப
தவமணி கடங்குநகர் நயினை வாழும்
நாகபரமேஸ்வரியே யாடீரூஞ்சல். 4

கொம்பினொடு துடிமுரச முழவமோங்க
குடைகளுட னாலவட்டங் குழுமியோங்க
தும்புரு நாரதர் வேதகீதம் பாட
தொண்டராகம மகிழ்ந்து சுகவாழ்வு நாட்ட
விம்பவிழு மலர்மாரியமரர் பெய்ய
விதிமுனிவரடி பணிந்து வீற்றிருப்ப
நம்புமடியர்க்கருளி நயினைவாழும்
நாகபரமேஸ்வரியே யாடீரூஞ்சல். 5

இந்திரனே கோடிகத்தைக் கையில்வாங்க
எரிக்கடவுள் தனித்தீப மெடுத்துக்காட்ட
வந்துவாயுபகவான் விசிறி வீச
வருணனுமே பூமாரி பொழிந்து நிற்க
முந்துநம னிருதிபடை படிகத்தோங்க
முதலளகாதிகதிபடை லடைப்பை தூங்கச்
சிந்தை செய்யன்ப ரானந்தம் வீங்கத்
தேவி நாகேஸ்பரியே யாடீரூஞ்சல். 6

ஒப்பில் கணநாதர் கைத்தாளம் போட
உயர்பூதர் மத்தளத்திலொலிவே நாட்ட
செப்புறு தும்புருநாதர் கீதம்பாட
சேரும் விஞ்ஞையர் யாழிற் கருதிகூட்ட
தம்பிலாம்பையர்கள் தனிநடனமாட
சாருமடியா ரகத்தஞ்ஞான மோட
மைப்படியும் நயினைநகர் தன்னில் வாழும்
மாநாகயீஸ்பரியே யாடீரூஞ்சல். 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதவனும் சந்திரனும் தங்கடங்கள்
அரசுமுறை அனுத்தவறா வாத்தைக் கேட்ட
வேதன்விண் குருமுறைமை தனத்க் கேட்ப
விரும்புதன் வித்தைகலை மேன்மை கேட்ப
தி தகல்சேய் நிலம்வீரம் தினமுங் கேட்பச்
செம்புகரோன் போகமன மகிட்சி கேட்ப
வாதான சனி ஆயுள்வலிமை கேட்ப
வரமருள் நாகேஸ்வரியே யாடீருஞ்சல். 8

கருநாகஞ் செந்நாக மிரண்டும் தங்கள்
கவலைகளை முறையிட்டுன் பாதம்நின்று
வருமுலகில் மாந்தருக்கு முன்னூழாலே
வரும்புதல்வர் போகமன மகிட்சி மாற்றம்
பிரிவதனைச் செய்யுமெங்கள் வரத்தை யம்மே
பிஞ்ஞகனும் விலத்துவரோ உம்மையன்றி
அரியயற்கு மஞ்சோமே நயினையூர்வாழ்
அம்பிகை நாகேஸ்பரியே யாடீருஞ்சல். 9

சீர்வாழி சிவமயம் வாழி வாழி
தேவாதி தேவுமல்லாத் தேவும் வாழி
பார்வாழி மாதமும்மாரி வாழி
பசுக்குலம் வேதியர் தருமம் பவவும் வாழி
நீ வாழி நயினைநகர் உறைவோர் வாழி
நீடாயுளன்ன சொர்னம் நிறைந்த வாழி
ஏர்வாழி இராமசந்திர மகிபன் வாழி
இனம்வாழி இன்னூஞ்சல் வாழி மாதோ 10

<u>ஏசல் இராகம் புன்னுகவராளி தாளம் ஏகம்</u>

மாநாகபீஸ்பரி உனைத தொழுது
வணங்கி நாம் வாழ்ந்திட முன்வந்துதவுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானாடு காவிரிப்பூம் பட்டினத்திற்கு
கல்வகை ரத்தினம் கப்பலிற் கொண்டுபோய
பூ சொரியும் படர் போலுள மாந்தருக் கீய்ந்து
அந்த முதசிபாத பொன்னுடன் வந்துன் முகங்கண்டு
நவமணி சூதனாறு பாயும் மதுரைக்குச் செல்லநீ
நாகப சீக்கிரமே சற்சிறப் பருளம்மே.

## எச்சரிக்கை இராகம் செஞ்சுருட்டி தாளம் கெண்டை நடை.

ஆரணியே யாமளையே எச்சரிக்கை
அந்தரியே யம்பிகையே எச்சரிக்கை
பூரணியே புங்கலியே எச்சரிக்கை
போற்றும் நாகேஸ்வரியே எச்சரிக்கை

## பராக்கு இராகம் ஆனந்தபைரவி தாளம் திசரம் அட்சரம்

வருவாய் பராசக்தி யுமைவடிவே பராக்கு
திருவாய் முழுமுதலே வரமருள்வாய் பராக்கு
அம்மே அருள்நிதியே சீவவறிவே பராக்கு
செம்மே உனைத்தொழவே யருள்செய்வாய் பராக்கு

## லாலி இராகம் மத்தியாவதி தாளம் ரூபகம்

சித்திவிநாயகர் கந்தன் வைரவர்
தெய்வானை வள்ளிக்கும் லாலி
புத்திர சந்ததி தாநாகவீஸ்பரி
பாற்று மன்னே தேவதி லாலி

## கப்பற்பாட்டு இராகம் புன்னாகவராலி தாளம் ஏகம்

ஏலே ஏலோ ததெதெய ஏலைஎலோ ஏலைவலி ஏலேயம்மா
நாலாறு கால்கொண்டு வடடமதிறுக்கி
நலமான விருதூணை நன்காயமைத்து
மூலமெனு மேராவை முன்னே யிழுத்து ஏலையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுகுகுரவனைபீசமபாய் மரம்நிறுத்தி -ஏலைஎலோ
ஏலைலவலி-தத்தெ
கோலானவங்குகட் கங்கங்கு ஆணி
கொண்டடித்தேகூறப் பாவையு மிழுத்து
நூலானசக்கான் நேத்திரம் மூக்குகர்ணம்
நுகருவாயுதடெயிறு நோக்கவகுத்து-ஏலை ஏலோ
ஏலைவலே
காலான வாயுநானகானதை யறிந்து
கப்பல்கடலோட்டு நாள் நாட்சரக்கறியே
பஞ்சபாதகமுடன் நெஞ்சமுக்காறு
பாரடங்காக் போபமாகும் பொறாமை - ஏலை ஏலோ
தத் தெய் ஏலோ

வஞ்சனை செய் சூழ்ச்சியறுமாப்புடன் லோபம்
வருமீஷையாற்சரிய மாகும் துவேஷம்
துஞ்சலுள விச்சரக்கு ஏற்றது நாமே
துணைசெய் நாகேஸ்வரியைத் துதித்து வருவோமேல்
ஏலைஏலோ ஏலையம்மா
தஞ்சமென வில்லினொடு புத்திரசம்பத்து
தகுபோக வகையோக வகையும் கடந்து
அஞ்சாது யமனுக்கு மடங்காத கப்பல்
அரனார்தம் திருவடியில் கரையேறு மன்னே ஏலை
ஏலோ தத்தெய் ஏலை ஏலோ

## கும்மி இராகம் திரிவேளை தாளம் ரூபகம்

வேதவொலி குறையாத நயினை
விளங்கிய பப்பரவர்கள் சல்லி
கீதப்பிரியை நாகேஸ்வரி யம்மையைக்
கிட்டிக்கும்மி யடியுமெடி
சந்ததி கல்வி சம்பத்தொடாயுள்
சார்ந்திடு சற்குணம், சாதுரியம்
வந்திடும் பப்பரவன் சல்லித் தேவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்திக் கும்மி யடியுமேடி
பாடுபட்டுப் பணந் தேடிச் சுகித்தென்ன
பாராளும் போகமிருந்தும் பலனென்ன
நாடும் நயினை நாகேஸ்வரி தேவியை
நாடாவிழிக்கொரு ஞானமிலைப் பெண்ணே.

## நாமாவளி இராகம் நாகவராளி தாளம் ரூபகம்

பப்பரவன் சல்லி புள்ளவளே
பழவடியார் வினை தீர்ப்பவளே
கப்பலுள மலை ராசனின் புத்திரி
தன்னிகையே நாகர் காட்சி கொடுத்தீர்
செய்யுமாய்நாகர்மா சாத்துவானுக்கருள்
செய்த பராபரை தேவிநீ யெங்கேபோய்
தப்பி மறைகிறாய் அமைமே அம்மே யினிச
சாம்தனி யேனுக்கருள் தருவாய்

## மங்களம் இராகம் சக்கரவானம் தாளம் ஆதி

சித்தி விநாயற்கும் மங்களம்
சிவசுப்பிரமணியருக்கும் மங்களம்
பக்தி நாகேஸ்வரிக்கும் மங்களம்
பக்ருமட்ட பாலகற்கும் மங்களம்.

முற்றிற்று.

## குறிப்பு

1947ம் வருடம் ஜனவரி மாதம் யாழ்ப்பாணம் நயினாதீவு. சுந்தரர் ஐயாத்துரைச் சோதிடர், மதுரைமாநகரில் வந்து எனது உதவி கொண்டு இப்பாட்டில் சொல்லிய சில ஓலைச் சுவடிகளை மாநாய்கர் மாசாத்துவான் சந்ததியார் வீடுகளிற்போய் சிலவற்றைக் குறித்தனர்.

**இங்ஙனம்,**
**ஆ.சுப்பிரமணியம் ஆச்சாரி**
**தெற்குமாசி வீதி 17ம் நம்பர் பூக்காரச் சந்து மதுரை.**
**தற்போது வண்ணார் பண்ணை கன்னாதிட்டி**
**ஆறுமுகம்பிள்ளை அன்சன்ஸ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு வரலாற்றுப் பின்னணி

ஐ.சரவணபவன்

ஒரு கிராமத்தின் வரலாற்றை ஆராயு முன் அக் கிராமம் அமைந்துள்ள தேசத்தைசயும், பெரும் பிரிவையும் ஆராய்வது சாலச் சிறந்ததாகும்.

## இலங்கை

"எங்கள் இலங்கையடி பாப்பா" இத்தொடரை முதலாகவுடைய பாடலைப் பலமுறை சொல்லித் தந்தார் எனது பாலர் வகுப்பாசிரியர். அன்று காதுக்கினிக்கும் ஒரு பாடலாகவே எனக்குத் தோன்றியது. ஆனால், வகுப்புக்களேறின. இலங்கையின் கலைச் செல்வங்களையும், இயற்கைக் கட்சிகளையும், சரித்திரச் சார்புடைய சின்னங்களையும், நெடுந்தீவிலிருந்து தேவேந்திரமுனைவரையும், கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வரையும் காணும் பாக்கியம் எனது ஆசிரிய வாழ்க்கையிலே அநுபவத்தில் நேர்ந்தது. இப்பரந்த உலகில் இலங்கையின் உன்னத ஸ்தானம் எவ்வளவு சிறப்புற்றோங்கி வளர்ந்திருக்கிறதென்பதை இன்று நாம் அறியக் கூடியதாக இருக்கிறது.

இலங்கையை இராவணன் ஆண்டானென வரலாற்று நூல்கள் கூறும்.விரசிவசு என்பவனுக்கும், கேகசி என்பவளுக்கும் புத்திரனாகப் பிறந்த இராவணன் இலங்கையை அரசாண்ட மன்னனெனக் கலைக்களஞ்சியம் 2-ம் தொகுதி 77-ம் பக்கத்திற் கூறப்படுகிறது. அதோ கலைக்களஞ்சியத்தில் இராமர் திரேதாயுகத்தில் இருந்த அரசனெனவும், அக்காலத்திற்றான்வான்மீகி என்ற புலவரும் வாழ்ந்தாரெனவும் சிலரின் அபிப்பிராயம் என்று கூறுகிறது. அதே இராமரே இலங்கைக்கு வந்து இராவணனைப்போரில் வென்று சீதையைச சிறைமீட்டதாக இலக்கியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றன. கம்பஇராமாயணம் மிக விரிவாக எடுத்தியம்புகின்றது. ஆகவே, இலங்கை என்ற பெயர் புராதனமான தென்பதற்கையமில்லை. அப்பெயராற குறிக்கப்படும் இலங்கை தற்போதைய இலங்கைதான என்பதற்கான காரணங்களையும், வரலாற்றுச் சான்றுகளையும் ஆராய்ந்தால் சீதா பிராட்டியாரின் பெயருடன் இணைப்புடையதாக சீத்தலவா (சீதைவெளி) சீதால (சீதையருவி) என்ற பெயர்கள் தற்போதும் காணப்படுகிறன. இந்தியாவையும் இலங்கையையும் இணைத்த பாலத்தை இராமரணை என்று கூறுவதனால், இராமாயணம் கூறும் இலங்கை எமது தாய் நாடே எனத் துணியலாம். அதுவுமன்றி கி.பி.2ம் நூற்றாண்டளவில் இயற்றப்பட்ட "மணிமேகலை" என்ற நூலிலும் இலங்கை என்ற சொல்லே எடுத்தாளப்படுகிறது.

மகாவம்சத்திற் கூறப்படும் கால அட்டவணையின்படி கி.பி.2ம் நூற்றாண்டில் 1ம் கயபாகு வேந்தன் இலங்கையை ஆண்டான். அவன் "கடல் சூழிலங்கை கயபாகு வேந்தன்" எனச் சிலப்பதிகாரத்தில் அழைக்கப்படுகின்றான். ஆகவே, கி.பி.2ம் நூற்றாண்டுக்கு முன்பு இலங்கையென்ற பெயரிலேயே இத்தீவு இருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும், இத்தீவு இரத்தினத்தீபம், ஈழம், மும்முடிச்சோழ மண்டலம், சிங்களத்துவீபம், தாபிரபன, செறண்டிப், இயக்க தீவு, நாகதீவு எனவும் சிலரால் அழைக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணம்

"எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்" என்ற முதுமொழிக்கிணங்க இலங்கை இத்துணைச் சிறப்புப் பெற்றிலங்கக் காரணம் எழில் கொண்ட யாழ்ப்பாணம் இலங்கையின் வடபால் அமைந்திருப்பது தானா என்பது சரித்திர ஆராய்ச்சியாளர்களின் சிந்தனைக்குரிய விருந்தெனவே நான் கருதுகின்றேன். "யாழ்ப்பாணம் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணனுக்குப் பரிசிலாக வழங்கப்பட்ட ஒரு மணற்றிடர்" எனச் சரித்திராசிரியர்களிற் சிலர் கூறுகின்றனர். "அவன் பரிசிலாகப் பெற்றவிடம் யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதுமல்ல. தற்போதைய யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியாக அமைந்திருக்கும் கரையூர், பாசையூர், பறங்கித்தெரு, பண்ணை முதலிய கடற்கரைப் பிரதேசங்களே" ஒரு சில சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர்.

இலங்கையின் வடபகுதியை முற்காலத்திலேயிருந்து நாகவரசர்கள் ஆண்டார்களெனவும், கந்தரோடை பல நாகவரசர்களது இராசதானியாகவும், நாகதீவு(நயினாதீவு) பல நாகவரசர்களதும், சிற்றரசர்களினதும் இராசதானியாகவும் இருந்தனவென நாம் அறியக்கூடியதாக இருக்கிறது.

கி.மு.563-ம் ஆண்டு தொடக்கம் கி.மு.483-ம் ஆண்டுவரை வாழ்ந்த புத்த பெருமான் குலோதரன், மகோதரன் என்னும் நாகவிளவரசர்களுக்கிடையில் ஒரு மணிபதித்த அரச பீடத்தைப் பற்றியேற்பட்ட பிணக்கிற் சமாதானஞ் செய்துள்ளார். ஆகவே, கி.மு. 483-ன் முன் யாழ்ப்பாணக் குடாநாட்டில் குடி மக்கள் வாழ்ந்தனர். அரசர்களுமிருந்தனர். எல்லாள மன்னன் (கி.மு.2-ம் நூற்றாண்டு) காலத்தில் அல்லது குலசேகரச்சிங்கையாரியச் சக்கரவர்த்தி (கி.பி.13ம் நூற்றாண்டு) காலத்தில் யாழ்ப்பாடி எனக் கூறப்படும் அந்தகக் கவிவீரராக முதலியார் மணற்றிடர் என்ற யாழ்ப்பாணத்தைப் பரிசிலாகப் பெற்று, இந்தியாவில் இருந்து சனங்களைக் கொண்டு வந்தாரென்பதும், அவர் மணற்றிடர் என்ற யாழ்ப்பாணக் குடாநாட்டைக் காடு திருத்தி நாடாக்கினாரென்பதும் பொருத்தமுடையதன்று. யாழ்ப்பாடி இந்தியாவில் இருந்து வந்து கி.பி.13ம் நூற்றாண்டில் யாழ்பாணக் கரையோரமாகவிருந்த பிரதேசத்தை அரசனிடம் பெற்று, தமது இனத்தவரைக்கொண்டு வந்து குடியேறியிருக்கலாம். அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாழ்ப்பாணம்" என்று அழைக்கப்பட்டிருக்கலாம். போர்த்துக்கேயர் காலத்தில் அப்பகுதிகளிற் கோட்டைகள் கட்டப்பட்டன. அவர்கள் "யாழ்ப்பாணன்" என்று அழைக்கப்பட்டிருக்கலாம். போர்த்துக்கேயர் காலத்தில் அப்பகுதிகளிற் கோட்டைகள் கட்டப்பட்டன. அவர்கள் யாழ்ப்பாணம் எனத் தங்கள் கோட்டைப் பிரதேசத்தைக் குறிப்பிட்ட சொல்லால் குடாநாடு முழுவதும் யாழ்ப்பாணம் என்ற பெயரில் அழைக்கப்பட்டது. எனவே. யாழ்ப்பாடி வரலாறு சரித்திர ஆசிரியர்களிற் சிலரால் மிகப்படுத்திக் கூறப்பட்டதேயெனக் கருத இடமுண்டு. வெள்ளவத்தை. பம்பலப்பிட்டி. கொள்ளுப்பிட்டி. கொம்பனித்தெரு என்ற தனிப்பகுதிகள் தற்போது கொழும்பென அழைக்கப்படுவதைக் காண்க.

## சப்த தீவுகள்

சிரத்தை அழகு படுத்துவதற்குச் சிறப்புற்ற நவமணிகளைக் கொண்டு கிரிடங்களையாக்கி அணிவார். கிரீடமின்றேற் சிறப்பில்லையல்லவா? இலங்கையின் கிரீடமெனப் போற்றப்படுபவைகள் சப்ததீவுகளே.

## நயினா தீவு

சப்த தீவுகளிலும் தனிப்பெரும் சரித்திரப் புகழ் பெற்ற நயினாதீவு யாழ்ப்பாணத்திலிருந்து தென்மேற்கே ஏறக்குறையப் பதினென் மைல் தூரத்தில் அமைந்திருக்கின்றது. இத்தீவின் மறுபெயர்களாவன நாகதீவு. நாகத்தீவு. நாகதிவயின. நாக நயினாதீவு. நயினார்தீவு. நாகதீபம். நாகதீப. நாவலந்தீவு. பூந்தோட்டம். சம்புத்தீவு. மணிபல்லவம். மணிபல்லவத்தீவு. மணிநாகதீவு. மணித்தீவு. பிராமணத்தீவு. நதித்தீவு. நாகேஸ்வரம் என்பனவாம். ஒல்லாந்தர் காலத்தில் ஹார்லெம் என அழைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகதீவு, நாகத்தீவு, நாகதிவாயின

நாகதீவு என்ற பெயர் நாகர்களின் குடியிருப்பாலும் நாகவழிபாட்டாலும் நாகங்கள் அதிகமாக வாழ்ந்தமையாலும் ஏற்பட்டதே. சிங்கள மன்னர் இலங்கையை அரசாண்ட காலத்தில் நாகதிவாயின என அழைக்கப்பட்டதாக இருக்கலாம். திவ்யின என்ற சிங்களச் சொல் தீவு என்னும் பொருளுடையது.

## நயினார்தீவு

இத்தீவுக்கு வழங்கப்படும் பல பெயர்களுள்ளும் நயினார்தீவு என்னும் பெயர் ஆராய்ச்சிக்குரியது. மதுரையில் மாநாய்கன் என்னும்மொரு வைசியர் இருந்தாரெனவும். அவரே நயினாதீவு வடகீழ் திசையில் நாகபூஷணிக்கொரு சிறந்த ஆலயம் கட்டுவித்தாரெனவும் மதுரை வைசியர்களிடமிருந்து பெற்ற ஏடுகள் கூறுகின்றன. மாநாய்கள் என்னும் வைசியரே நயினார்பட்டரேன்ற அந்தணரையும் கண்ணப்பன் என்ற வேளாளரையும் நயினாதீவுக்குக் கொண்டு வந்தார். அக்காலத்தில் நாகதீவெனவே வழங்கப்பட்டது. நயினார்பட்டர் அறிவிற் சிறந்தவராகவும். அரசினர் தொடர்புடையவராகவும். வாழ்ந்தபடியால் தனது ஞாககத்தைப் பிற்காலத்தவரும் நினைக்க விரும்பி நாக நயினார்தீவு என மாற்றினார். காலப்போக்கில் நயினார்பட்டரின் செல்வாக்கும். அவர் சந்ததியாரின் செல்வாக்கும் விருத்தியடைய 'நாக'என்ற சொல் விடப்பட்ட நயினார்தீவு என அழைக்கப்படலாயிற்று. இது பற்றியே கொக்குவில் வாக்கிய பஞ்சாங்கத்தில் இன்றும் நயினார்தீவு வீரகத்தி விநாயகர். நயினார்தீவு நாக பூஷணியம்மை எனக் குறிக்கப்படுகின்றன. நயினார் பட்டரின் 20-ம் தலைமுறையினரான இளையதம்பி உடையார் காலத்தில் பட்டர் மரபினர் நாகபூஷணிக்குப் பூசை செய்வதை விடுத்து அரசாங்க சேவையிற் சேர்ந்தனர். பிற்காலத்தில் பட்டர் மரபினர் செல்வாக்கொழிய நயினாதீவு என்ற சொல்லில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ர்" விடப்பட்டு நயினார்தீவு அகியது.இது ஆச்சரியமானதல்ல. இன்றைய இலங்கையில் வீதிப் பெயர்களும் இடப்பெயர்களும் மாறிவருவதைக் காண்க.

## பூந்தோட்டம்

பூந்தோட்டமென்பது புராதன பெயராகும். இந்தியாவிற் சிதம்பரத்தைத் தில்லையெனவும் அழைப்பர். அங்கேயுள்ள ஆலயங்களுக்குத் தேவையான பூக்களைப் பெறுவதற்காக நயினாதீவுத் தில்லை வெளியில் ஒரு பெரிய பூந்தோட்டமமைக்கப்பட்டுப் பூக்கள் சிதம்பரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. தில்லைக் கோயிலுக்குத் தேவையான பூந்தோட்டமாகையாற் தில்லைப் பூந்தோட்டமென அழைக்கப்பட்டது. காலப்போக்கில் இந்தியாவிலே தேவையான பூக்கள் கிடைத்தமையால் இத்தோட்டம் கைவிடப்பட்டு பூமரங்கள் அழிந்து. பரந்த சமவெளியாகியபடியால் தில்லை வெளியென அழைக்கப்படுகிறது. இப் பகுதி தற்போது பிடாரி கோயில் இருக்கின்ற பகுதியாகும். தில்லை வெளி என்னும் காணி தோம்பேட்டில் 200பரப்புடையதாகக் காணப்படுகிறது. சிதம்பரக்கோயிலின் முற்கால ஏடுகளில் இவ்விபரங்கள் காணப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. தற்போது நுவரெலியாவில் உற்பத்தியாகின்ற பூக்கள் யாழ்ப்பாணம் வரையும் வருவதைப்போல, முற்காலத்தில் இங்கிருந்து பூக்கள் இந்தியாவுக்குக் கொண்டு செல்லப் பட்டிருக்கலாம்.

## நாகதீபம்

இச் சொல் யாழ்ப்பாணக் குடா நாட்டைக் குறிப்பதாகக் கூறுவர் சிலர். தீபம் என்ற சொல் தீவு என்ற பொருளையுமுடையது. யாழ்ப்பாணக் குடா நாடு ஒரு தீவு அல்ல. அது நான்கு பக்கமும் கடலாற் சூழப்படவில்லை. ஆகவே. நாகதீவே நாகதீபமாகும். நாகதீப-இச் சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களச் சொல்லாக இருக்கலாம். யாழ்ப்பாணம் "யாப்பனய" என்பது போல நாகதீபம் 'நாகதீப' என அழைக்கப்பட்டுள்ளது.

## நாலந்தீவு, சம்புத்தீவு, நரித்தீவு

சம்பு என்ற சொல்.சிவன். நாவல். நாவலந்தீவு.நரி என்பவற்றைக் குறிக்கும். நாவலந்தீவு என்ற சொல்லுக்கு (Tamil Lexicon)தமிழ் லெக்ஸிகன் அகராதியில் 2229-ம் பக்கத்தில் ஏழு தீவுகளில் உப்புக்கடல் சூழ்ந்த தீவு எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. சம்பு என்ற சொல் நரியையும் குறிப்பதனால் சிலர் நரித்தீவு எனச் சம்புத்தீவு என்ற பெயருக்கு மாறான கருத்துக் கொண்டிருக்கலாம்.

## மணிபல்லவம்

கலைக்களஞ்சியம் தொகுதி 8-ல் " ஒரு சிறு தீவு காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து தெற்கே முப்பது யோசனைத் தொலைவில் உள்ளது. அங்கே தன்னைத் தரிசித்தவர்களுக்குப் பழம்பிறப்பின் செய்தியைத் தெரிவிக்கும் புத்தபீடிகையொன்றும். கோமுகி என்னும் பொய்கையும் இருந்தன. மணி மேகலை தன் பழம்பிறப்பை இப்புத்த பீடிகையால் உணர்ந்தாள். அமுதசுரபி என்னும் பாத்திரத்தை தீவதிலகையின் உதவியால் இக்கோமுகியிலே பெற்றாள்" என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே. கி.பி.2-ம் நூற்றாண்டளவில் உள்ள பெயராகும் இது.

## மணித்தீவு, மணிநாகதீவு

இப்பெயர்களில் மணி என்ற சொல் நாகரத்தினத்தையே குறிக்கன்றது. நாகரத்தினத்தை வாங்க வந்த வைசியர்களினால் இப்பெயர்கள் அழைக்கப்பட்டதாக மதுரை வைசியர்களது பழைய ஏடுகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராமணத்தீவு

கி.பி 1658-ம் ஆண்டளவில் எடுக்கப்பட்ட நயினாதீவு குடிசன மதிப்பு பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| பார்ப்பார் - புரோகித வேலை செய்வோர் | குடி | 2 |
| பார்ப்பார் - புரோகிதர் அல்லாதவர் | குடி | 65 |
| வேளாளர் | குடி | 40 |
| பரதவர் | குடி | 15 |
| கொல்லர்+தச்சர் | குடி | 3 |
| அம்பட்டர் | குடி | 3 |
| வண்ணார் | குடி | 2 |
| தோப்பேறிய நளவர் | குடி | 13 |
| பறையர் | குடி | 7 |
| | | 150 |

ஆகவே, பிராமணக்குடிகள் 67. குடிமக்களில் பெரும்பான்மையோரின் பெயராற் பிராமணத்தீவு என அழைக்கப்பட்டது.

## நாகேஸ்வரம்

முற்காலத்தில் நயினாதீவில் இறைவன் சந்ததியும், இறைவி சந்நிதியும் ஒரே ஆலயத்தில் வெவ்வேறாக இருந்தன. அப்பனும் அம்மையும் கோயில் கொண்டருளி இருந்த ஆலயமே நாகேஸ்வரமென அழைக்கப்பட்டது. அவ்வாலயப்பேரே ஊர்ப்பெயராக வழங்கி வந்திருக்கிறது.

## நயினாதீவும், பிறநாட்டார் தொடர்பும்

நயினாதீவிற் சிறந்த துறைமுகங்களும், யாத்திரைத் தலங்களும் இருந்தமையால் பல வெளிநாட்டு வணிகர்களும், பல வெளிநாட்டு யாத்திரிகளும் காலத்துக்குக் காலம் இத்தீவவைத் தரிசித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தர்பெருமான் கி.மு. 523ற்கும் கி.மு.483ற்குமிடையில் தமது யாத்திரை காரணமாக நாகதீவைத் தரிசித்து நாக வழிபாடியற்றியிருக்க வேண்டும். அவர் வந்ததுபோது ஏற்பட்ட அரசசபைப் பிணக்கையும் தீர்த்து வைத்துள்ளார். சாவகநாட்டு மன்னன் புத்தரது பாதபீடிகையைத் தரிசிக்க மரக்கலமேறி வந்தவெனன மணி மேகலை கூறும். பாமாவில் இருந்து தர்மசோக மகாராசா புத்திரசோகத்தால் வருந்தி நாகவழிபாடியற்றிப் புத்திரப் பேறடைய நாகதீவு வந்தாரென அறியக் கிடக்கின்றது.

பாண்டவர்களில் ஒரவனான அருச்சுனன் நாகவழிபாடியற்ற மணிபுரத்துக்கு வந்து நாககன்னிகையை மணஞ் செய்து பப்பிரவாகன் என்னும் புத்திரனைப் பெற்றானெனவும். பப்பிரவாகனது பெயரே பப்பிரலாகன்சல்லியென ஸ்ரீ நாகபூசணி ஆலயம் அமைந்தவிடமென அறியக் கிடக்கின்றது. ஆபுத்திரன் வந்து அட்சயபாத்திரமெனும் அமுத சுரபியைக் கோமுகிப் பொய்கையிலிட்டுச் சென்றான்.

நெடுமுடிக்கிள்ளி என்னும் சோழவரசன் யாத்திரை காரணமாக மணிபல்லவத்துக்கு வந்து பீலிவளை என்பாளை மணந்து அதன் பேறாகத் தொண்டைமான் இளந்திரயனைப் பெற்றானென யாழ்ப்பாணச் சரித்திர நூல் கூறும்.

நயினாதீவில் கிரேக்க. உரோம. இந்திய. சீனப் பழைய நாணயங்கள் காலத்துக்குக் காலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சீனாவிற் கி.பி.12-ம் நூற்றாண்டிற் செய்யப்பட்ட சாடிகள் நயினாதீவு கிணறு ஒன்றிற் கண்டு பிடிக்கப்பட்டன. மகாபராக்கிரமபாகுவின் சிலசாசனப்படி அநேக வெளிநாட்டுப் பிரயாணக் கப்பல்களும், வணிகக் கப்பல்களும் நயினாதீவுத் துறைமுகங்களுக்கு வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்த்துக்கேயர் காலம்

போர்த்துக்கேயர் வருகை நயினாதீவுக்குப் பெரும் நட்டத்தையே விளைவித்திருக்கிறது. நாகபூசணியம்மன் கோயில் முற்றாக அழிக்கப்பட்டது. பொருள்கள் சூறையாடப்பட்டன. தேர்கள் அழித்துக் கடலில் வீசப்பட்டன. இக்காலம் கி.பி.1620 ற்கும் கி.பி.1624ற்கும் இடைப்பட்ட காலமாக இருக்கலாம். கி.பி.1623-ல் பறங்கியரால் காணித் தோம்பேடுகள் எழுதப்பட்டதாகக் கருத இடமுண்டு. ஆனால் கி.பி.1645-ல் தொம் பிலிப்மல்கறிஞ்ஞா அவர்களால் திருத்தமான தோம்பேடுகள் எழுதப்பட்டன. அக்காலத்தில் நயினாதீவில் நிரந்தரக் குடிபதிகளாக விருந்தவர்களுக்குத்தான் நயினாதீவுத் தோம்பேடுகளில் காணிகள் காணப்படுகின்றன. போர்த்துக்கேயரது சமயம் இங்கே பரவவில்லை. ஆனால், இவர்கள் தங்கள் பெயர்களிற் சிலவற்றைப் பட்டமாகச் சிலருக்குக் கொடுத்துள்ளனர். கந்த உடையார் மகன் கதிர்காம உடையார், உலுவீசு கதிர்காம உடையார் என அழைக்கப்பட்டுள்ளார். நயினாதீவு 32 கோயிற் பற்றில் ஒன்றாக்கப்பட்டது.

## ஒல்லாந்தர் காலம்

ஒல்லாந்தர் காலத்தில் நயினாதீவுக் கடலில் சங்கு குளித்தற் தொழில் மிக விசேடம் பெற்றுள்ளது. அவர்கள் காலத்தில் நயினாதீவு கோவிற் பற்று நொத்தராகவும், கிராம வரி அற விடுபவராகவும் இராமச்சந்திரர் கதிர்த்தம்பி நியமிக்கப்பட்டார். போர்த்துக்கேயர் அழித்த கோயில் திரும்பச் சிறிதாகக் கட்டப்பட்டிருந்தது. அதையே ஒல்லாந்தர் அழிக்கமுற்பட்டனர் கட்டியகாலம் கி.பி.1788.கட்டுவித்தவர்: இராமலிங்கர் இராமச்சந்திரர். இவர்காலத்தில் கி.பி.1792-ல் ஒல்லாந்தர் நாகபூசணியம்மன் தேவாலயத்தை அழித்துச் சூறையாட வந்தனரெனவும். அவர்தான் ஒல்லாந்த இறப்பிறமாது சமயத்துக்கு உதவி செய்வதாகவும் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமவரியையும் அறவிட்டுக் கொடுத்தார். ஒல்லாந்தர் தமது பட்டத்தை இவருக்கு வழங்கி பிறான்சீக் கதிரித்தம்பி என அழைத்தனர். இவரது கையொப்பங்கள் எல்லாம் யாழ்ப்பாணக் காணிக் கக்தோரில் பிறன்சீக் கதிரித்தம்பி எனவே அமைந்துள்ளன. இறப்பிறமாது சமயமே புரட்டாஸ்தாந்து மதமாகும். ஒல்லாந்தர் காலத்திற்தான் நயினாதீவில் புரட்டஸ்தாந்து மதத்துக்குரிய ஒரு நிலையத்தை அமைக்க விரும்பினார்களோ யான் அறியேன். ஆனால், தற்போது ஒரு இடம் நயினாதீவு 5-ம் வட்டாரத்தில் இருக்கிறது. ஆயினும், தற்போது அச்சமயத்தைப் பின்பற்றுபவரெவருமில்லை. இவர்கள் காலத்திற் தான் தூத்துக்குடி முஸ்லிம்கள் நயினாதீவில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். தென்னந்தோட்டங்கள் அமைத்தனர். பள்ளிவாசல் ஒன்றையுமமைத்தனர் எனத் துணிந்து கூறலாம்.

## ஆங்கிலேயர் காலம்

2-3-1815இன் தான் இலங்கை முழுவதும் ஆங்கிலேயரின் ஆளுகையின் கீழ் வந்தது. நயினாதீவு வடமாகாணத்தில் யாழ்ப்பாணப் பெரும்பிரிவில் தீவுப்பகுதி மணியகாரனின் நிர்வாகத்தின் கீழ் ஒரு பகுதியாக அமைந்தது. பரிபாலனத்துக்காக உடையாரும் விதானையாரும் நியமிக்கப்பட்டனர். பிற்காலத்தில் மணியக்காரன் முறை மாற்றமடைந்து தீவுப்பகுதிக் காரியாதிகாரியின் கீழ் நிர்வாகம் மாறியது. விதானையென்ற ஒரு தலைமையின் கீழ் பொதுமக்களது விவகாரங்களும் அரசினரின் விவகாரங்களும் அமைந்தன. கிராமச் சங்கமுறை உருவாகியத. மக்களாற் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் கிராமச் சீர்திருத்தங்களில் ஈடுபட்டனர்.

## சுதந்திர காலம்

4-2-1948-இல் இலங்கை சுதந்திரமடைந்தவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவு தீவிரமாக முன்னேற்றமடைந்தது. ஸ்ரீநாகபூஷணி அம்மன் தேவாலயமும், ஸ்ரீநாகவிகாரையும் மிகவும் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டன. தற்போதைய காலத்தில் நிகழ்ந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சிகள் ஸ்ரீநாக பூஷணியம்மனின் திருத்தேர் அமைப்பும், நயினாதீவு யாத்திரிகர் அன்னதான சபையாரின் அமுதசுரபி மண்டபமுமாம்.

இன்றுவரை நயினாதீவு தனது கடந்தகாலச் சரித்திரத்தை நினைவூட்டித் தனது எதிர்காலச் சரித்திரத்தை மிகச் செழிப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

## நயினார் பட்டர்

இவர்காலம் கி.பி. 3-ம் நூற்றாண்டெனக் கொள்ளலாம். நாகபூஷணி அம்பாளின் பூசை செய்வதற்காக மாநாய்கன் என்னும் வணிகராற் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வரவழைக்கப்பட்டார். பட்டர் மரபிற் பல மாற்றங்கள் உண்டு. அவையாவன: சம்மந்தப்பட்டர்,வையக்கரைப்பட்டர், பிள்ளையார்பட்டர், அத்தியனப்பட்டர், பாம்புக்குட்டிப்பட்டர் என ஐம்பெரும் பிரிவாம். நயினார்பட்டர் பாம்புக்குட்டிப் பட்டரின் மரபினராகும். பட்டர் என்றால் அம்பட்டரென நினைத்து நயினாதீவில் அம்பட்டர்களும் வாழ்ந்தார்களெனக் கூறுவது முரணானதாகும். நயினார்பட்டரின் 20-ம் சந்ததியினரான இளையதம்பி உடையாரே பட்டர் மரபிலுள்ள ஸ்ரீநாகபூஷணி பூசை செய்த கடைசி அருச்சகராவார். நயினார் பட்டர் குடியிற்பிறந்த காணியே தற்போது 7ம் வட்டாரத்தில் பட்டர்வளவு என அழைக்கப்படுகிறது. தற்காலம் அக்காணியில் திரு.வி.எஸ்.நாகலிங்கம் அவர்கள் இருக்கிறார்கள். நயினா பட்டரின் சந்ததியாரே தற்கால நயினாதீவு ஸ்ரீவீரகத்தி விநாயகராலயம் பிரதம குரு சாம்பசிவக் குருக்களின் வம்சாவழியினராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடியரசன் -மீகாமன்

கி.பி.2-ம் நூற்றாண்டில் வெடியரசன் என்னுமரசன் தீவுப்பகுதிகளை அரசாண்டான். அவனது மனைவி நீலகேசி. அக்காலத்திற் கண்ணகியின் காற்சிலம்புக்குத் தேவையான நாகரத்தினம் வாங்க மீகாமன் என்னும் வணிகனொருவன் சோழவரசனின் உத்தரவு பெற்று இன்னும் பல வேலையாட்களுடனும் நயினாதீவை நோக்கி வந்தான்.

வெடியரசனின் இராசதானி நெடுந்தீவு. வெடியரசனின் இராசாப்பிரதிநிதிகளில் ஒருவன் நயினாதீவில் இருந்தான். அவன் மீகாமனை நயினாதீவில் இறங்கவிடாமற் தடுத்து அவனது வரவை வெடியரசனுக்கு அறிவித்தான். மீகாமன் வெடியரசன் சமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டான். மீகாமன் நாகரத்தினம் வாங்கவந்ததாகக் கூறியும் வெடியரசன் கோபத்துடன் மீகாமனுடன் சண்டை செய்தான். போர் நடப்பதாக எண்ணிய நீலகேசி தனது மைத்துனருள் ஒருவரான வீரநாராயண தேவனுக்கு விடயத்தைத் தெரிவிக்க அவன் வந்து ஆராய்ந்து விடயத்தை அறியாமல் மீகாமனுடன் சண்டை செய்தான். அச்சண்டையில் வீர நாராயணன் மடிகின்றான்.

வெடியரசனின் ஏனைய சகோதரர்களான விளங்கு தேவன், போர்வீரகண்டன், ஏரிலங் குருவன் ஆகிய மூவரும் தத்தம் சேனையுடன் வந்து மீகாமனுடன் சண்டை செய்கிறனர். மீகாமன் சரணடைகின்றான். மீகாமனை வெடியரசனின் முன்கொண்டு செல்ல அவன தான் வந்த நோக்கம் நாகரத்தினம் பெறவேயென்றும். நாட்டைப்பிடிக்கவல்ல வென்றும் கூறுகிறான். வேண்டிய பெறுமதியைப் பெற்றுக்கொண்டு மீகாமனுக்கு நாகரத்தினத்தைக் கொடுங்கள் என வெடியரசன் கூறத் தம்பிமார் அப்படியே செய்கின்றனர். மீகாமன் சோழநாடு சென்றடைகின்றான். இச்சம்பவம் மிகைப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டதாகக் கருத இடமுண்டெனினும் முற்காலத்திற் பண்டமாற்று முறையில் வியாபாரக் கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற தென்பதை வணிகநூல்கள் வற்புறுத்திக் கூறியுள்ளன. இக்காலத்திற் கூட இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வியாபார நோக்கமாகப் பலர் வருவதையும். இங்கிருந்து போவதையும் தடுக்க இலங்கை அரசினர் முயலுவதைப் போல வேடியரசனும் தனத நாட்டில் அந்நியர் அத்துமீறிப் பிரவேசிப்பதைத் தடுத்திருக்கலாம்.

## பாம்பு சுற்றியகல் - கருடன்கல்

முன்னொருகாலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையை ஒரு நாகம் பூசித்து வந்ததாம். ஒருநாள் அந்நாகம் அர்ச்சனை செய்தற்பொருட்டுப் பூவொன்றை வாயில் வைத்துக்கொண்டு புளியந்தீவிலிருந்து நயினாதீவு நோக்கிக் கடலில் வரும்வழியில், ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டஞ்சிய நாகம் கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக்கொண்டது. கருடன் அந்நாகத்தைக் கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயிருந்த கல்லொன்றின் மீதிருந்தது. அவ்வேளையில் அக்கடல் வழியாக மரக்கலத்திற் சென்ற மாநாய்கன் என்ற வைசியன், அந்நாகத்தின் பயத்தை யறிந்ததுமன்றி, அதன் வாயில் ஒரு பூ வைத்திருப்பதையுமுணர்ந்து, கருடனைப் பார்த்து "தேவிபூசைக்குச் செல்லும் நாகத்தை மறியாதே" எனக்கூறினான். உடனே கருடன் "உனது செல்வத்தைக் கொண்டு வந்து நாகம்மாளுக்குக் கொடுப்பாயாயின் நான் விலகுவேன்" எனக் கூறியது. வணிகன் உடன்படக் கருடன் விலகியது. நாகம் தனது நன்றியுணர்ச்சியைத் தெரிவித்து நயினாதீவையடைந்தது.

வணிகன் தனது நாட்டுக்குச் சென்று மனைவிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தவற்றைக் கூறினான். அன்றிரவு இருவரும் நித்திரை கொள்ளும்போது ஒரு பேரொளி தோன்றி அவர்களது கண்களைக் கூச வைத்தது. அவர்கள் எழும்பிப் பார்த்தபோது நாகரத்தினங்களைக் கண்டு வியப்புற்று நயினாதீவுக்கு வந்து தீவின் வடகீழ்த்திசையில் ஏழுவீதிகளும். இராசகோபுரமும் அமைந்த ஒரு பெரிய ஆலயமும் கட்டுவித்தனர். பாம்பு சுற்றியகல் பாம்புசுற்றிக் கல்லெனவும். கருடன் இருந்தகல் கருடன் கல்லெனவும் அழைக்கப்படுகின்றன.

## வீராசாமிச் செட்டியார்

இவர் நாகபூஷணி தேவாலயத்தை அமைப்பித்த மாநாய்கரது நான்காம் சந்ததியாரென நாகதுவீப மகத்துவம் என்னும் நூல் கூறும். இவர் வியாபார நோக்கமாகப் பிரயாயஞ்செய்யும் காலங்களில் நாகபூஷணி அம்பாளையும் தரிசிப்பது வழக்கம். இவருக்கு அம்பாள் ஐந்து தலை நாகபடத்தின் கீழ் நாகேந்திரனாகக் காட்சியளித்தாள். அப்போது பின்வரும் பாடலை அவர் பாடியுள்ளார்.

### பாடல்

அண்டகோடிக ளெல்லா மொரு தலையில்
நீ சுமந்தரு ளிதலினா லல்லவோ
அம்புயப் பிரமன் படைக்கத்
தொடங்கினான்
அகிலமும் சிதைவிலாமல்
புண்ட ரீகலோசன் பாதுகாக்கின்றான்
புரந்தகன் சங்கரித்துப்
புகழ் மருவுகின்றான் இணங்கி நீதயைசெய்து
அருள் புரியாதிருந்தனை யெனில்
எண்டிசைகளும் புவியுங்கிரிகளும்
எப்படி நிலைத்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்விதத்தினில் அந்த மூவர் தொழிலீ
டேறு மீசனரவிந்த பாதத்
தொண்டர் கணிறைந்திடு மிலங்கை
நயினாதீவு துதிசெய்யும் படியமர்ந்தோய்
சுரலோக லோகேந்திர நரலோக புவனேந்திரர்
தொழவேறு நாகேந்திரனே.

அக்கட்சியைக் கண்ட வீரசாமிச் செட்டியாரும் தனது பணத்தைக் கொண்டு கோயிற் திருப்பணிகளைச் செய்வித்துள்ளார்.

## நயினாதீவுக் குடி

நாகர்வாழ்ந்த காலத்திலிருந்தே நயினாதீவில் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஏறக்குறைய பதினாலாயிரம் வருடங்களுக்கு முன்பே நயினாதீவில் குடியேற்றமிருந்திருக்க வேண்டும். அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட நாகபூஷணியம்மன் மூலஸ்தானத்திலுள்ள நாகம் பதினாலாயிரம் வருடங்களுக்கு மேற்பட்டதெனக் கட்டிடக்கலை. சிற்பக்கலைப் பொறியியல் நிபுணரான திரு.எம்.நரசிம்மன் அவர்கள் கருதுகிறார். ஆகவே. நாகர் குடியேற்றம் பதினாலாயிரம் வருடங்களுக்கு முன்னெனக் கருதலாம். மக்களில்லாமல் வழிபாடு இருந்திருக் முடியாது.

கி.மு.563ற் பிறந்து கி.மு.483ம் ஆண்டிற் கிடையில் வாழ்ந்த புத்தபெருமான் குலோதரன் மகோதரன் என்பவர்களது அரசபீடச்சண்டையில் சமாதானஞ் செய்திருக்கிறார். புத்தபெருமான் தனது 35-ம் வயதில் இருந்து 80-ம் வயது வரை. யாத்திரைகளிலும் தர்ம உபதேசங்களிலும் பஞ்சசீலக்கொள்கைகளைப் பரப்புவதிலும் தனது காலத்தைச் செலவிட்டுள்ளார்.

அவர் சரித்திர காலந்தொட்டேற்பட்ட நாகவழிபாட்டை ஆராய்வதற்காகவும். அதைதாமும் வழிபடுவதற்காகவுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகதீவுக்கு வந்திருக்கிறார். அப்போது தான் குலோதரன், மகோதரன் என்ற அரசர்களுக்கிடையே ஏற்பட்ட அரசபீடத்தகராறிற் சமாதானஞ் செய்துள்ளார். அப்போது அரசர்கள் வாழ்ந்தார்களென்றாற் குடிமக்கள் இருந்தேயாக வேண்டும். மணிமேகலை. மணிமேகலா தெய்வத்தால், மணிபல்லவத்துச்சுக் கொண்டுவரப் பட்டாளென மணிமேகலை யென்ற நூல் கூறும். மணிமேகலையின் காலம் கி.பி.2-ம் நூற்றாண்டு. சீத்தலைச்சாத்தனார் என்னும் பெரும் புலவரே மணிமேகலை யென்ற நூலின் ஆசிரியராவார். அவர் கடைச்சங்க காலப்புலவர். சேரன் செங்குட்டுன் என்ற பேரரசனின் சிறந்த நண்பர். மலைவளங்காணச் சென்ற சேரன் செங்குட்டுவனுக்கு கண்ணகியால் மதுரையடைந்த கேவல நிலையை விளக்கினார். சேரன் செங்குட்டுவன் காலம் கி.பி 2-ம் நூற்றாண்டெனக் கலைக்களஞ்சியம் 5-ம் தொகுதி எடுத்தியம்புகின்றது. ஆகவே மணிமேகலை மணிபல்லவத்துக்கு வந்தகாலம் கி.பி.2-ம் நூற்றாண்டெனவே கூறலாம்.

ஒரு விவாகமாகாத கன்னிகையைத் தற் பாதுகாப்பின் பொருட்டும், கடவுள் வழிபாட்டின் பொருட்டும் கொண்டுவந்து விடுவதாயின் சான்றோன் குடியிருக்கும் தொல்பதிகளையே தெய்வங்களும் விரும்பும். ஆகவே, மணிமேகலை காலத்தில் கி.பி.2-ம் நூற்றாண்டிற் சான்றோர் குடியிருக்கும் தொல்பதியாக மணிபல்லவமிருந்திருக்கிறது.

கி.பி.5-ம் நூற்றாண்டளவில் நயினார் பட்டருடன் அவரின் இனசனங்களும் மனைவி மக்களும் வந்திருக்கவேண்டும். ஒரு பிராமணக் குடும்பம் குடியேறினால் அவரோடு பலர் வருவது இயற்கையே. அதன் காரணமாகவே பிற்காலத்தில் பிராமணக் குடும்பம் 67 இருந்திருக்கிறது. பிராமணத்தீவு என்றும் அழைக்கப்பட்டது. நயினார் பட்டரும் கண்ணப்பன் என்ற வேளாளன் பிரபுவும் வந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடன் அவர் மனைவி, பிள்ளைகள், இன சனங்களும் வந்திருக்க வேண்டும. அவர்களும் நயினாதீவில் குடியேறி இருக்கிறார்கள். கண்ணப்பனால் கட்டு விக்கப்பட்ட கோவிலே நயினாதீவு சிறு சல்லி என்னும் காணியின் வட கரையோரத்தில் இருக்கும் ஐயனார் கோயிலாம். அது ஓலையால் வேயப்பட்டுக் காலகிரமத்தில் திருத்தப்பட்டது.

## மரக்கலமோட்டிய மங்கை தையலியாசி

நயினாதீவு குடியேற்றப் பிரிவிலும், பரிபாலனப் பிரவாலும், வர்த்தகப் பிரிவிலும் அதிக அக்கறை கொண்டவர் சிற்றரசி தையலியாசியாவர். இவரது காலம் 16-ம் நூற்றாண்டெனலாம். இவர் முடிநாகர் மரபிற் பிறந்தவரென அறியக்கிடக்கின்றது. இவரது கணவன் இராமகிருட்டின முதலியார் அல்லைப்பிட்டியைச் சேர்ந்தவர். இவர்கள் குடியிருந்த காணி ஆசியான் பத்தி என அழைக்கப்படுகிறது. நயினாதீவு 4-ம் வட்டாரத்தில் இக்காணி இருக்கிறது. இதில் இப்போது வீடில்லை.

தையலியாசி முத்துக் குளிப்பித்தலிலும், உள்நாட்டு-வெளிநாட்டு வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளார். இவரது மரக்கலங்கள் கட்டிய துறைகளே தற்காலம் உவான்துறை, துடரித்துறை, வாகையடித்துறை, படகுத்துறை என அழைக்கப்படுகின்றன.

இவரது மரக்கலங்கள் இந்தியாவின் அக்காலப் பிரபல துறைமுகங்களான காவிரிப்பூம்பட்டினம், பாசிப்பட்டினம், புதுப்பட்டினம், நாகபட்டினம், அம்மாபட்டினம் முதலிய இடங்களுக்குச் சென்று ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்திற் பெரும் பொருளீட்டின.

இவரது மரக்கலமொன்று புதுப்பட்டனத்தில் இருந்து ஒரு மணத்தம்பதிகளையும், அவரது இனபந்துக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றிக்கொண்டு நாகபட்டினத்துக்குச் சென்றது. நாகபட்டினத்தின் துறைமுகத்தில் மந்தாக பரிசீலனை செய்பவனாகிய நயினான் துலக்கன் என்பவன் மந்தாசின்றி மணமக்களை ஏற்றிவந்தது தவறெனக்கூறி மாலுமியிடம் குற்றப்பணம் கேட்டான். மாலுமி பணங் கொடுக்க மறுக்க நயினான் துலுக்கன் மரக்கலத்தைப் பறிமுதலாக்கினான். இச்சம்பவம் மாலுமி மூலம் தையலியாசிக்கு அறிவிக்கப்பட்டது. தையலாசி உடனே இந்தியா சென்று அப்போதிருந்த அரசனிடம் பின்வரும் பாடலைப் பாடிக் கொடுத்தாள்.

## செய்யுள்

பொட்டுப் பொடுக்கெனப் புதுத்தாலி
கட்டிப் புதுப்பட்டணத்தான்
வட்டம் பிடித்து வருந்தோணி தன்னை
வழிமறித்துக்
கட்டி நங்கூரமதிட்டு மந்தாசினைக்
காட்டுமென்று
தட்டிப் பணம் பறிப்பான் நயினான்
துலுக்கன் சதிகொடிதே.

உடனே அரசன் தையலியாசியின் மரக்கலத்தைக் கொடுக்குமாறு நயினான் துலக்கனுக்குக் கட்டளையிட்டான். அரசன் பெண்களது உற்சாகத்தைக் கண்டு மேலும் அவர்களைக் கடல் கடந்து வியாபாரஞ் செய்ய ஊக்குவித்தான் போலும்.

தையலியாசியின் முதலாம் மகன் தியாகுடையராகவும், இரண்டாம் மகன் சுந்தரமுதலி நயினாதீவு முதல் முதலியாராகவும் நியமிக்கப்பட்டனர். இது கி.பி.1675-ம் வரையிலாகும். முதலியாரின் கடமைகள் பின்வருமாறு:- தத்தம் பிரிவுகளில் நடக்கும் சங்கதிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரித்துக் காலத்துக்குக் காலம் அறிக்கைப் பத்திரம் அனுப்புவதும். அந்தப் பிரிவுகளில் எவ்வேலைகள் நடாத்த வேண்டுமோ அவற்றை நடாத்துவித்தலுமேயாம்.

கி.பி.1658ல் தையலியாசி காலத்தில் நயினாதீவு குடிசனக் கணக்குப் பின் வருமாறு. இதைத் தையலியாசி பாட்டாகப் பாடிவைத்திருக்கிறார்.

பார்ப்பாரிற் புரோகிதரிற் குடியிரண்டு அதிற்
பதிந்த குடிபார்ப்பாராய் அறுபத்தைந்து
காப்பான வேளாளர் குடி ஐயெட்டுக்
கடற்பிழைக்கும் பரதவரின் குடி மூவைந்து
கோப்பான கோல்லர் தச்சர் குடியோர் மூன்று
ஈரங்கொல்லி குடி மூன்று ஏனாதி குடியிரண்டு
தோப்பேறிக்குடி பதின்மூன்று அந்நியர்குடி யேழு
தொகை நயினைநகர்க்குடி நூற்றைம்பதாமே.

இக் குடிகளில் பிராமணக் குடிகள் 67 இருந்ததைக் காண்க. ஆகவே. ஆதியில் இருந்து வேதியர்கள் பரம்பரையாக குடிமக்களில் அதிகமானவர்களாக இருந்தார்களென்பதும். இத்தையலியாசி. முடிநாகரும் நயினார் பட்டர் சந்ததியும் கலந்த பெற்றோருடைய மகளெனவும் அறியக் கிடக்கின்றது. "அதிற் பதிந்த குடி பார்ப்பாராய் அறுபத்தைந்து" என்ற சொற்றொடர் நாக - பட்டர் இனக்கலப்பால் ஏற்பட்டதெனச் சோதிட கலாநிதி சு.ஐயாத்துரை அவர்களின் கருத்தாகும்.

தையலியாசி தனது மகன் சுந்தரமுதலியின். முதலிப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றுகையில் நயினாதீவு குடிமக்களை இவ்வாறு பரிபாலனஞ் செய் எனச் செய்யுள் மூலம் விளக்குகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்யுட்கள்

1. பார்ப்பார்க்குப் பச்சரிசி நெய் கொடுத்துப்
பணிசெய்வி பாறையர்க்கு
நீர்ப்பானைச் சோறு உரத்த சத்த மொடு
காலடியும் நினைவுக்குச் செய்
சேர்ப்பாகு நளம்பட்கு கையடி செய்தொரு
சோறு செலுத்து தோணிக்
காப்பாளரை மதித்து உரிமை சொலத்
தினமும் கடமை செய்யக் கடனாவரே.

2. வண்ணனைப் பணிகுறையில் வருத்ததன்றிக்
கண்ணென நீ மதி அம்பட்டக்
கண்ணனை முதல் மகனாய்க் கருது
நலம் கூறாதே கம்மாளர்க் கோர்
பண்ணான பரிவு கொடை முகமலர்ச்சி செய்
பணிக்குப் பழுதுண்டாயின்
எண்ணாது அவருறவிற் கூறு செய விழிதேடு
இணங்கு வாரே.

3. வடசிறையை வருந்தாது தொழில் செய்வி
மங்கையரை மானபங்கம்
தொட நினைவு செய்யாதே படையாச்சி
மக்களை
நீ துணையாகக் கொள்ளு
அடைவுள நம்பரதேசிக் கவதிசெய
நினையாதே
அங்காமாலைப் புலைடவியுளர்
அனுதினமும் நமது பணி
குறையாது பொருளே சேர்ப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வடசிறை கோவியமே பரதேசி
மடப்பள்ளி யோர்
இடமுளங்காமாலை வேளாளர் இந்
நெடுந்தீவு மென்பார்
படவுதுறைய ரோரங்காடி
பாம்பனிடையரோடு
திடமுள கண்ணப்பன் மேவிந்த
ஊர்வகை தேர்ந்தறியே.

5. மடப்பளியாற் கிதமுரைநீ மட்டுவாள்
தனிலிருந்து வந்தபேர்க்கு
நடப்போதும் செய்யாதேயுனை மதியார்
பாம்பன் நகர் வாசிகட்கோர்
இடுக்கணும் செய்யாதே இவர்
கொலைக்கஞ்சா
எயினர், இந்நெடுந்தீவு
அடுத்தவரை ஆதரவு செய்து முத்
வேளாளர்க் கமைச்சு மீய்வாய்.

6. அமைச்சியலும் வேளாளன் அங்காடி
குலம்
புன்னகை சேர்ந்து பண்ணைக்
கமச் செயலாற்றிருந்திடினும் எம்மூரில்
அவன் குலமே கலப்பை பூட்ட
எமக்குமது உவப்பாகுமென்மகனே சுந்தர
நீ
இராச வாட்கை
நமக்குள தென்றெண்ணாதே யூர்
நாகாயீஸ்வரிக்கென்று நம்பவாயே.

இப்பாடல்கள் செய்யட்களுக்குரி... இலக்கணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையாத போதிலும் தையலாசியின் கல்வி மேம்பாட்டையும் நேர்மை. நீதி. அரசியற் கொள்கை என்பவற்றையும் எடுத்துக்காட்டுகின்றன.

தையலியாசியின் பாடலிற் காணப்படும் தோப்பெறிகுடி 13 எனக்குறிப்பிட்டது நளவரேயாவர். இவர்களின் சந்ததியார் தற்போது நயினாதீவில் வசிக்கவில்லை. ஊர்காவற்றுறையிலும். ஆனைக்கோட்டையிலும் வசிக்கிறார்கள்.

## நயினாதீவுப் பிராமணர்

தற்காலத்திலுள்ள நயினாதீவுப் பிராமண மரபினர் கி.பி.1808ல் இராமச்சந்திரர் கதிர்த்தம்பி நொத்தாரினால் நயினாதீவு நாகபூஷணி தேவஸ்தான நித்திய பூசைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

## வேளாளர்

காலத்துக்குக் காலம் விவாகங்காரணமாகப் புங்குடுதீவு. நெடுந்தீவு. அனலதீவு. எழுதுமட்டுவாள். முகமாலை முதடலிய இடங்களில் இருந்தும் பலர் வந்திருக்கின்றனர். இவர்களும். தையலியாசிகாலத்தில் இருந்த 40குடும்பங்களும். பார்பபாராய் இருந்த 67 குடும்பங்களும் ஒன்றோடொன்று விவாகக் கலப்பினால் இணைந்து இன்று வாழ்கின்றனர்.

## பரதவர்

இங்கேயுள்ள பரதவ குடும்பங்களில் 15 குடும்பத்தினர் தையியாசி காலத்தவராயினும் பிற்காலம் உலுவீசு கதிர்காம உடையார் காலத்தில் கி.பி.1680 வரையில் உடையாரால் செங்கைக நகரிலிருந்து கூட்டி வந்த குடும்பத்தினரும் இருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசாரிமார்

தற்போதைய ஆசாரிமார்களில் மூன்று குடும்பத்தினர் தையலியாசி காலத்தவர். பிற்காலத்தில் இராமலிங்கர் இராமச்சந்திரராலும் உலுவீசு கதிர்காமவுடையாராலும் கொண்டுவரப்பட்டவர்களும் இருக்கிறார்கள்.

## படையாச்சி மக்கள்

இவர்களில் நயினாதீவு வடக்கில் இருப்பவர்களிலனேகர் கி.பி.1670 வரையில் படகுதுறையில் வந்திறங்கிக் குடியேறியமக்களாவர். தெற்கில் இருப்பவர்கள் வேட்டமங்கலத்தில் இருந்து உலுவீசு கதிர்காம உடையாராற் கொண்டவரப் பட்டவர்களே. இவர்களிற் சிலர் இஸ்லாம் மதத்தையும் தழுவியுள்ளார்கள்.

## சலவைத்தொழிலாளர்கள், சிகையலங்காரத் தொழிலாளர்கள்

இவர்கள் தையலியாசி காலத் தவரே. மணவினையின் காரணமாகப் பலவூர்த் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள்.

## பறையர்

தையலியாசி காலத்தில் ஏழு குடும்பங்களே இருந்தனர். ஆனால், பிற்காலத்தில் இளையாச்சி இராமச்சந்திர உடையார், கதிரித்தம்பி நொத்தார், மணியக்காரன் விஸ்வநாதன், கதிர்காம உடையர் மகன் லோயுத உடையார், இராமலிங்கன் காசிநாதன், தையல் பாகன் சின்னத்தம்பி விதானை என்பவர்களால் மந்தவில், சாவகச்சேரி, கச்சாய், அனலைதீவு முதலிய இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டவர்களாவர்.

ஒரு வரலாற்றுப் பின்னணியில் சமயகோட்பாடுகளையும் குறிக்காமல் இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால நயினாதீவில் இருந்து. பௌத்த. இஸ்லாம். கறீஸ்தவ சமயங்கள் எல்லாவற்றுக்கும் கோயில்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் விசேடகாலங்களிலும். பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் தினந்தோறும் வந்து சகல கோயில்களிலும் அஞ்சலி செய்கின்றனர். ஆகவே இலங்கையில் சகல மதத்தவர்களுக்கும் சாந்தியளிக்கும் மிடமாக நயினாதீவு அமைந்திருக்கிறது.

நயினாதீவு வரலாற்றில் இடம்பெற வேண்டிய ஆயிரக்கணக்கான விஷயங்கள் இருந்தபோதிலும் விரிவஞ்சி விடுக்கின்றேன். எதிர்காலத்திலும் இவ்வகையான மலர்களில் தொடர்ந்து எழுதுவோமாாக.

## வரலாற்றுப் பின்னணியை எழுத உதவிய நூல்கள்


1. **கலைக்களஞ்சியம்**
   (சென்னைத் தமிழ்வளர்ச்சிக் கழகம்)
2. **TAMIL LEXICON**
   (Madras University)
3. **இலங்கைச் சரித்திரம்**
   எஸ்.டபிள்யு.கொடிறின்றன்
4. **யாழ்ப்பாணச் சரித்திரம்**
   முதலியார் செ.இராசநாயகம்
5. **மணிமேகலை**
6. **மகாவம்சம்**
7. **இந்தியா**
   (எச்.சி.உ ரோலின்சன் சீ.ஐ.இ)
8. **நயினாதீவு ஸ்ரீ நாகபுஷணி அம்மன் கோவில் தேர்த்திருப்பணிச் சபை மலர்**
   (முதலியார் குலசபாநாதன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நாகதுவீப மகத்துவம்
(சோதிட கலாநிதி சு.ஐயாத்தரை)
10. நயினை ஸ்தல வரலாறு
(சோதிட கலாநிதி சு.ஐயாத்தரை)
11. நயினாதீவு பரம்பரை
(சோதிட கலாநிதி சு.ஐயாத்தரை)
12. சோதிட கலாநிதி 1947ல்
மதுரையிற் சேர்த்த ஓலை ஏடுகள்
13. நயினாதீவு காணித் தோம்பேடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அம்பாள் துணை

நயினாதீவு

# நாகேஸ்வரியம்மை பதிகம்

மூலமும் உரையும்

மூலம் : வரகவி சி.முத்துக்குமாருப் புலவர்

உரை : சோதிட கலாநிதி சு. ஐயாத்துரை

நயினாதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முகவுரை

ஒவ்வொரு மனிதனும் ஏதாவதொரு நட்சத்திரத்திலேயே பிறக்கின்றான். அவனது வாழ்க்கையில் இராகு மகாதொசையோ அல்லத கேது மகாதொசையோ அல்லது இரண்டுமோ நடைபெற்றேயாகவேண்டும். மற்றைய தெசைகள் நடைபெறும்போது இராகு கேது புத்திகள் சித்திரங்கள் வந்தே போகின்றன. இக்காலங்களில் பொருளிழந்து புத்தியிழந்து புத்திரரிழந்து வாழ்வோர் பலர். இருக்க வீடின்றி. உத்தியோகமின்றி. உடம்பு வாடி மனமுடைவோர் சிலர் சமூகத்திலிருந்து பிரிந்து தன்னந்தனியானாக வாழ்வோர் அனேகர். புத்திரப்பேறேயின்றி மலடர்களாய் வாழ்ந்து மடிவோர் சிலர்.இவர்களில் இன்புற்று வாழ வழிகாண முனைந்தவர்கள் நயினை நாகேஸ்வரி வழிபாடே அதற்கு மாற்றம் எனக்கண்டு அலைகடல் தாண்டி அன்னையின் அடிபரவி அருள் பெற்றனர். அவ்வாறு அருள்பெற வந்தவர்கள் அன்னையின் மீது அரிய பிரபந்தங்களையும் தனிப் பாடல்களையும் ஆக்கிச் சென்றுள்ளார்கள். அவர்களில் முக்கிய இடம் வகிப்பவர் வராகவி சி.முத்துக்குமாருப் புலவர் அவர்கள். அவர்களது பதிகத்தை நான் முன்னொருமுறை பதிப்பித்தேன். பக்தர்கள் பலர் அப்பாகங்களுக்குப் பொழிப்புரையாவது எழுதித்தருவீர்களானால் எங்களுக்குத் தேவியின் திருவருளை நுகர வழியுண்டாகும் என விருப்பினர் அவர்கள் நோக்கத்தை நிறைவேற்று முகமாகவே இத்தொண்டில் ஈடுபட்டுள்ளேன். இப்பாக்ளை நன்கு பொறுமையுடனும். அன்புடனும் படிப்பவர்கள் இவ்வுலகிற் சகல இன்பங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதோடு வீடுபேறும் அடைவாகளென்பது திண்ணம். அதுவுமன்றி அட்டகிரகச் சேர்க்கை, ஆறுகிரகச் சேர்க்கை முதலிய தோஷங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்ற இந்தக்காலத்திலே எத்தீங்குமின்றி வாழ்வார்கள். இராகு, கேது, தெசை, புத்தி, சித்திரங்கள் நடப்பவர்கள் இப்பதிகத்தைத் தினமும் பாராயணம் செய்துவந்தால் அக்கிரகங்களினால் உண்டாகுந் திமைகளிலிருந்து நீங்குவார்கள். புத்திரப்பேற்றை விரும்புபவர்கள் தினமும் பாராயணம் செய்து புத்திரப் பேறடைந்து புத்தென்னும் நரகத்திலிருந்து விடுபடுவர் என்பது திண்ணம்.

**'சோதிட விலாசா'**
**சு.ஐயாத்துரை**
நயினாதீவு
சோதிடகலாநிதி
30-06-1965.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மதிப்புரை

நயினை நாகேஸ்வரி அம்பாள் அருள மிக்க அற்புதத் தெய்வத்திருத்தாய் ஆவாள். பக்தர்குழாம் கடல் கடந்து காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி அன்னையவளைத் தரிசிக்க எத்துணை ஆர்வத்தோடு செல்லுகின்ற தென்பதனை நாம் எடுத்தியம்ப வேண்டிய அவசியமில்லை. பண்டுதொட்டு இன்றுவ ரை பற்பல பாவலர், பக்தர் அவள்மேற் பாடியிருக்கும் பாடல் வரிசைகள் பிற்கால சந்ததியாருக்குக் கையளிக்கப் படவேண்டியன. இஃது அன்னையின் பக்தர் பெருங்கடனாகும். ஏட்டிற்கிடந்த பலபாக்கள் காற்றோடு காற்றாய், மண்ணோடு மண்ணாய் மறைந்தொழிந்து கரைந்து போகுமிக்காலத்தில் சோதிட வல்லுனர் **திரு.சு.ஐயாத்துரை அவர்கள்** வரகவி **திரு.சி.முத்துக்குமாருப்புலவர்** அன்னை மேற்பாடிய பாடல்களை அரும் பொக்கிஷமாகக் காத்து உரையும் வரைந்து தந்துள்ளார். அவருக்குச் சைவ உலகம் பெரிதும் கட்டுப்பாடுடையது. பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் சிவபுரம் செல்வாராகையால் அருங்கவி தந்த பாடலையும் உரைகளையும் ஒருங்கே ஓதிப்படித்து அன்னையின் அடியார்கள் பெரும் பயன்பெற அன்னை பராசக்தியை வேண்டுதல் செய்கின்றேன்.

பலாலி அரசினர்
ஆசிரியர் கலாசாலை
வசாவிளான்.
03-06-1965.

செந்தமிழ்மணி
பண்டிதர் பொ.கிருஷ்ணபிள்ளை
தமிழ்ப் பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## நயினாதீவு

# நாகேஸ்வரியம்மை

# பதிகம்

## (மூலமும் உரையும்)

---

சந்திரபூ ரணரத்ன தங்களோ டக்கிரிட
தண்ணின்ற தவழ வட்டத்
தனபதியை நிகர்மன்ன ரடிதொழச் சதுரங்க
தானை வெள்ளங்கள் சூழச்
சிந்துரப் பகைமைபிடர் பீடிகை யிருந்தெண்டி
சாமுகமு மேயிறைஞ்சத்
தேவேந்திர சுகமுற் றிருப்பவர்க ளுன்பாத
சேவைபுரி பவர்க ளன்றே
மந்திர காரண ரூபரூபாதி சிவ
மகமாயி புவன நேசி
வாலசுந்தரி கௌரி நயினைமா நகர்க்கண்
வைகியருள் செய்யு மொருதாய்
நந்துறு கரன்பிரம னங்கமணி கங்களொடு
நஞ்சணி பிறங்கு களமே
நாகமணியும் பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 1.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொழிப்புரை:** வலம்புரிச்சங்கைக் கையிலேந்தி, பிரமனுடைய அங்கஙகளோடு நஞ்சணியும் சிறப்பெய்த அவ்விடத்தே நாகமலையையும் அணியும் பரமனுடைய வாமபாகத்தை உமக்குரிய இடமாகக்கொண்டு, திருமந்திரங்களுக்குக் காரணியும் ரூபியும் ரூபிகட்கு ஆதிசக்தியும் மகாமாயியும் புவன மன்னுயிர்களால் நேசிக்கப்படுபவரும் என்றும் இளமை ததும்பும் சுந்தரியும் கௌரியும் நயினைமாநகர்க்கண் மேவியிருந்தருள் செய்யும் ஒப்பற்ற அன்னையுமாகிய சிவத்தன்மை கெழீஇய நாகேஸ்வரியம்மையே! நின் திருவடிகளுக்கு அருட்டொன்று புரியும் அன்பர்கள், உவாமதியனைய இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற தங்க இழைகளையும் குளிர்ச்சிபொருந்திய முத்தாரவட்டங்களையுமுடைய குபேரனையொத்த மன்னவர்களடிதொழ நாற்சேனை வெள்ளங்கள் புடைசூழ எட்டுத் திக்குகளிலிருந்து வந்து இறைஞ்சாநிற்ப, சிந்துரப் பொடி பொலிந்த விதானத்திலிருந்து என்றும் இந்திரபோகம் உய்த்திருப்பார்களன்றோ.

**விளக்கவுரை:** பல்வகைத் திருமேனிகள் கொண்டு அருள் பாலிக்கும் அம்மையின் அருட்சிறப்பும் அவர் உவந்து கோயில் கொண்டதனால் நயினைமா நகர் உற்ற அருட் பெருமையும் அவரடி பணிந்தார் பெறும் பேறும் ஈண்டு நோக்கற்குரியது.

சோடுற்ற நவரத்ன கும்பியும் மேலிட்ட
தொங்கலும் அகிலளாவிச்
செருகிட்ட கொண்டையும் சுட்டியும் மலர்க் கையால்
தொட்டிட்ட சிந்தூரமும்
தோடுற்ற கொந்தழக மரகதக் கொம்பமார்
துணைவிழியி லெழுதுமையும்
துகளற்ற வெண்டரள முருகு நற்பவளவாய்த்
துவருமொளிர் நளினமுகமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுற்ற செங்கமல பொற்பதமு மழகான
திருவுருவு மறிவினாலே
தெரிசிக்க வருடந்து நீடாயுளும் பெருஞ்
செல்வமுந்தர வேண்டு நீ
நாடுற்ற பலவளமு முறையுமெழில் நயினா
நகர்க்கண் மருவுங் கௌரியே
நாகமணியும் பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 2.

**பொழிப்புரை :** நவரத்தினங்கள் துணை துணையாக இழைக்கப்பெற்ற தலைக்கோலமாகிய கும்பியும். தோள் மேலிட்ட ஆடைத்தொங்கலும். அகிற்புகை அளாவி முடிக்கப்பெற்ற கொண்டைகளையும். சிந்துரப்பொடி பூசப் பெற்ற மலர்க் கையும் மரகத மணிகள் இழைக்கப் பெற்றதோடும் மையெழுதப் பெற்ற அழகிய துணை விழிகளும், குற்றமற்ற வெள்ளிய முத்தனைய பற்கள் விளங்கும் பவளம்போற் றுவர் வாயும். ஒளிநிறைந்த தாமரை முகமும், செந்தாமரையனைய பொற்பாதங்களுங் கொண்டு அழகிய தெய்வத் திருவுருவுந் தாங்கி. பல்வளமும் எழிலும் நிறைந்த நயினை மாநகர்க்கண் மேவியுறையும் கௌரி தேவியே! நாகம் அணியும் பரமர் பாகம் உவந்து உறையும் ஒப்பற்ற சிவநாகேஸ்வரியம்மையே! திருவருட்சக்தி உந்துவதினால் நுமை வணங்கும் அறிவுபெற்று அவ்வறிவினாலே நுமை வணங்க அருளும் அவ்வருட் கொடையினாலே அடியேற்கு நீடிய ஆயுளும் பெருஞ் செல்வமும் தந்து அருளுவீராக.

**விளக்கவுரை:** திருவருள் பாலிக்கும் அம்பிகையின் தோற்றப் பொலிவு முன்னடிகள் தோறும் சிறக்கின்றது. "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழா எனின்" என்று தெள்ளு தமிழ்த் திருமறை கூறியாங்கு பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினால் இறைதொழப் படவேண்டமென அறிவுறுத்தப்படுகின்றது. பக்தி மேன்மேலும் செலுத்துவதனாலே அம்மையின் அருட்பிரவாகத்திலே திழைத்தோர் நன்னர் நெஞ்சத்து இன்னசை வரய்ப்ப வேண்டிய வேண்டியாங் கெய்துவராகலின் அம்மையின் திருவுருவைத் தரிசிக்க அருளும் நீடாயுளும் பெருஞ்செல்வமும் கேட்கப் பெறுகின்றது. "எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியார் திண்ணியராகப் பெறின்" என்ற தெய்வத் திருமறையும் இதனை வலியுறுத்தும்.

ஆரணத் துபநிடத வக்கரத் தொனியாகி
யாகாய வட்ட மாகி
அறுகோண மிருகோண முக்கோண நாற்கோண
மாகிநிற மைந்து மாகி
காரணத் தருவாகி யருவாகி யாவுமாய்க்
காக்குமுன் பெருமை யெளிதோ
கருணைப்பிரவாகமா மானந்த வெள்ளங்
கசிந்தூறு பேராளியே
ஏரணைத்திடு மருதவேலிசூழ் நயினா
வெனும்பதி சிறந்து மேவும்
யாமள சௌந்தரீ கோமள சொரூபியே
ராச பரமேசு வரியே
நாரணற்கொரு சகோதரி யென்னவந் தருளும்
நாகபூஷணி நாராணீஇ
நாகமணியும் பரமர் பாமுறு மேகசிவ
நாகஈஸ்வரி யம்மையே.

**பொழிப்புரை :** கருணைப்பிரவாகமாம் ஆனந்த வெள்ளம் கசிந்தூறும் பேரோளியே! உழவுத் தொழில் மேற்கொண்ட மருதநிலம் சூழ்ந்த நயினாபதி சிறந்து விளங்க காரலணியாய்ப்ப பசுமைத் தன்மை மிகுந்த சௌந்தரீ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமளசொரூபி! இராசபரமேஸ்வரி! நாரணற்குத் தங்கையென வந்த நாகபூஷணி! நாராயணீஇ நாகமணியும் பரமர்தம் பாகம் பொருந்திய சிவநாகேஸ்வரியே! நீவிர் வேதாகம உபநிடத அட்சரங்களின்ஒலியாகவும், வட்டமாகிய ஆகாயம்போலவும் அறுகோணம் ஆர்க்கும் கால் போலவும் இருகோணம் நண்ணும் புனல் போாலவும்,முக்கோணமேற்கும் தீ போலவும், நாற்கோணம் நண்ணும் நிலம் போலவும், திருவுருவம் தாங்கிப் பொன் வெண்மை சிவப்பு, கருமை, தூமம் (புகை) என்னும் ஐவகை நிறங்களுமாகியும், உரூபியாகியும் அரூபியாகவும் அவை நிறைந்து நீரின் கட் சூடு போல யாவுமாகியும் நின்று புவனங்காக்கு முன் பெருமை யெளிதானதன்று.

**விளக்கவுரை:** "நாற்கோணம் பூமிபுனல் நண்ணுமதி யின்பாதி, ஏற்குமணல் முக்கோணம் எப்போதும் - ஆற்கும், அறுகோணங் கால் வட்டம் ஆகாயம்" என்றும், "பொன்பார் புனல் வெண்மை பொங்கு மனல் சிவப்பு வன்கால் கருமை வளர் வான்றூமம்" என்றும் உண்மை விளக்கம் கூறியாங்கு ஐம்பூத வடிவாயும் அவற்றின் வண்ணமாயும் தோற்றமுறும் அம்மை "பாவையென மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்கே" யாம். ஐம்பூதங்கள் தம்மையும் தம்மைச் சார்ந்த பொருட்களையும் விளக்குவதோடு அவற்றிற்கு வெளியேயும் விளங்குவதுபோல அம்மையின் அருட்பிரகாசமானது ஆன்மாவையும் அவற்றைச் சார்ந்தவைகளையும் விளக்குவதோடு அவற்றையும் கடந்தும் நின்று பிரகாசித்து அருள்பாலிக்கும் என்பதாயிற்று.

சக்திபை ரவிகௌரி அக்கணியு முக்கணீ
சடாதரி சடாட்ச ரத்தி
சங்கரி சுமங்கலி மதங்கியரு ளம்பிகை
சவுந்தரி சண்ட சண்டி
உத்தமி பராபரை மனோன்மணி சிவானந்தி
புமையிமைய முதவு மங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகுதவு மன்னையாமளை பொன்னினம்பலவ
ருடனிட மகிழ்ந்து மேவும்
நித்திய கல்யாணி சாம்பவி புவனகௌமாரி
நிமலமக மாணியென்றே
நெஞ்சில் நிதமுந் நினைவுதந்துனை வணங்கவரு
நின்னடியவர்க் கருளுவாய்
நத்துலவு சுத்தமணி யெய்து நயினா நகரில்
நாளுமுறை யாழின் மொழியே
நாகமணியும் பரமர் பாகமுறு மேகசிவ
நாகஈஸ்வரி யம்மையே.

**பொழிப்புரை :** சுத்தமான முத்துமணிகள் கொண்ட சங்கு உலாவுகின்ற ஆறு சூழ்ந்த நயினை மாநகரின்கண் என்றும் எழுந்தருளியிருந்து யாழ்போலும் பொன்மொழி பேசுகின்றவரே! நாகமாலையணியும் இறைவனுடைய பாகம் பொருந்திய சிவநாகேஸ்வரியம்மையே! சக்தி! பைரவி! கௌரி! உருத்திராக்க மணியணிந்த முக்கண்ணி! திருச்சடை உடையவளே! ஆறு அருட்சரங்களைப் பொருந்தியவளே! சங்கரன் மனைவியே! சுமங்கலி. மதங்க முனிவருடைய மகளே!அருள்பாலிக்கும் அம்பமிகையே! சௌந்தர்ய குணமுடையவளே! சண்டர்களாயுள்ளார் எல்லோருக்கும் சண்டியே! உத்தமீ! பராபரன் மனைவியே! மனதினுள் வளங்கும் மணியே! சிவ ஆனந்தி உமையே! உமையப்பேறுதவும் மங்கைநல்லாளே! உலகசிருஷ்டிக்குக் காரணியாய அம்மையே! சியாமள வண்ணமுடையவளே! பொன்னம்பலவாணருடன் என்றும் இனிதிருந்து நன்மை பலவற்றைச் செய்பவளே! சாம்பவி! புவனத்தில் என்றும் கௌமார பருவம் உடையவளே! நிர்மலரமான மகாமாயியே! என்று தினமும் உமை நினைந்து வணங்கும் அடியவர்களுக்கு இன்னருள் பாலிப்பாயாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கவுரை:** சேவடி படருந் செம்மலுள்ளமொடு நலன்புரி கொள்கைப் புலம்புரிந்துறையுஞ் செலவு நயந்து. வண்புகழ் நயந்து நலங்கிளர் அடியார் உவந்து ஏத்தினால் அம்மையும் தெய்வம்சான்றதிறல் விளங்குருவின். வான்றோய் நிவப்பிற்றான் வந்தெய்தி அணங்கு சாலுயர் நிலை தழீகப் பண்டைத்தன் மணங்கமழ் தெய்வத்திளநலங்காட்டி. அஞ்சலோம்புமதி அறிவனன் வரவென. அன்புடை நன்மொழி அளைஇ" அருள்பாலிக்கும் இயல்பினாள் என்றாரென்க.

ஆகமது கூனித் தளர்ந்துரோ மம்வெளுத்
தைம்புல னொடுங்கி மேலாம்
அறிவழிந் தைமே லெழுந்ததீ தத்தினுயி
ரணுகுமக் காலை தனிலே
வேகவெங் கடமை பிடர் நெளியவரு ஞமனெற்கு
விடுகயிறு முடுகி யடுமுன்
வினையேனை யஞ்சலென் றுனதுநா யகருடன்
வெள்ளை விடைமீ தேறியே
பாகமுற வந்துநின் றடிமைகொண் டெனையும் நீ
பாதுகாத் தருள வேண்டும்
பைங்குலைத் தெங்கிளஞ் சோலைசெறி நயினைநகர்
பண்புகொண் டுறை செல்வியே
நாகமடர் தாருவென மேவிமுனி வோர்களுறை
நாடிவரு கோபவிடமார்
நாகமணியும் பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே 5

**பொழிப்புரை:** பசிய குலைகளையுடைய இளந் தெங்கஞ் சோலைகள் நிறைந்தும். நாகமரங்கள் செறிந்த தாருகா வனம் இஃதொக்குமேயெனமுனிசிஷ்ரேஷடர்கள் உறையுள் நாடிவருவதற்கு உவந்ததுமாகிய நயினைமாநகர்க்கண் உவந்துறையும் தேவியே! சீற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்ததும் நஞ்சு நிறைந்ததுமாகிய நாகத்தை அணியும் பரமார்தம் பாகத்தை உவந்துறையும் ஒப்பற்ற சிவநாகேஸ்வரியே! நின்னடியேன் உடம்பு கூனி, மூப்புற்றுத் தளர்வெய்தி உரோமம் நரைத்து, ஐம்புலனும் தம்வலியற்று ஒடுங்க மேலான அறிவு அழிந்து மயக்க முற்று, விக்குள் மேலெழ என் உயிர் பிரிய இருக்கும் இறுதிக்காலத்திலே உயிர் கவரும் பணிகொண்ட ஞமர் அக்கடமை பிடர் பிடித்துந்த விரைந்து வந்து பாசக்கயிறு எனக்கிடுமுன்னே நின்நாயகரது பாகமுற்று வெள்ளைவிடைமீ தேறிவந்து கொடும் வினையேசெய்த என்னை அஞ்சேலென அபயமளித்து, நின்னடித் தொண்டு பேணும் பெருவாழ்வளித்து ஆட்கொண்டருளவேண்டும் என்றபடி.

**விளக்கவுரை:** மூப்புப்பிணி சாக்காடு எனும் இவை தொன்மையாம் ஆன்மாவுக்கு உளதாகலாயினும், "நாச்செற்றுவிக்குள் மேல்வராமுன் நல்வினை மேற்சென்று செய்யப்படும்" எனத் தெள்ளு தமிழ் கூறுதலின் உயிர்போம் இறுதியிற் பேசமுடியாது நாக்கு விழுந்து சிலேட்டமம் எழுந்து நோய்முற்றி நிற்க பாசக்கயிறு கொண்டு ஞமர்குழாம் காத்துநிற்றல் இயல்பாகலானும், அசத்துப் பொருள்கள் யாவும் நிலையிலவென்பது உண்மையாகலானும், நில்லாதவற்றை நிலையினஎன்றுணரும் புல்லறிவாண்மையினின்றும் நீங்கி இறை தொழப்படவேண்டுமாகலானும், பக்திப் பயன் என்றும் நின்று தொழிற்படும் என்பது உண்மையாகலானும், பாணியும் சீரும் தூக்குமென்றிவை, மாணிழை யரிவை காப்பி ஆணமில் பொருளெமக்கு அமர்ந்தாடும் (கலித்தொகை) திருநடனம் மன்னுயிர்களைத் தம் மலரடிக்கீழ் அழைத்துப் பேரின்பப் பெருவாழ்வளிப்பதற்கேயாம் ஆகலானும் "ஆகமது கூனி..... முடுகியடும்" துன்பவேளையிலே அம்மை அப்பனுடன் வந்து ஆட்கொண்டருளவேண்டும் என்றார் என்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றிற் சிறந்தபொற் குவை யென்ன வளர்சாலி
வயலிற் கிடந்த நத்தம்
மடையிற் றவழ்ந்தேறி மனையிற் புகுந்துழவர்
மனைமுன்றிலீனு முத்தை
ஆற்றிற் சிறந்திடத் தண்டலங் களையுநீர்
அள்ளிப் புறத்தின் மேவி
அருகுற்ற சோலையினு மிகுதுற்ற வாவியினு
மரவிந்த வோடைகளினும்
காற்றிற் சிறநதலவு கால்கொண் டுலாவக்
கயற்கண்ணி வந்து மோதக்
கமுகினிற் றெங்கினிற் கதலியில் வருக்கையிற்
கனியு மடலுஞ் சிதறியே
நாற்றிற்கு மேகமழு மதுமாரி சொரியுநயி
னாநகரி னண்ணு மமையே
நாகமணியும் பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 6

**பொழிப்புரை:** நாகமணியும் பரமர்தம் பாகம் பொருந்திய சிவநாகேஸ்வரியம்மையே! உமையே! மாற்றிலே சிறந்த பொற்குவையனைய நெற்குவை நிறைந்தஉழவு வயல்களிற் கிடந்த சங்கு மடையினின்றும் தவழ்ந்து கரையேறி உழவர் மனைவளவினுள்ளே புகுந்து அவர் மனை முன்றினில் ஈனும் முத்தை ஆறுகளிலே சிறந்ததும் நயினை மாநகரைச் சூழ்ந்துள்ளதுமாகிய ஆற்றுநீர் அள்ளி அருகேயுள்ள சோலைகளிலும் அழகிய வாவிகளிலும் தாரை நிறைந்த ஓடைகளிலும் புறத்தும் வீசாநிற்க. சிறந்த தென் மேற்காற்று எழுந்து உலாவாநிற்க இக்காற்றின் செயல்களினாலே கயல்மீன்கள் துள்ளி மேலெழுந்து பாய்ந்து கமுகினிலும். தெங்கினிலும். கதலியிலும் பலாவிலும் மோத அவற்றில் இருந்து கனிகளும் மடலும் சிதறி நாற்றிசையும் மதுமாரி மழைமாரியெனப் பொழியாநிற்கும் சிறந்த நயினைமா நகர்க்கண் நனியுவந்து உறைந்தனையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கவுரை:** நாட்டு வளமும். ஆற்றுவளமும் யாணர் வருவாயும் மக்கள் தம் முயற்சியும். செல்வச சிறப்பும் கூறியவாறாயிற்று.

வன்கயமருப்பென நிமிர்ந்தடி பருந்திறுகி
மணிவர றுத்து விம்மி
வட்டமிட் டெழுகும்ப முலைமுகங் காட்டியிரு
மகர விழிவலை வீசியே
மின்கய மதன்சாலுள் விட்டடைத்துள பெரு
வெறுக்கையைப் பற்றி யேற்கும்
வேசியர் தனக்கடிமை செய்விக்கும் மென்னைமுன்
வினைநூறி யருளுதவுவாய்
பொங்கிடு நெடுந்திரைப் புணரிநாற் றிசையும்
பொருந்த நடுமேவி யுலகிற்
புகழ்பெருகு நயினைமா நகரினி லிருந்துமிகு
புதுமை தரு புனித தாயே
நன்கிய விளம்கபிறையொ டொன்றை வேண்டிச்சடில
நண்பு கொண்டிடு நஞ்சமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாகஈஸ்வரி யம்மையே.

**7**

**பொழிப்புரை:** இளம்பிறைச் சந்திரனோடு நஞ்சுமிகுதியும் கொண்ட நாகம் நட்புக்கொள்ள வேண்டுமென விரும்பி அவற்றைச் சடாபாரத்தில் அணிகின்ற இறைவர் தம்பாகம் பொருந்திய சிவநாகேஸ்வரியம்மையே! கொந்தளிக்கும் நெடுந்திரைக் கடலிலே எழும் அலையானது நாற்றிசையும் சென்று பொருந்த நாடுவேயுயர்ந்து தோன்றி உலகிற் பெரும்புகழ் பெற்று விளங்கும் நயினைமா நகரின் கண் எழுந்தருளிப் புதுமைகள் பலவும் தந்தருளும் தாயே! வன்மை பொருந்திய யானையின்மருப்பென்னும்படி நிமிர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபருத்து வட்டமிட்டெழுந்து மணிக்கச்சு அறும்படி விம்மிமுற்றுத் தோன்றும் இரு ஸ்தனங்களின் முகங்காட்டி, மகரமீன் போன்ற விழிகளால் மாயவலைா வீசித் தம்மையடைந்தாரிடம் உள்ள பெருஞ்செல்வமெல்லாவற்றை யும் கவர்ந்திடும் சேரிவாழ் மகளிர்தம் சூழலிற்பட்டு அவர்கட்கு அடிமையாகிச் செய்வதின்னதென்றறியாது மயங்கிநிற்கும் நின்னடியானாகிய என்னிடத்தே உடனிருந்து நெறியலா நெறிமேற் செலுத்தும் வினையினை அழித்து என்னையும் பக்குவப்படுத்தி அருள்பாலிப்பீராக.

**விளக்கவுரை:** காமத்தீயானது என்னைப் பன்முறையும் சுடவும்யான் அதனையும் பொருட்படுத்தாது சிந்தனையின்றி ஒருநாள் இருநாள் அன்றிப் பலநாளும் சென்று புகும் உள்ளப்பாங்கினை உடையவனாயினேன். உமதருளை உணராமையே இத்தன்மைக்குக் காரணமாயிற்று என்க.

"கொள்ளேர் பிளவகலாத்தடங் கொங்கையர் கோவ்வைச் வெய்வாய் விள்ளேன்" (திருவாசகம் நீத்த) என்றும் "செழிக்கின்ற தீப்புகு விட்டிலிற் சின்னமொழியாரிற் பன்னாள் விழுகின்ற என்னை" (நீத் 4) என்றும் கூறியமை ஈண்டும் ஆராய்தற்குரியது.

தம்மையடைந்தாரை மாயவலையில் மயங்கிப் பொருள் கவரும் இயல்பினார் இம்மகளிராகலின் யானும் அறியாதே மயங்கினேன் எனத் தம் செயலற்ற தன்மை கூறியவாறாயிற்று.

ஆவணத்தின் முனைப்பினால் ஆன்மாக்கள் தீவினைகளைச் செய்கின்றன. அத்தீவினைகளை நீக்குவதற்காகச் சிவபெருமான் ஆன்மாக்களுக்குத் துன்பத்தை ஊட்டுகின்றார். அக்கால ஆதிபராசக்தியின் பிரேரகத்தினால் ஆன்மாவிடத்து இயற்கை அறிவு சிறிது தோன்றத் தீவினையில் வெறுப்பும் நல்வினையில் விருப்புமுண்டாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நல் தீவினையில் வெறுப்பும் நல்வினையில் விருப்புமுண்டாகி மேலும் நல்வினை செய்து, முன்னே செய்த தீவினையின் அளவிற்கு இதனையும் சமன் செய்து தன்மேலும் பிறவுயிர்கள் மேலும் கொண்ட பற்று அறந்துவிடுகின்றது. இருவினையொப்பினாலே ஆன்மாவுக்குப் பொருள் மேலுள்ள ஆசை வலி கெடுகின்றது. "நீடுமிருவினைகணேராகநேராதல், கூடுமிறைசக்தி கொளல்" (6ம் அதமி 1ம் செய்) என்று திருவருட்பயன் கூறியுள்ளதாகலின் இருள்குறைய ஒளியேறி வருவதுபோல ஆசை வலிகெடச் சிவசக்தி ஆன்மாவிலே பதிந்து அதனை நன்னெறிக்கு உய்த்துச் செல்லும். இதுவே அம்மை வினை நூறியருளுந் திறனாம். 'சந்திநிபாதம்' எனினும் ஒக்கும். உலகிற் புகழ் பெருகும், நயினைமாநகரில் இருந்து மிகு புதுமை தருதாயே! நாகேஸ்வரியம்மையே! என்று கூறியருளியமையால் நாகமானது தன்னைத் தொடர்ந்த இடரினின்றும் நீங்கி அம்மையைப் பூசித்து உய்ந்ததாகலின் தமது குறைகளையும் அங்ஙனே நீக்கி நன்னெறி காட்டுதல் வேண்டும் என்பதை வேண்டிக்கொண்டருளினார் ஆவர் என்க

சம்புசிவ சங்கர திகம்பர நடம்புரி
சமர்த்தாதி யாதி யாய
தற்பர மதிச்சாடில முக்குண சதுர்ப்புய
சதாசிவ சிவாசி வாய
எம்பரம வென்று பதி னென்கணமு மிம்பரு
மிறைஞ்சிவரு கணவருடனே
இங்கிதமுடன் கயிலை தங்கியுறை யம்பிகையி
னின்புகழி யம்ப வெளிதோ
அம்புய மடந்தைய ரரம்பையர் வயந்தமுல
மரியநவ சக்தி களெலா
மன்பினொடு தொண்டுசெயு முந்தனர விந்தபத
மந்தநிழல் தந்தருளுவாய்
நம்பவரு தொண்டர்பெற மங்கலமிகுந்த நயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாநகரி ளண்ணுமுமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 8

**பொழிப்புரை:** நின்னருளைப் பெறுவோமென நம்பிவரும் தொண்டர்கள் மிகுந்த மங்கலமெல்லாம் பெறும்படியாக நயினைமா நகரின்கண் எழுந்தருளியிருக்கும் உமையே!நாகமணிந்த இறைவனுடைய வாமபாகத்திற் பொருந்திய நாகேஸ்வரியம்மையே! அம்பிகையே! பதினெண்கணங்களாலும், தேவர்களாலும் சம்புசிவ சங்கரதிக்கை யாகவுமுடையவனே! மேலானவனே! மதிசூடி! சாத்வீக இராசத தாமதமென்னும் முக்குணங்களை உடையவனே, நாற்புயனே, சதாசிவ, சிவாய, ஏம்பரமனே என்று இறைஞ்சப்படும் நும்கணவருடனே திருக்கையிலாசமலையி லெழுந்தருளியிருக்கும் நும்சிறப்பு எம்போன்றோரால் இயம்ப எளிதானதன்று. தாமரை மகளிரும், தேவமகளிரும், நவசக்திகளும் உமக்கு அருட்டொன்று செய்யாநிற்க விளங்கும் நீவிர் நுமது குளிர்ச்சி பொருந்திய தாமரைமலரடிகளைத் தந்து அருள்புரிவீராக.

**விளக்கவுரை:** தேவமகளிரும், தெய்வமகளிரும், அருட்டொன்று புரியும் அம்பிகையிடத்தே தாடலைபோற் கூடியவை தானிகழா வெற்றின்பக் கூடலை" திருவருட்பயன் வேண்டியவாறாயிற்று.

கந்தான தொசியச் சினக்கும் கடாதடக்
கைம்மலை முகத்த வுணனைக்
கால்கொண் டுதைத்துவன் றேலுரித்துப் போர்த்த
காதலனை மன்றாடியே
முந்தாத ரத்திரனொடு மிருநாளி நெற்பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவிலா துயிர்க ளுய்ய
முப்பத் திரண்டறந் தன்னையுத வியவன்னை
மூவுலகு நீயா தையால்
சிந்தா குலங்கொண்டு திரியநான் முறையோ
தினந்தி னம்சொல வேண்டுமோ
நந்தாத வரமுதவு நங்கையே நயினா
நகர்க்கண் மருவும் கௌரியே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே. 9

**பொழிப்புரை:** குறைவுபடாத அருள் நல்கும் நங்கையே! நயினை மாநகர்க்கண் விரும்பி உறையும் கௌரிதேவியே! நாகமணியும் இறைவனுடைய பாகத்தே பொருந்திய நாகேஸ்வரியம்மையே! கட்டுத்தறியானது வளையும்படியாகக் கோபங்கொண்டெழும் மதயானையினது முகத்தையுடைய அவுணனைத் திருப்பாதத்தால் உதைத்துக்கொன்று அதன் வன்மையான தோலை உரித்துப போர்த்த இறைவனும் நும் காதலனைப் பணிந்து மிக்க அன்புடன் இருநாழி கொண்ட நெற்பெற்று அதனால் அளவில்லாத உயிர்களுய்யும் படியாக முப்பத்திரண்டு தர்மங்களையும் அருளிய அம்மையீரே. மூவுலகிற்கும் முழுமுதல்வி நீரன்றோ. நீவிர் இவ்வாறிருக்க நும் அடியவனாகிய யான் சிந்தை ஆகுலம் உற்றுச் செய்வதின்னதென்றறியாது திரிதருதல் முறையோ? (யாவும் உணர்வீராகலின்) நாளும் இதனை யான் உமக்குச் சொல்ல வேண்டியதில்லையே. நும் திருவுள்ளம் இரங்கி அடியேன்பால் கடைக்கண் சாத்தினால் கஷ்டமுண்டாகாதன்றே.

**விளக்கவுரை:** எண்ணில் கோடியுயிர்களும் உய்யுந் திறன் வேண்டி முப்பத்திரண்டு தர்மங்களையும் அம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றினாரேயாகலின் அவ்வுயிர்களுள்ளே யானும் ஓர் அடியானாகலின் எனக்கும் அருளல் வேண்டும் எனத் துணிவோடும் வேண்டிக்கொண்டாரென்க. சிந்தா குலமற்ற தன்மை சிவபக்தி கொண்டதனால் பிதகேறியவன் நிலை மையென்க. கைம்மலை முகத்தவுணன் என்றது கயமுகாசுரனை.

சீர்தங்கு தண்சுனை யெனச்சேர் மனதிற்
றிளைத்துக் குழைத் தரும்பும்
செஞ்சரண கஞ்சமலர் தஞ்சமெனு மென்புன்
சிரக்கஞ்ச மீதில் வைத்தே
ஏர்தங்கு நல்லருட் பேறுதவி நெஞ்சத்
திடுக்கண் தவிர்த்து அஞ்சேல்
என்றுமுன் நின்றெமக் கீடேற்ற முதவுவார்
யாருன்னை யின்றி யம்மா
பேர்தங்கு மகிலாண்ட டுக்குமதி லூறுபொருட்
பிரிவுஞ் சராச ரமெனும்
பேருயிர்க ளுந்தந்து பாதுகாத் தருளுமுன்
பெருமையாம் பாடவெளிதோ
நார்தங்கு சற்குண தொண்டருய வென்றுநயி
னாநகரி னண்ணு முமையே
நாகமணியும் பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே 10

**பொழிப்புரை:** அன்பு நிறைந்த சற்குண சீலர்களாம் நின்னடியார்கள் உய்யுந் திறன் வேண்டித் திருநயினைமா நகர்க்கண் எழுந்தருளிய உமையம்மையே. நாகமணிந்த இறைவர் தம் பாகம் பொருந்திய சிவநாகேஸ்வரியம்மையே சிறப்பும் குளிர்ச்சியும் மிகுந்த சுனையாகிய மனதிடையே குழைத்துத் திளைத்து அரும்பிய அன்பினராகிய நின்னடியார்கள் நும் பாதாரவிந்தங்களே சரணமென்று தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமீது கைகுவித்து இறைஞ்சினால் அவர்பால் அருணோக்கம் செலுத்தி அவர் மனத்துன்பம் அகற்றி 'அஞ்சாதே' என்று அபயம் தந்து அருளுவார் உம்மையன்றி வேறுயாருளரோ அம்மா அகில உலகத்தையும் ஆண்டு சராசரப் பொருட்களையும் தோற்றுவித்து அவை நின்று நிலைக்கும் வண்ணம் காத்தருளும் நும் பெருமையை யாம்பாடல் எளிதானதன்று.

**விளக்கவுரை:** "நீலமேனி வாலிழை பாகத்தொருவ னிருதாள் நிழற்கீழ் மூவகையுலகும் முகிழ்ந்தனமுறையே" எனப் புறநானூறு கூறியாங்கு. "பேர்தங்கு மகிலாண்டு...... காத்தருளும்" என்று கூறியது அம்மையின் அருட்சிறப்பினையேயாமென்க. 'அஞ்சேல்' என்று சொல்லியது ஆன்மாவின் இடர்கொடுத்து ஆண்டு கொள்ளற்கு என்க. 'அஞ்சேல்' என்னும் வாயினைச் சிறப்பித்தருளினார்.

நாகேஸ்வரி துணை
முற்றிற்று.

## தனிப்பாடல்கள்

1. அண்டகோடி களெல்லா மொரு தலையில் நீசுமந்
தருளுதலினா லல்லவோ
அம்புயப் பிரமன் படைக்கத் தொடங்கினான்
அகிலமும் சிதை விலாமல்
புண்டரிக லோசனன் பாதுகாக்கின்றான்
புராந்தகன் சங்கரித்துப்
புகழ் மருவுகின்றான் இணங்கி நீ தயைசெய்து
புரியா திருந்தனை யெனில்
எண்டிசைகளும் பவியும் கிரிகளும்
எப்படி நிலைத்திருக்கும்
எவ்விதத்தி லந்தமூவர் தொழிலீடேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனர விந்த பாதத்
தொண்டர்கள் நிறைந்திடும் இலங்கை
நயினாதீவு துதிசெயும் படியமர்ந்தோய்
சுரலோக லோகேந்திரர் நரலோக புவனேந்திரர்
தொழ வேறு நாகேந்திரனே.

**பொழிப்புரை:** அரவிந்தபாதனும் இறைவனுடைய அடிகளை வணங்கும் தொண்டர்கள் நிறைந்திருக்கின்ற இலங்கை மாநகரின் ஒரு பால் விளங்கும் நயினையம் பதியில் எழுந்தருளியிருந்து மண்ணுலகோராலும் விண்ணுலகோராலும் தொழப்படுகின்ற நாகேந்திரனே! ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நீ சுமந்து அவற்றிற்கு அருள் பாலிப்பதினாலல்லவோ தாமரைக்கண்ணன் அவை அழியாது காக்கின்றான். முப்புரங்களையும் முடிவுசெய்த உருத்திரன் யாவற்றையும் மறைத்துப் புகழ்பெறுகின்றான். நீ அருள்புரியாவிட்டால் எட்டுத் திக்குகளும் உலகும் மலைகளும் எப்படி நின்று நலைபெறும். அவ்மூவர் தொழிலும் எவ்விதம் நடந்துகொண்டிருக்கும் (இவையெல்லாம் நின்புகழினாலன்றோ நடைபெறுகின்றன)

(பி.கு) இத்தனிப்பாடல் வீராசாமிச் செட்டியாராற் பாடப்பட்டது. இவர் பாம்புக்கும் கருடனுக்கும் பகை தீர்த்து மாநாய்கன் என்ற வணிகரின் நாலாம் சந்ததியினராவர். இவர் நாகரெத்தினங்கள் வாங்கும் பொருட்டு நியினார்தீவுக்கு வந்தவர். இவர் நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்கும்போது, அம்பாள் நாகேந்திரனாகக் காட்சி கொடுத்தாரெனவும், அக்காட்சியிற் பேரின்பம் அடைந்த செட்டி யார் கோயிற்றிருப்பணியில் ஈடுபட்டாரெனவும் கூறப்படுகிறது.

2. ஈட்டவல்லது பல்வகைக் குடிகளுமீட்டி
ஊட்டவல்வது பல்வகைப் போகமுமூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டவல்ல விப்பரையதி காட்டியோண் கயிலை
நாட்ட வல்லது நாகநாகேஸ்வரி நீயனை.

**பொழிப்புரை:** பல்வகைக் குட்டிகளுக்கும் ஈட்டவல்ல பொருட்களையெல்லாம் ஈட்டச்செய்து உயிர்களுக்கு ஊட்டவேண்டிய இன்பங்களை ஊட்டி உயிர்களுக்குக் காட்டவேண்டிய திருவருளையெல்லாம் காட்டி சிவபெருமான் வீற்றிருக்கின்ற கயிலையங்கிரிக்குச் செல்லக்கூடிய மோட்ச வீட்டை அளிப்பவரும் நயினை நாகேஸ்வரியேயாகும்.

(பி.கு.) இத்தனிப் பாடல் நான் யாத்திரை காரணமாகத் தென்னிந்தியா சென்றபொழுது மதுரையில் ஒரு வைசியர் வீட்டிலிருந்து பெற்ற பாடலாகும்.

3. முன்னமோர் கோவணந் தட்டினிலிட்டு முயன்றடிமை
தன்னை மதிக்கச் செய்தோன் தில்லைவாழும் சபேசனிடம்
துன்னி யொளிரு மொரு நாகபூஷணி தொல்லை முன்னாள்
மன்னத் தவஞ் செய் நயினையு மீழ நன்மண்டலமே.

**பொழிப்புரை:** முன்னொரு காலத்திலே துலையிலிடப் பெற்ற திருக்கோவணத்திற்கு ஒப்பாகத் தம்மை மதிக்கச் செய்து ஒருவனை அடிமையாகக் கொண்ட தில்லை நடராசனின் பாகம் பொருந்திய நாக பூஷணி அம்மையே! நீவிர் பண்டைக்காலத்திலேயே ஈண்டு எழுந்தருளியிருக்கவேண்டிய நயினைமாநகரும் ஈழமண்டலமும் பெருந்தவம் புரிந்ததன்றோ.

"முன்னமோர் கோவணந்தட்டினிலிட்டு முயன்றடிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை மதிக்கச்செய்தோன்" செயல்:- முன்னொரு காலத்திலே இறைவன் தமது திருக்கோவணத்தை அமர்நீதிநாயனாரிடத்தே கொடுத்து ஸ்நானம் செய்யச் சென்றனராக. ஸ்நானம் முடிந்து இறைவன் கோவணத்திற்கு வந்தார். அவருடைய அருளால் அது மறைந்து விட்டது. நாயனார் சென்று பார்த்தபோது அதனைக்காணாது திகைத்தார். பின்னர் ஓர் பட்டினை இறைவனிடம் கொடுப்ப அவர் வேண்டாராய்த் தம்முடைய கோவணமே வேண்டுமெனக் கூறிப் பின்னவேறோர் துணி காட்டி இதற்கு நிகரான துணி தருவீராயின் ஏபேன் என்றருளினார். உடனே நாயனார் இறைவனுடைய ஆடைகளை ஓர் தட்டில் இட்டு அதற்கு ஒப்பாகத் தம்மிடமுள்ள துகிற்குகையெல்லாவற்றையும் கொண்டுவந்து மறுதம்டினிலிட்டார். இட்டு இறைவனுடைய ஆடை வைக்கப்பெற்ற தட்டே தாழ்ந்து காட்டியது. பின்னா பொற்குவை தகக்குவை எல்லாவற்றையும் கொண்டு வந்து இட்டார்.

'நாடுமன்பொடு நாயன்மார்க் களிக்க முன்வைத்த
நீடுகோவண மடையநே ராகவொன் றென்றாக்
கோடி தட்டின்மீ திடவிடக் கொண்டெழுந்ததுகண்
டாடு சேவடிக்கடியரு மற்புத மெய்தினார்.'

(பெரிய புராணம் அமர்நீதி கண்ட நாயனார் புராணம் செய் 33.)

"நிலைமை மற்றது நோக்கிய நிகரிலார் நேர் நின்
லுலைவில் பஃறன மொன்றொழி யாமையுய்த்
தொழிந்தேன்
தலையானுமென் மனைவியுஞ் சிறுவனுந் தகுமேற்
றுலையி லேறிடப் பெறுவதுன் னருளெனத்
தொழுதார்."

தொழுது தம்மை அவர்க்கு அடியவராக்கிக்கொள. இறைவனும் உவந்து அவர்களை அடிமையாகக் கொண்ட அருள்புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிடம்

## பின்வரும் விடயங்கள் உரிய முறைகளிற் கணித்துக் கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜாதகம் : ஜெனனவிபரம், கரகஸ்புடம், பாவகஸ்புடம், தசவாக்கம், அட்டவர்க்கம், சீவதெசை, பிராணதெசை, மனோதெசை, மிருத்துதெசை, காலதெசை தத்துக்களின் விபரம், நிரியாணம், மகாதெசை, புத்திசித்திரம் உட்படக் கணித்து ஆயுள் பூராவும் பலன் எழுத ரூபா | | 200 |
| 2. | ஜாதகம் : ஷெ விபரங்களுடன் சித்திரமின்றி எழுத | " | 150 |
| 3. | ஜாதகம் : சாதாரணம் | " | 100 |
| 4. | ஜாதகக் குறிப்பு : விரிவானது | " | 10 |
| 5. | ஜாதகக் குறிப்பு : சாதாரணம் | " | 5 |
| 6. | விவாகப்பொருத்தம் 27 | " | 10 |
| 7. | விவாகப்பொருத்தம் 10 | " | 5 |
| 8. | வீட்டு நிலம் வகுத்தல் | " | 10 |
| 9. | ஒரு வருடப்பலன் மாதாவாரி | " | 6 |
| 10. | பிறந்த திகதியும் பெயரும் கொண்ட பலன் அறிதல் | " | 5 |

தபாலில் அறிய விரும்புபவர்கள் அரைவிசி முற்பணம் அனுப்ப வேண்டும்.

"சோதிட விலாசா"
நயினாதீவு.

சோதிடகலாநிதி
சு.ஐயாத்துரை

வெளியீடு: சோதிட கலாநிதி, சு.ஐயாத்துரை, நயினாதீவு.
அச்சுப் பதிப்பு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

நயினார் தீவு எனவழங்கும்

# நாகதுவீப மகத்துவம்

ஸ்ரீ நாகபூஷணியம்மை சகிதம் அடங்கியது

**ஷெயூர் சு.ஐயாத்துரைச்**

சோதிடரால்

பழைய வைபவங்களைக் கொண்டு எழுதப்பட்டன

யாவர்க்கும் பயன்படுவது

பிரமாதி வருஷம் ஆனிமாதம்

1939.

விலை சதம் 15 விலை சதம் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

நாகபூஷணி அம்மன் துணை

# நாகதுவீப மகத்துவம்.

விநாயகர் துதி

காப்பு

நாகதீக மகத்துவம் நான் சோல
ஆகுவாகனனம்பிகை யோடயன்
போகமாது புவியாள் குகனுமுன்
பாகநின்றருள்பாலித்துக்காப்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன் முகம்

ஈழ நாட்டிலே யாழ்ப்பாணப் பெரும் பிரிவி சிறந்த புராதன தேவிதாலமாக வழங்குவதும் இக்காலத்தில் நயினார்தீவென விழங்குவதுமாகிய நாகதுவிபத்தின் மகத்தவத்தை அத்தலத்தையே சென்ம பூமியாகவுடைய திரு.சுத்தரன் ஐயாத்துரைச் சோதிடர் தக்க ஆதாரச்சுகளோடும் வசனமாக ஒருவாறு சுருக்கி எழுதியுள்ளார். அதனை நான் படித்துப் பார்த்தேன் இவ்வாக்கியோன் தாமெழுதிய இச்சிறுநூலுக்கு அவ்வூர் பழையகோவிற்கணக்கு தோம்பேடு மதுரை வைசியர்புராணம், மணிமேகலை, மகாவம்சம் முதலிய பழையசாதனங்களையும்நூல்களையும் ஆதாரமாகக் காட்டியுள்ளார். இவ்வாதாரங்களைத் தேடுவதற்கு எத்துணைச் சிரமப்பட்டிருப்பரென்பது இதனைப்படிப்பவருக்கு நன்குவிளங்கும் நாம் முன்னறியாத பல அரிய சரித்திரசம்மந்தமான விஷயங்களையும் உலகமாதாவாகிய நாகபூஷணியின் மகத்துவத்தையும் இதுவாயிலாக அறியலாகும் இந்நூலை அபிமானிகள் ஒவ்வொருவரும் ஏற்றுப்படித்து நற்பலனடைவார்களாக.

**ம.வே. திருஞானசம்பந்தன்**

யாழ்ப்பாணம்
இந்துக்கல்லூரி
25-06-39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புப்பாயிரம்

எமதாசிரியருளொருவரான

**வேலணையூர் ஸ்ரீமான் ம.தம்பு ஆசிரியவர்கள்**

சொல்லியது

கட்டளைக் கலித்துறை

சிரியல்நாகைத் மலமூர்த்தி தீர்த்தச்
சிறப்புகளை
எரியல் சுந்தரனையாத்துரை யெனவிவ்வுலகில்
பேரியல் சோதிடவித்துவான் தெடிப்பிறரறியப்
பாரியலநாகை மகத்தவமாகப் பரப்பினரே

**சரவணை ஸ்ரீமான் ஆ. தில்லைநாதபிள்ளையவர்கள்**

சொல்லியது

கட்டளைக் கலித்துறை

திருவருநாகத் துவீபமகத்துவச் சீர்ப்பனுவ
லருமருந்தென்ன நற்கத்திய
ரூபத்திலாக்கினனெப்
பொருவருமற்ற வுலகவிவுற்ற
வையார்துரைப்போர்
வருமொருபொன்புகன் நேர்மதிச்
சோதிடமாமணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினை ஸ்ரீமான் வே.கனகசபை கூறியது

அறுசீர்கழில் நெடிலாசிரிய விருத்தம்

சீரிலங்குமறிஞருளம் விருந்தயரக் காவியங்கடெரிந்
தாராய்ந்திப்
பாரிலங்கு மொரநாசதுவிப மசத்தசமெனும் போபரித்த
நூலின்
சாரிலங்கச்சீர் நயினைச்சரித்திரத்தைத் தந்தனத்தலத்திற்
றோன்றிப்
பேரிலங்கும் சோதிடன் சுந்தரனையாயத்துரையென்னும்
பெயரினானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

வினைக்கீடாய்ப் பிறந்த ஆன்மாக்கள் எதுவும் சக்தி வணக்கம் செய்ய வேண்டியதவசியம். அதிலும் குண்டலி சத்தியாகிய அம்பிகையைப் பூசிப்பினன்றி நாகதோஷமெனும் இராகுகேதுக் களாலுண்டாய தீவினை விலகாவாம். ஒவ்வொரு ஆன்மாக்களுக்கும் தம்வாழ்நாளில் இத்திசைகளிலொன்றாவத வாராமல போகாது இவ்விஷயத்தை ஆறறிவுள்ள மானிடரில் ஆஸ்திகபுத்தி தவபலனுலுடையோர் அறியாமலிரார். இதனுற்றான் நாகப்பிரதிஷ்டை சர்ப்பதானம் முதலியன உலகத்தில் பூர்வீகமாய் வழங்கிவருகிறது. அவற்றுள் மூர்த்தி. தலம். தீர்த்தம் முறையாய்த் தொடங்கினற்கு "வார்த்தை சொலச்சற்குருவும் வாய்க்கும்" என்ற விதிப்படி மூர்த்தி நாகபூஷணி. தலம்:- நாகதீவு (நயினார்தீவு) தீர்த்தம் முன்னுக்குள் பாம்பன் இவை மூன்றும் ஒருங்கே நாகம் எனும் பேராய் அமைந்துள்ளது. கருடனும் பாம்பும் இராகு கேதுக்களாய் இருந்த இடமும் பாம்பனுக்கு மேற்கே காண்கிறது. ஈதன்றி விராட்புருடனுக்கு நேத்திரமே இவ்வூராம். இதுவும் தவம்செய்யும் புண்ணிய பூமியாயும் காவிரிப் பூம் பட்டிணமிருந்து புண்ணியராசன்மையம் அடைந்த இடமும் அக்காலத்தில் கோட்டை இம்பிர புத்தர்விகாரை உடைய இடமும் கௌதமபுத்தருக்கும் ஆயிரம் வருடத்துக்கும் முன் இச் சுவாயம்பு லிங்க முடைய துவீபமும் ஆதிசேடன் பூசித்த இடமும் இதுவேயாம் எனத் தசீதி முனி புங்கவர் இராமாயணக் கூற்று. ஆதலால் இச் சிற்றறிவுடையோனும் எனது நாகபாவ தோஷம் நிவர்த்தியின்றி கன்மம் அதிகரித்தமையால் இனியாவது எம்மனோர் இக்கன்மத் தொடர்பையறிந்து முறையே வழிபட்டு உய்வரெனதமியேன் இவ்வரும் பணியில் தொடங்கக் கருதும் போது இலக்கண இலக்கிய இதிகாச பகுதிகளில் பேராற்றலாமறிவு இன்மையால் முன் ஊழ்வலி வினைப்பயன் முற்றி எனதிளம்பிராயத்தில் இவ்வூர்க் கோவிற் கணக்குகள் தோம்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடுகள். பழைய சாதன உறுதிகள். முன்பூசகராய் இருந்தோர் இவர்களது ஓலை நறுக்குகள் இவையெல்லாம் தேடாமலே எனது வகுப்புப் பாடமாய் வருடந்தோறும் வந்தன.
அதனை நினைக்கும்போது இங்கே கூறப்பட்ட பெரியார் எவர்க்கும் யானும் தொடர்புடையவனாதாலாலும் "தோன்மைமறவேல்" என்ற வாக்கியப்படி இவ்வூர் விஷயத்தைகும் நாகபூஷணி மகத்துவத்திலே சேர்ந்து நாகபூஷணி மகத்துவத்தை ஆதிசேடனும் அறியாராதலின் மானுடரறிகலெங்ஙனம் ஆதலால் நாகதுவீப மகத்துவமெனும் இந்நூலை வெளிப்படுத்தலானேன்.

இந்நூற் குற்றங்களை நீக்கி வாசித்தல் ஆன்றோர் கடனாகும்.

இங்ஙனம்
**சு.ஐ.சோதிடர்**
நயினார்தீவு.

## அவையடக்கம்

விருத்தம்

கன்னிகை நெய்தேன்பாலும் கண்டிவை
கலந்தவண்ணம்
தனியொரு கற்கிடந்தால் சகலருமகற்றியுண்ணல்
மனிதருக்கியல்பாம்போல் வழுத்த மிந்நூலில் குற்றந்
தனியொழித்திதனைக் கொள்ளல் தகுதியோர்
கடன்தாமே.

## நாகபூஷணி தலயாத்திரைவிசேடம்

கலித்துறை

முற்றறிவைப் பெறுந்தோறும் மறதிமுளைத்துமனம்
மற்றவழிகளிற் சிக்குண்டுழலும் மனிதருடல்
பெற்றபலறோனிறிலை ஆதிசேடனும் பேணித்தொழு
துற்றிடு நாகைத்தவயாத்திரைக் கொன்று மொப்பிலையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நாகதுவீப மகத்துவம்

நாகதுவீபமென்பது யாழ்ப்பாணத்திலிருந்து தென்மேற்கே பதினெண்மைல் தூரத்தில் நாற்புறமுங் கடல் சூழவிருக்குமோர் கிராமம். இதுவோ காலத்து கிழக்கே எல்லைக்கல், தெற்கே நந்தித் தீவு, மேற்கே பாக்குத்தொடுவாய் கோட்டம், வடக்கே நந்தித்தீவு, மேற்கே பாக்குத்தொடுவாய் தோட்டம், வடக்கே பாம்பு சுற்றிய கல் கெருடனகல் இது ஒன்பது சதுரமைல் விஸ்வதாரமுடையதெனதசீதி இராமாயணம், சாதகம் முதலிய இந்து மதவைபவங்களிலும் பௌத்தாகமபத்ததிகளினும் சொல்லப்படுகிறது. இதற்குத்திருஷ்டாந்தமாக கிழக்கே வரம்பும் உவான்நிலமும், மேற்கேவான் துறையும் எழுவான்படுவானாக அக்கால நாகர்களிட்ட நாமத்தைக் கவனிப்பது.

குடியேறினவர்:- நாகர் வழிபடும் தெய்வம்:- நாகேஸ்வரி
பதி:-நாகநயினார்

இற்றைக்கு மூவாயிரத்து ஐஞ்நூறு வருடங்களுக்கு முந்திய வையாபாடலினும் அக்காலசங்கராசாரியரைக்காண இந்தியாவுக்குச் சென்றவர்களைக் குறித்த செய்யுட்களில் நச்சுவிழிமடவார்கள் வாசமசெய்யும் நாக நயினார் தீவில் வாழவோரும் போயிருப்பதாக ஆகாயவிமானமாய் வந்திறங்கினரேன்றும் மணிமேகலாத்தெய்வம் இங்கு வந்து தனது பழம்பிறப்புணரப் புத்த பீடிகையைத் தரிசித்தனளென்றும் ப்ர்மாவிலிருந்து தர்மசோகமகாராசா புத்திர சோகத்தால் வருந்தி இத்தீவில வந்து பகவானைத் தரிசித்தாரென்னறும் காவியம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுலோகம்

"தர்மா கெருமை பௌமலாபுத்தஞ் சேயுகனியுதன் நாகதீவே தர்மா கெருமை"

மையங்கணம் நாகதீபம், கல்யாணம், பதலாஞ்ஞனம் எனப்பௌத்தரது இலங்கையிலுள்ள பதினாறுதலத்தில இதுவும் இரண்டாவதாகவுடையது. இரட்டங்காலி,எட்டிகுளம், சந்தணை, எட்டுவாரச் சந்தணை. திருவை சந்தணை. புத்தாதிடல் இவைஎல்லாம் ஓர்காலம் இந்நாகர் வம்சத்தினை சிலர் பௌத்தராயிருந்தமையாலும் இற்றைக்கு இரண்டாயிரத்தைஞ்நூறு வருடங்களுக்கு முன் அதனை அனுசரிப்பார் இருந்ததாகவும் தெரிகிறது. சந்தணை சந்தகன் என்னும் குதிரை வீரனுக்குடைய நிலம். எட்டுவளர் திருவை பௌத்தமத அரசியற்குரியபட்டப்பெயர். நாகர், புத்தர், விஷ்ணு ஆதிசேடன் அம்பிகை, இலட்சுமி, இவ்வீத குலதெய்வங்களை வழிபடுவோர் நாகமரத்தையும் வழிபடுவோர். அவர்கள் பாதலத்திலிருந்து குகைவழியாய் பூமிக்கு வருபவர்கள். நாகற்தாழ்வு, மாயனபெட்டை இந்நிலங்களில் பூர்வீக உரிமை நாகர்வம்சத்தாற்கேயாம்.

## நாகரின் பாகு பாடு

இவரில் அணிநகர். மணிநகர். முடிநாகரெனப் பிரிவுண்டு அணிநகர் சேனை படை நாட்டாண்மையுடையவர். மணநாகர் இரத்தினவியாபாரம் செய்வோர். முடிநாகர் அரசுரிமைபகர்வோர். பருத்தித் துறை. கொட்டடி. அராலி, பூநகரி.கச்சாய். திருகோணமலை. புத்தளம். உடைப்பு முதலிய இடங்களில் பலதொழில் வியாபாரம். அரசசேவை, சமமுயற்சி இவற்றையுடையோராய் வசிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்பரவாகன் செல்லி. பப்பரவாகன் ஆலடி. இக்காணிகள் நயினாதீவில் உள்ளன. பப்பிரவாகன் அர்ச்சுனன் புதல்வன் இதனால் நாககன்னிகையின் பூர்வீக பெயரை நாட்டினம் போலும். இவ்விடக்காணிகளின் அடி உரிமையும் பட்டமரகபினற்கு வேளாண் மரபினற்கு அதிகம் காணப்படவில்லை நாகர்பூரித்தமையால் நாகேஸ்வரியென்னும் பெயர் அமைந்தது.

**சுலோகம்:-** நாகராஜேஸ்பரி அய்நமானைபுஸ்பம் சமர்ப்பயாமி

இதனை யாகபூசையில் சொலவதுண்டு நாகபூஷணி யெண்பது தத்போது உள நாமம்! இவ்வாறு பன்நெடுங்காலம் நாகர் பூசித்துவர இவ்வூரில் நாகரெத்தினம் அக்காலத்தில் அதிகம் இருப்பதாகவும் அதைவாங்கிக் காவாங்கிக் காவிரிப்பூம் பட்டினம் கொண்டு போய்விற்கும் மாநாய்கர் மாசோட்டானெனும் மதுரைநகர் வைசியாறிந்த தம்மூரிலிருந்து நயினார் பட்டர் எனும் அந்தணரையும் கண்ணப்பரெனும் கார்த்தவேளாளன் பிரபுவையும் கொண்ர்ந்து குடியேற்றி இவ்வம்பிகையின் நித்தியநைமித்திய பூசாக்கிரமங்களை பார்த்து நடத்தும்படி ஆஞ்ஞாபித்து அவ்வைசியரே மேற்பாதுகாப்பு நடாத்திவந்தனர்.

பட்டர் வகுப்பு வந்தகாலம் சுமார் 1800 வருடத்துக்கு முன் தலைமுறை 36 நாயனார் வந்தகாலமுதல் (நாகதீவு) நயினார்தீவென மாறிற்று (இவர்களில்)சம்மந்தப்பட்டர் வையக்கரைப்பட்டர் பாம்புக்குட்டிப்பட்டர் அத்தியயளப்பட்டர் எனப்பிரிவுண்டு. பாம்புக் குட்டிப்பட்டரே (நாயனார்பட்டராம இவர் முன் நாகர் செய்த வந்த நாகநயினார் (ஆதிமூர்த்தி)(பூசையைவிட்டு)சக்தி பூசையே செய்யலானார் (பதிநாகநயினார்)(தேவி)நாகேஸ்வரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை நகர் சத்தியையச் சிவமாகித்தனிப்பா
முத்தியானமுதலைத்துதிசெய என்ற பிறப்பிட
நினைவேகொண்டனாபோலும்
இவர்கள் மதியநேரம் ஒர்கலப்பையை வலதுதோளில் வைத்து
(சூரியநமஸ்காரம் செய்து)
காயத்திரி செபித்து அக்கினி காரியஞ்செய்து விதிப்படி
போசனஞ் செய்வார்கள்

**மதுரை நகர் வீராசாமிச் செட்டியார் தரிசனைக் காட்சி**

**விருத்தம்**

அண்டகோடிகளெலா மொருதலையில் நீசுமந்தருளுதலினா
லல்லவோ
அம்புயப்பிரமன் படைக்கத்தொடங்கினாலகிலமும்
சிதைவிலாமல்
புண்டரிக லோசனன் பாதுகாக்கின்றான். புராந்தகன் சங்கரித்து
புகழ்மருவுகின்றான் இணங்கிநீ தயைசெய்து புரியா
திருந்தனையெனில்
எண்டிசைகளும் புவியும் கிரிகளுமெப்படி நிலைத்திருக்கும்
எவ்வதிதத்தினிலந்த மூவர் தொழிலீடேறு மீசனரவிந்தபாதத்
தொண்டர்கணிறைந்திடு மிலங்கை நயினாதீவு துதிசெயும்
படியமர்ந்தோய்
சுரலோக லோகேந்திரர் நரலோக புவனேந்திரர்
தொழவேறு நாகேந்திரனே

இவர் மாநாய்கரது நானகாஞ்சந்ததியாளரென்பது வைசியபுராணம் 151.168ம் செய்யுட்களால் தெரிகிறது. அப்புராணத்துள அறுபத்துநான்கு வைசியரும் காவிரிப்பூம்பட்டினம் போம்போது இது வழிபாலம்மையாரைத் தரிசித்துப் போவதேபக்கால வழக்கமாம். பட்டணத்தார் மருதப்தபிரான் எருமுட்டை இட்கினுந்தீர்த்திடும் செல்லுக்கெவரழுவார் (நயினார்தீவு) தெற்கு வீரகத்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் வீதி மருதனதட்டுப் பிராமணன்தட்டு காலிங்கரயனவயல் (காலிங்கராசன்) சோழஅரசனது ஒருதர மகன் இவனது பூர்வீகம் நல்லூர் வடக்கு இணுவில் வட்டுக்கோட்டை நயினார்தீவு ஆகிய இடமாம். புன்மேற்கு நெடுந்தீவு முதலிய இடங்களில் காலிங்கனது பெயரான நிலம்காணப்படினும் இவர்கள்கொடுத்தாகவே காண்கிறது. கார்காத்தார் குலத்தில் காலிங்கக் கோத்திரம் சொல்லவிதி திதி செய்யும்போது இதன்விபரத்தை நிலமுடையோர் குருவித்துறைசாதன வழக்குக் குலத்தீர்ப்பை இணுவையிலாறிவாராக)பிற்காலத்து இவர்களிடம் பட்டர்மார் கலந்த மையாலிதிற் கூறியது. நயினார் பட்டர் நயினாதீவு தெற்கு மண்ணிப் புழி எனும் நிலத்தில் வசித்தவர் இதனைத்தற்போது பட்டர்வளவென அழைப்பார்கள். [பிராமணரில்] வடபாள (சௌட்டிராதிகள தீட்சதர் ஆதிசைவர் போற்றி தம்பூரிகொங்கணர் திதிப்பார்ப்பார் வைதிகர் அமாத்தியரெனப்பிரிவுண்டு. முற்கூறிய பட்டரின் [9ம்]தலைமுறையினராய அம்பிகாப்பட்டரே இங்கிருந்து நாகரத்தினம் கொண்டுபோய் ஓர்நாடாருதவியால் பாண்டியபனைவையேகி முற்கூறியவைசியமரபினாக்கீந்து கொடுத்துவந்த திறைப்பணத்தை நீக்கதினாரென்பது பிள்ளையா பட்டர்கால கோவிற்கணக்கு இப்பட்டரின்பின் பட்டர்நாமம் பட்டுப் போயிற்று (இராமச்சந்திரர்) இவர்களின் பூர்வீக குலப்பெயர் ஆதலால் நாகபூஷணிக்கு பூசைசெய்யும். செய்விக்கும் உரிமை இவ்வமிசவாண்சந்ததியில் குலபுத்திரர் குருபுத்திரராக வருவோர்க்கன்றி ஏனையோர்க்கிலது இலங்கையில் விளைந்த அரிசி நெய்வேத்தியம் வைப்பதே முற்கால வசீரிமுறையாம். இதற்கெனவே தண்டவேற்பட்டது. இராமலிங்கர் இராமச்சந்திரர் சந்ததியார் பிற்காலம் பறங்கிக்காரர் ஒல்லாந்தர் இவர்களது கொடுங்கோலால் அவர்களிற் சிலரூரைவிடுத்தும் சிலர் ஒழுக்கம் குறைந்தமைகண்டு இராமச்சந்திரா கதிர்சதம்பி 1808ல் மாவிட்டபுரம் சின்னமத்துளார் சந்ததியான கணேசையர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசாமி ஐயரைக் கூட்டிவந்து குறித்த பூசையை யொப்பித்து படித்தரம் முறையாய்க் கொடுத்துவந்தனர். அஃதன்றி ஊரெழு குருமூர்த்திக் குருக்கள் சின்னக்குட்டிக் குருக்களே ஐந்துநாளுந்சவமும் ஆறாம்நாள் ரதஉற்சவமும் செய்தாரென்பதாம் இடையிலுள்ள பட்டர்மார்களில் சரித்திரங்கள் சின்னத்தம்பி நொத்தாரிசின் முதல்மகனும் யாழ்ப்பாணம் குடியிருந்த ஸ்ரீமான் கா.சின்னத்தம்பி என்பார்க்கு மாமனாகவந்த சரவணமுத்து என்பவர் வைத்தவிட்டதற் செல்லுக்கிரையாயின. அதை அடியேன் கடந்த குரோதிபருஷத்திற் பார்த்துளது செப்புத்தேர் ஏழுசுற்றுமதிரிருந்ததாகவும் கர்ணபரம்பரை நாயனார் பட்டருக்கு 30 தலைமுறையினராய இராமச்சந்திரருக்கு ஐந்துபுதல்வரும் ஐந்து புத்திரிகளுமுளர். இவர் இராமகிருஷ்ண முதலிமகன் தியாகுடையாரும் பாரியார் புகளியாரும் பெற்றகுமாரத்தித

எண்மரில் முன் இமமராமாசியையும் பின்வள்ளியம்மையும் மணந்தவர் கதிரித்தம்பியும் நாகத்தையும் முதற்தார புதல்வராகும். முருகப்பர் இராமலிங்கம் நாராயணபிள்ளை சண்முகம் நான்கு புத்திரிகளும் பிற்தார புதல்வராகும். இராமச்சந்திரர்களதுரிமை நிலங்களைப் பத்துப்பேர் சத்ததிக்குமே கொடுத்திருக்கிறார். (1690)ல் போர்த்துக்கீரராலிடிபட்ட இவ்வாலயத்தை புதுக்கியவரும்பப்பரவனாலடிக்கிணறு வல்லிக்காடு மேற்கு ஆலம்ம பொந்துள்ளுமாகப் பன்னிரண்டு வருடமளவும் இச்சுவாய்ப்புலிங்கத்தை மறைத்து வைத்துக் கலியன் ஐயரெனும் பரதனைக் காவல் வைத்து பிறமதவதிகளிடரினால் முருகபிரானாலயத்தைச் சமர்ப்பித்து துவாசாரோகண மியற்றி இந்துமத வழிபாடும் நடைபெறச்செய்தவரிவரேயாம். இதுபற்றி யே நாகபூஷணி திருவூஞ்சற் பாவிலும் நயினை நகருறைவோர் வாழி இராமச்சந்திர மகிபன் வாழி இனம்வாழி எனச்செய்யுள் வந்ததும் நயினை நகருறைவோர் பலாயிருத்தலின் கோவில் தமக்கு மாத்திரமன்று பலருக்குமென்றும் சிவசமயம் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழி என்பதில் சிவமதத்தார் பலருக்கு முரித்தென்றும் ஈற்றில் குலத்திரனாதலின் இருபத்தொரு தலைமுறையாருக்கும் இத்தருமவுரிமைப் புண்ணிய விசேடம் பத்தென்றும் கூறியுள்ளர். அப்பெரியாரது நாமதேச்ச எனும் சொல் சென்ற சர்வசித்து வருடம் ஆனி மாச உற்சவகாலத்தின் பின் மறைந்துபோன தற்போதுள மனேஷர்மார் கூறுமுரிமை யெல்லாம் இவரைப்பற்றிய உருத்தேயன்றி காளி உருமையன்று அக்காலக்கோயில்க்கணக்கு ஏட்டில் வருடந்தோறும் எழுதுவதினும் 1766ம் ஆண்டு தோம்பு ஏட்டினும் இவரது நாமமே முன்விளங்கியது இவர் முதற்புதல்வர் கதிரித்தம்பி முருகப்பர் இராமலிங்கம் நாராயணப்பிள்ளை என்பாரில் முதல் மூவரும் உபநயனம்உடையோர். ஏனையவரில் நாராயணப்பிள்ளை உடையார் இவர்கட்கு பிற்காலம் அரசனர் கொடுங்கோலதிகமாயிற்று அதுகாலத்தில் நயினாதீவு குடிசனத்தொகை வருமாறு.

### செய்யுள்

பாரிப் பார்ற் புரோகதரிற் குடியிரண்டு அதிற்பதிந்த
குடிபார்ப் பாராய்யறுபத்தைந்து
காப்பான வேளாளா குடி ஐயெட்டுக் கடற்பிழைக்கும்
பரதவர்கள் மூவைந்து
கோப்பாண கொல்லர் தச்சர் குடியோர் மூன்று ஈரங்
கொல்லி குடி மூன்று எனக் குடி இரண்டு
தோப்பேறி குடி பதின்மூன்று அன்னியர் குடி யேழு
தொகை நயினை நகர்க்குடி நூற்றைம்பதாமே

இவர் 1782ம் ஆண்டு தேகயோகமாகினர் இவரது சரமகவி கிடைக்கப்பெறவில்லை அரசினர் இட்டபெயர் சுவாம் இராமச்சந்திரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமச்சந்திரர் கதிரித்தம்பி நொத்தாரிஸ்

இவர் பிறஞ்சிக்கு கதிரித்தம்பி கோவிற்பற்று நொத்தாரிஸ் ஆகவும் கிராமவரிச்சட்டம்ப வாகவும் ஆலய மனேஷர் ஆகவும் இருந்தனர். இவருக்கு தோம்பேட்டில் அதிக நிலம் உண்டு இவர் காலத்தில் இரண்டாமுறை ஒல்லாந்தர் கோவிலை யிடிக்க வந்தபோது மாதா கோவிலென்றும் தான் சங்கிடுத்தமென்றும் அவர்களது வைடுளை வாசித்துக் காட்டி இடிக்கவிடாது தடுத்தார். அதனால் கர்ணல் வார்வெட்டரசன் இக்கோயிலுக்கு மணியும் இவர் உத்தியோக உதவிக்குமாக நல்லூர் மடப்பழி அமர சிங்கமுதலியார் வளர்ப்பு சண்முக மெலஞ்சியை இவரது பணிவிடை காரனாகக் கொடுத்தனர் ஊர் எழு சின்னக்குட்டிச் குருக்களுடன் மாவிட்டபுரம் பிராமணரைக் கொணர்ந்திருத்தியவரும் இவ்வூர் வேலைப்பன் பெண் குழந்தை வசம் நூறு கலிபணம் கடனாக எடுத்து பிராமணர் மாவிட்டபுரம் காசி உடையாருக்குக் கொடுக்க வேண்டிய பணத்துக்குமாக மக்கி தறை குராங்குளி கிழக்கற் காடு முதலிய நிலங்களை விற்றும் மடப்பள்ளி சுப்பனுக்கு உதவி செய்து ஒல்லாத்தராலிவளவதூரம் வருந்தியும் கோவிற் பூசையை வழுவின்றி நடாத்தினார் என்பது இவரந்திய சரமகவியால் நன்கு தெரிகிறது இவர் தமது இளம்பிராயத்தில் 1830 வரையில் சிவபதமடைந்தார்.

## இவரது குலம் கோத்திரமறிக

### விருத்தம்

பூமேவுந் திருநயினை நகரில்பூசுரன் சீர் காசி
யபகோத்திரத் தோன்
தேமேவும் யசுர் வேத சாகையுள்ளோன் திவவிய
வாபத்தம்ப சூத்திரத்தோன்
பரமேவும் புகழ் ராச்சந்தரர்க்குப் பாரி முதரல் ராமாசி
யயந்த பாலன்
மாவேவும் நற்கதிரித்தம்பி நொத்தார் வருகர தைப்பூச
மரனடி போனானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பி நொத்தாரிஸ் முருகப்பர் (அம்பலவாணர்) இவர் முற்கூறிய கண்பரின் சந்ததியாவர் இக்காலத்திற்றான் நயினார் தீவு வேளாளரும் பிராமணரும் கலப்பு மணமாகினது 1825 -1830 தொடக்கம் 1865 வரையிலும் கதிரித்தம்பி புதல்வரைவரில் சின்னத்தம்பி நொத்தாரிசும் இராமச்சந்திர முருகப்பனும் நயினார்தீவு வேள் கதிர்காமரம்பலவாணரும் பஞ்சாயுதனுமதியுடன் மானேசாரகவிருந்தினர் இது காலத்தில் நொத்தாரிஸ் கோவிலுக்காக சில சாதனங்களை வேண்டி தருமசாதனஞ்செய்தும் செய்யாது புன் மேற் சில எழுதும் பரப்பு நிடமும் விட்டிருக்கிறார் பலரை ஏவி இச்தருமசாதனஞ் செய்வித்தும் நயினார்தீவு நெடுந்தீவு முதலிய இடங்களில் ஒற்றிக்கு கோயில் பணம் கொடுத்து அறவிடாதும் கிடக்கின்றன நாரந்தனை பறங்கித் தெரு புனகிழக்கிலும் இக்கோவில் பேருக்குநில மிருக்கின்றன இவர் மகன் வேலாயுதர் காணி வேண்டி விட்டிருக்கிறார் பழைய தேர் திருவாரணம் செய்வித்தவரும் அக்கால பொக்கிசகாரரிவரேயாம்.

1855ல் ஐந்து பஞ்சாயுலதுமதிகார ரேண்ணப்படி சின்னத்தம்பி நொத்தாரிஸ் முத்துக்குமாரு ஆறுமுக உடையார் இராமலிங்கம் சின்னத்தம்பி விதானை கார்த்திகேசா மேற்பராமரிப்பு கோப்பாய் பரமசாமியெசமானுமாக இருந்தனர். 1898ல் 24376 இலக்கவளக்கில் அரசினர் கட்டிற்பாட்டிற்கு அமைந்த காரணம் எது பற்றி யென்பது தெரியாது பிற்காட்டிய இருவரும் ராச்சந்திரன் மூன்றாம் புதரல்வா ராமலிங்கம் புத்திரர்களாம் முருகப்பனின் மக்கள் முதல் திருவிழா செய்துவருகிறார்கள். சின்னத்தம்பபி விதானை இவர் ஒவ்வோர் திருநாள் உற்சவத்தையும் அதி சிறப்பாக செய்விக்கும் வலிமையும் பல சட்ட நிபந்தனைகளை உண்டாக்கி அதன்படி குரு பிராமணர் நடக்கும் ஒழுங்கையும் சோனகர் கரையார் பிறநாட்டுத்தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வோர் இவர்களால் கோயிலுக்கு ஓர் வரிப் பணத்தையும் வைத்தனர். தமது இளம்பிராயத்திரல் சிவபதமடைந்தனர். சின்னத்தம்பி வேலாயுதர் கதிர்த்தம்பி இராமச்சந்திரர் கார்த்திகேசர் வேலாயுதர் பொக்கிஷக்காரன் இராமச்சந்திரர் கோப்பாய் பரமசாமிக் குருக்களை மனேச்சராக்கிப் பழைய ஊஞ்சற்பாவைத் திருத்திப் பாடுவித்து கோவில் வீதி பழைய தென்னைகளை உண்டாக்கிவரும் புத்தூர் முருகர் இணுவில் முருகரேன் இரு மெய் காவற்காரரை நியமித்தவரும் பழையகேணியை அந்நிய சாக்கட்கு உதவுமாறு புதுக்கியவருமாம் இவர்நொத்தாரிசின் தம்பி 1882ல் சிவபதமடைந்தனர் வேலாயுதர் 1886ல் சிவபதமடைந்தனர் பிரம்ம ஸ்ரீ பரசாமிக்குருக்கள் வயிரவநாதக்குருக்கள் ராமலிங்கர் கார்த்திகேசர் ராச்சந்திரர் முத்துக்குமாரு இவர்கள் பெரியகோட்டுத்தீர்வைக்கு அடங்கி பூசை செய்விக்கும் உரிமைப்பலத்தையுங் காட்டாது மானேஜராகிறார்கள் இவர்கள் கோவில்தண்டில் கருமங்களைப் பார்த்து மூன்று காலப்பூசையை உண்டாக்கி இரகு நாதமுதலி தீவு பற்றுமணியம் உதவிமேற்கொண்டு கருங்கற்றிருப்பணி செயவித்து ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களாலும் சன்மானம் பெற்றவர்களும் இவர்களேயாம் (ஆலயமடங்கள் தன்னை கல்லினாற் சமைத்த பேர்கள் கயிலைவிட்டகலார் என்றபடி கார்த்திகேயர் 1900ம் ஆண்டில் முத்துக்குமாரு 1921ம் ஆண்ட முத்தியடைந்தனர் தற்போதுள்ள மனேஜர்களை 14181 இலக்கவழக்கு விபரத்தாலறிக சுபமஸ்து)

## நயினாதீவு நாகவம்ச அரசிதையலியாசி சரிதம் வருடம் 460க்கு முன்

முடிநாகர் மரபிற்சனித்த அல்லப்பிட்டியூர் ராமகிருஷ்ண முதலியாரை விவாகம் புரிந்து தியாகுடையார் சுந்தரமுதலி என்னும் புதல்வரைப்பெற்ற அரசினர் பால் அரிப்பு அல்லப்பிட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய இடங்களில் சலாபங்கட்ட உத்தரவுக் குத்தகையெடுத்து [கப்பற்காரன் அல்லது பிச்சைக்காரன் என்ற முதுமொழிக்கிணங்க கப்பற் படகுகளையும் அதற்குரிய வேலை ஆட்களையும் வைத்து நயினார்தீவுக்கு வேண்டிய சாமான்களை இந்தியாவிலிருந்து எடுத்தனைப்பித்து ஏனைய தீவு வாசிகட்கும் படகு மூலமேற்றியனுப்பினாரேன்பது இவரது கல்முறிகசிகாலும் நயினார்தீவு பெருங்குளம் அரசினர் கொள்விலை வாயு தாக்களாலும் நன்குதெரிகிறது.] காரன் அல்லது பிச்சைக்காரன் என்ற முதுமொழிக்கிணங்க கற்பற் படகுகளையும் அதற்குரிய வேலை ஆடைகளையும் வைத்து நயினார்தீவுக்கு வேண்டிய சாமான்களை இந்தியாவிலிருந்து எடுத்தனைப்பித்து ஏனையதீவு வாசிகட்கும் படகுமூலமேற்றியனுப்பினாரேன்பது இவரது கல்முறிகசிலும் நயினார்தீவு பெருங்குளம் அரசினர் கொள்விலை வாயு தாக்களாலும் நன்கு தெரிகிறது.

## எவடமெவடம் புளியடி புளியடி

இப்பண்டைச்சொல் முற்காலத்திலெவ்வூரு முதலிமாரையும் பல்லக்காளர் சுமந்துகொண்டு போய் புளியடிமரவடிகளின் கீளிறங்கி அக்கிராம மனு தீர்ப்புச் செய்வதாம் இவ்வூரிலே சுந்தரமுதலியாரை பிரமனாபுளி. ஆந்தைப்புளி. கட்டைப்புளி (கற்போது குளி) கண்டுநாள் காமிடமாக விளங்கிய இடமே நாலாம்புளியென்பர். இவ வைத்தபேரே துடரித்துறை. உவாந்துறை. வாகையடித்துறை படவுதுறை முதலியனவாம். இவ்வின்படகோன்று இந்தியா புதுப்பட்டணம் சென்று நெல்லேற்றியதுபோல் மந்தாசுபாஸ் இன்மையால் அவ்வரசினர் பிடித்துதண்டையல் நயினாமீபாபறனாந்து டோன்சுவா முதலியோரைச் சிறைப்படுத்திப் படகைப் பறிமுதலாக்கினான். அங்கிருந்து யாசுரம் வரவே இவ் சென்று முத்துமலை மேகலாபரணம் முங்கை வளசில் சூடாக ம் முதலான ஆபரணங்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இழ) வாயில்காப்போன் வழி விட சுவையணுகி ஓரச,ரீபாடுகிற அச்செய்யுள் வருமாறு.

பொட்டுப் பொடுக்கெனப புதுத்தாலிகட்டிப்
புதுப்பட்டணத்தாள்
வட்டம் பிடித்து வருந்தோழிதன்னை வரவழைத்து
கட்டி நங்கூரம்டும்படி கட்டளைசெய்துபின்னும்
தட்டிப்பணம் பறிப்பாள் நயினான் துலக்கன்
சதிகெடுதிதே

இச்செய்யுளைக் கெட்டமாத்திரத்து அரசன் புன்னகைசெய்து சிறையாளரை விடுவித்து இவவின் படகுக ளெத்துறையிற் சரக்கேற்றினும் தீர்வைபெறக்கூடாதென அஞ்சாப் பட்டையங் கொடுத்தனுப்பினன் 375 பரப்பு பெருங்குளம் இவ்வியறிலமேயாம். இவ்நயினார்தீவிலிருந்த விடம் ஆசியாபத்தி (ஆதிவளவு) பெரியமண்ணி நடுவகாடு இமராமநாதி வடலித்தோட்டம் கருமான்றிப்புலம் குறுட்டாலிகாடு இந்நிலங்களெங்கும் தற்போது இவவின்சந்ததியாருக்கே இருக்கின்றன இவ்வரசியே இவ்வூரில் பரதவர் திமிலர் பள்ளர் நாவிதர் வண்ணர் கொல்லர் தச்சர் முதல்யோரைக் கூட்டிவந்து குடியிருத்தினாவென்பத மகன் சுந்தரமுதலிக்கு அரசினர் பட்டர் கொடுக்கும்போது இவ தம்புதல்வருக்கு மதிகூறியபாக்களால் புலப்படுகின்றது.

## செய்யுள்

பார்ப்பார்க்குப் பச்சரிசி நெல் கொடுத்துப் பணி செய்வி
பறை யருக்கு
நீர்ப்பானைச் சோறுரத்தசத்தமொடு காலடியும்
நினைவுக்குச் செய்
சேர்ப்பாகு நளம் பட்டுக் கையடி செய்தொரு சோறு
செலுத்து தோணி
காப்பாண மதித்துரிமை சொலத்தினமுன் கடமை
செயக் கடனாவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனதுரை

பிராமணர் உத்தமராயிருப்பதற்குப் பச்சிரி உணவேதம் வருணாசாரம் கெடாமலிருக்கத்தகுந்த தென்றும் நெய் போசனவகைக்கு அதிமுக்கிய மென்றும் பறையருக்கு தாகவிருப்பதிக மாதலால் நீருள்ள சோறும் தண்டித்தும் பேசினாலன்றிப் பயப்படாரென்றும் அதினும் கமக்காரன் என்னைத் தொடாவிடின் அவர்க்கு நானென்ன பறையனென்றும் அவர்கட்கு காலிலே எப்போதும் அமிர்த நிலை உண்டென்றும் நளம் பள் முதலிய சாதியர் மது முதலியனவுண்பவார்தலின் கையடி செய்யில அப்பயத்தினால் நன்குமதிப்பார்களென்றும் அவ்விதமதித்தகாலும் கமவேலை உதவியாளராகையால் குடும்பத்துக்கு நெற்கொடுக்க வேண்டமென்றும் இவ்வூரிலுள்ள திமிலர் பரதவர் கலந்த சாதியினரென்றும் அவ்வூரிலிருந்து கூட்டிவரும்போது (இராமநாதபுரம் வரையில்) வந்தவரையில் அவன் பாலுள உரித்தாளர் போக விடாது தடுத்தனரென்றும் அச்சாதியார் எங்கிருந்தாலும் ஒருவிதமாய் வாழ்வாரேயின்றி ஏனையசாதிகள் போல அடிமைப்பட்டு வாளார்களென்றும் இதனாற்றான் இராமநாதபுரம் அழிவதுமில்லை திமிலனடிமைப்படுவதுமில்லை என்றகல்வெட்டுமுறி இராமநாதபுரம் கற்சிலை அரசர்கோட்டத்தெழுதப் பெற்றது என்றோ அல்லது நாற்புறமுங் கடல் சூழ்ந்த தீவில் கடற் பிரயாணஞ்செய்யும்போது தானச்சப்படா விடினும் பிறரச்சப்படுவாரெனக் கருதிச் சாதிகூறுவது தோணிகாப்பாரை மதித்துரிமை சொலவுள் பணிவிடை அவர்களால் தப்பாது நடக்குமென்றும் அது அவர்கட்குப் பிரதானமான முக்கியகடனென்றும் வற்புறுத்தியிருப்பதை நாமுமவர்களுமறியாது பகைகொள்வதிற்பிரயோசனம் யாது? இதனறியும் இனவுரிமை இல்லாவிடினும் தோணியிலிருக்குமளவும் நாமுமவர்களும் சமமேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபற்றியே கடல்வள்ளத் தீட்டுக்களித்து என்று இன்னொரும் கூறியிருப்பதறிகபுலவரும்.

வண்ணானைப் பணிகுறையில் வருத்ததன்றிக்கண் ணென
நீமதிமேபட்
கண்ணானைமுதல்மானாய்க் கருதுநலங்கூறாதே
கம்மாளர்க்கேள்
பண்ணான பரிவுகொடை முகமலர்ச்சி செய்பணிக்குப்
பழுதுண்டாயி
ணெண்ணாது அவருறவிற்கூறு செயவழிதேடு இணங்குவாரே

இ-ள். மனிதகுருவ வவயங்களில் கண்ணிரண்டும் எவ்வாறு சிறந்தனவோ அவ்வண்ணமே இவ்விரு குடிமக்களும் மானிட தேகமுடையாரெவர்க்கும் தேவையாம். சிகமுதற்றான அவயமாயிருதலின் அதற் பணிசெய்யும் நாவிதன் சிறந்துவனாயினும் இல்வாழ் வினாக்கன்றிச் சாதுக்களுக்கு நாவிதன் பணி அவசியமின்றி சாதுக்களாயிருப்போரும் உடைகிலமடையின் வண்ணானை விரும்பும் என்பதால் இம்மாது வண்ணானை முதலாவதாக வைத்தனர். நாவிதர் நரிகாகம் புத்தி யிற்குள்ள முடையோராகையால் இவர்களிடம் ஓர் சராபாய் நடக்க வேண்டுமென்றும் கம்மாளரின்றி இலவாழ்வான் சீவிப்பதருமையாதலாலும் அவர்கட்குச் செல்வமிருப்பினும் இவரில்லஞ் செல்வது பொருள்மிடிகாரணமாக வென்றும் அவ்விதம் தாதாகவனியாரா தலின நம்மிடம்வருவார் பணி விஷயத்தில் காலதாமதம் செய்வதே நம் குலத்தவரியல்பு. போயத்தப் பொய்மகளார் அக்கசாலை புக்கினளல் லவா தாம்தெய்வகம்மாளரேன்றபழம் பெருமையுடையார் ஆதரினிவர்கட்கு ஓரினியவசனமும் இயல்புக்கேற்பக் கொடையும் முகமலர்ச்சியும் செய்தாலன்றி ஒருபோதும் வசியமாகாரேன்றும் அவ்விதம்செய்யிலும் நம்பணியிற் பராமுகம் செய்வாராயின் இவர்களிலொருவரையடுத்து நமது நினைவிற்கு நடக்கும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து இவர் குலத்தாருட்பகையாக்கிவிடின் சடுதியில் மீண்டுவசியப் படுவாரேஉபதாம். இஃதன்றி வேறெவ்வகை உபாயபுத்தியுமாகா ரென்பது அமமாதுசிரோன்மணி கருத்து

வடசிறையை வருத்தாது தொழில் செய்விமங்கையரை
மானபங்கம்
தொடநினைவு செய்யாதே படையாச்சிமக்களை நீ
துணையாய்க்கொள்ளு
அடைவுள நம்பாதேசிக்கவதிசெய நினையாதே
அங்கமாலைப்
புடவியுளாக்கனுதினமும் நமது பண்குறையாது பொருளே
சேர்ப்பார்.

இ-ள் வடசிறைபடையாச்சி பரதேச பிரதேசங்களிலிருந்து வந்து குடியேறினார். (அங்காமாலை இவ்வூரிலுள்ள ஓர்காணி) தற்போது இவ்வித நாமத்தார் இங்கில்லை இவ்களிருந்தவிடம் வேளாத்தை வளவு திருமேனிவளவு குஞ்சுமணியர்வளவு பொன்னம் பெருமாள்வளவு கறுவல்வளவு சட்டடியாள்வாசல் பத்தினியாவாசல் பட்டிவாசல் நயினை தெற்கு ரிச்சங்காடு பதிலேழுமாம். இக்காணிகளை முன்கொடுத்த வமிசத்தாரே தற்போது ஆட்சிபுரிகிறார். ஆட்சிபுரிவோர்களின் பழைய பந்தல் கீழ்கொடுக்கும் சீதன ஓலையிற் காண்கிறது.

மடப்பளியாற்கிதமுரை நீமட்டுவாழ்தனிலிருந்து
வந்தபேர்க்கு
நடப்பதேதுஞ்செய்யாதே யுனைமதியார் பரபனகர்
வாசிகட்கோர்
இடுக்கணேதுஞ்செய்யாதே இவர் கொலைக்
கஞ்சாவெயினரின் னெடுந்தீ
வடுத்தவைரயாதரவுசெய்து முதல்வேளாளர்க்
கமைச்சுமீவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ-ள் மடப்பளி சங்கிலியரசனாலாக்கப்பட்ட சங்கைமடப்பள்ளி சயிலமடப்பள்ளி இராசாமடப்பளி குமாரமடப்பளி நான்கினு ளடங்கிய குலத்தவர் இவர்களோடு இனியவசனமும் எழுதுமட்டுவாளெனு மூரிலிருந்து வந்தவர்கள் (கல்வி செல்வம்) பராக்கிரமம் உடையோராயிருத்தலின் அவர்கட்கு விசேடமரியாதை கொடுத்து ஓர்சார்பாயிருவென்றும் (பாம்பன்) நகர்வாசிகள் வீரமுமையாராதலுலின் அவர்கட்கு இணங்கி நடந்துகோளென்றும் நெடுந்தீவிலிருந்து வந்துளோர் நல்லோராயிருக்க வேண்டுமென்றும் நாட்டரசனன்புகொளில் வலியோர் பகைமிஞ்சா தென்பது கருத்து.

அமைச்சியலும் வேளாளங்குடி குலம்புன்னைசேர்ந்து
பண்ணை
கமச் செயலற்றிருந்திடினும் நம்மூரிலிவன் குலமே
கலப்பைபூட்ட
எமக்குமதுவுவ ப்பாகுமென மகனே சுந்தரன நீ
இராசவாட்கை
நமக்குளதென் றுன்னாதே யூர்நாகவீஸ்பரிக்கு நம்புவாயே

இ-ள் ஊர் நமக்குளதென்றுன்னாதே இராசவாட்கை நாகயீஸ்பரிக்கு என்மகனே சுந்தரன நீநயினார்தீவென்னு மூருக்கு அரசி நாகயீஸ்பரி அன்றி என் தருமையானமகனே நீயென்று ஒருபோதும் மனதில்நினையாதே இங்கு அழியாவஸ்து அப்பராசக்தியன்றி வெறொன்றுமிராது. உன் மந்திரியாகிய வேளாண்டலைவனது தந்தையேயுனக்கு முதரிமுடி வைத்தனன் இவவூர் ஏர்ப்பணி முதலுரிமை இதுவரையும் அவன் குலவயோதிபர்க்குரியது. இப்போது புங்குடுதீவு மேற்குப்பகுதியில் விவாகஞ் செய்துளனாயினும் இவ்வூரிலவன் குலத்தாரை மதித்து நடப்பதன்றி புதியோரைத்தேடல் தகுதியன்று என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்திலும் சக்தியை விசேடமாக கறைகண்டனுக்கு மூத்தவளே என அபிராமிப் பட்டரும் வாய்முத்தம் சிந்திடுமோ நெல்வேலிவடி வம்மையேயெனப் படிக்காசுப்புலவரும் கூறியிருப்பதறிக.

இவ்வனுபோகபுத்தி நுட்பத்தை நிகழ்காலத்து மகனுக்கு கூறியது தம்சந்திதியாரும் பிறரும் எதிர்காலத்தையறிந்து அப்பராசக்தியை வழிபட்டுய்யுமாறு மதனாற்காலபேத வகையறிந்து உரலகிலொழுக வேண்டுமென்பதே பண்டைத்தமிழ் நூல்களில் நாம் வாசித்து வீரத்தாய்மார்களிலும் இச்சிறுகிராமத்திற்சனித்துக் கல்வி செல்வம் வீரமுடையளாய் வாழ்ந்ததுமன்றித்தவ புதல்வருடைய ளாதலின் இம்மாது விசேட மென்பது மிகையாது

## நயினைச் சுந்தரமுதலியார் சரித்திரம்

இவருக்கு குழந்தையாசிதையலம்மை இராமாசி ஐயம்பிள்ளை பெரியதம்பிநாகப்பன் எனப்புதல்வர்களுளர். இவர் தமையனாரே இராமச்சந்திரர் மாதுலனாம் இவர்களேநயினார் தீவில் பரந்து குடிகளாயிருக்கின்றனர். இவர்களிலொருவரை மற்றொருவரறியாது கோத்திரசூத்திரம் தெரியாது சிவகோத்திர உற்வசிய என்றிக்கால் அந்தணர் சொல்லச் சொல்லும் சூத்திரக்கிளிகளாகிய பொருள்தெரியாது மருள்கிறார்கள் இனியாவது தம்முன்னோர் நிலைமைபுணர்ந்துய்வாராக.

## பரதவர் கடற் சண்டை

நயினார்தீவுகிழகடல் பரதவக்கடல்லெனுமிடத்தில் நயினாமீராபர்ணாந்து டொன்சுவாவுக்கும் பரதருக்கும் ஓர் போர் மூண்டது. நெடுந்தீவு குகனாராசன் வீரநாராயணன் படையார் வெடியரசனுப்ப மீகாமன் காரநகரிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரத்தினம் சூறைபாடவா பரதவரும் வீரநாராயணனும் மாண்டனா. அதுகண்டு தையலியாசிந்து நாடுசென்று அங்குள கன்னியப்ப முதலி உதவிபெற்று அழைத்து வந்த திமில் மக்களன் சந்ததியரே வாதா ஐபன்கவியன் சந்திரவி அம்பலவி மூன்று கிணத்தடியாள் ஏழுகிணஒத்தடிமாதி இவர்களில் ஆடவர்களைப் பரதவப் பெண்களுக்கு விவாகஞ்செய்தமையால் இவ்வூரிலுள்ள திமிலர் தாய் தந்தைவாக்க விருவகைத் தொழிடையோர். இது பற்றியே இராமச்சந்திரர் பரதவரென்றார். நயினா இத்தீவிலிறந்துபோக மீராவிடத்தில் தீவேகின ஏனையோர் திருகோணமலை சென்றதாக காவியமுண்டு அங்கிருந்து வந்த பெண்சாந்ததியாருடன் (கலியஉடிமையென) காளி கூறிவந்துளார். இவர்கள் பிற்காலத்தில் தம்பாட்டி நித்தியவெட்டை திமிலமடம் இவற்றில் கமக்கார வசிக்கிறார்கள் காளி விழுந்தான் பனையென வொன்றைக் கிளக்கிற்காடு காணியில் யான்பார்த்துண்டு. இவர்கட்கு இராமச்சந்திரர் ஆறாம்திருநாளை கொடுத்ததுமன்றிக் குடியிருப்புநிவமு மீந்தனர். தற்போது சிறிது மாற்றமடைகிறா பல தேசவிவாகமேயிதன் காரணமாம் ஏழாம்நாள் குகனுரிமையாற்கு அன்றுதான் ஆதிசேடன் வெளிவருவார்.

## நயினார்தீவு தெற்குத்திமிலர் வருகை சுமார் 300 ஸ்ரீ (பள்ளர்வருகை)

உலுவீசுகதிர்காமஉடையார் என்போரே கன்னியா குமரிதீர்தயாத்திரைசென்று வரும்போது செங்கடக நாகரியுலிருந்து வழித்துணைவனா ராமன் கிருஷ்ணன் நாகப்பன் என்போரையும் வேட்டமங்கலத்திலிருந்து ஆள்வான் நாகன் கூரான் பத்தான் குடும்பியின் குடும்பிச்சி என்போரையும் அழைத்து வந்தனர். [இவர்காலிங்க மரபினர்] திமிலாட்களுக்கு வாரியாமனற்காடு எனும் காணியையும் பள்மக்களுக்கு மஞ்சார நிலத்திலோர் பகுதியையும் கொடுத்தனர் பள்ளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிமறித்த கள்ளன் இவர்கள் வழித்துணைச் சினேகிதமின்றி முள்ளது பள்மக்களுள் சிலர் மகம்மதுமதம் தழுவியதால் உடையார் மரபுதித்தமா பொன்னர் செய்யுளியற்றிக் குடியெழுப்பி விட்டனர் திமிலர் கல்வி செல்வம் மரியாதை கமமுயற்சி தோணி வர்த்தகம் உடையோர்.

## கம்மாளர் வருகை

திருநெல்வேலிச்சில்லாவிலிருந்து தெய்வளைக் கூட்டி வந்தவருமிவரேயாம். தெய்வளிவயல்காரையடிவயல் கொடுத்திருக்கிறார் பெரியகாடு கற்றாளைமுளை புத்திரகள் குஞ்சி துற்காளுக்கு (காரைநகர்) மின்னன் மைத்துன்னி புன்னனை விவாகஞ் செய்யும்போது கொடுத்தனர். இராமச்சந்திரரும் நிலமுதவினர் இராமச்சந்திரரேயுன்னை கூட்டி வந்தாரெனக் காவியமுண்டு இவ்வுடையாரை கோவிற்கணக்கு தோம்பேடுகளில் இரண்டாவதாகக் காணப்படுகிறது.

## பறையர் வருகை

கோவியனார் கிளை இளையாச்சி இராமச்சந்திரர்
உடையார் நயினார்தீவுவடக்கு
கைதடியார்கிளை- கதிர்த்தம்பி மூன்று குறிச்சியும்
கோட்டையினார் கிளை- சுந்தரமுதலி வடக்கு
மனப்புலியாகிளை கதிர்காமர் வேலாயுதர் இரண்டு
குறிச்சி
நல்லனார்கிளை- கந்தப்பர் விசுவநாதர் நடுக்குறிச்சி
அகமபடியாகிளை - இராமலிங்கன் காசிநாதன் தொகு

மேற்கண்டவாகளில கைதமயாசிளையே பறையரில் மேலாம். 1878ம் ஆண்டு வரையினும் (குடிப்பறையரென்ற பலனுண்டு தற்போது பறைமேளம் வியாபாரமாயிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணா ரம்பட்டர்

வழி வழியாதீன பரம்பரையர் இவர்கட்கு இராமச்சந்திரர் கதிர்காமர் வேலாயுதர் வேளகதிர்காமஉடையார் வேலப்பர் முத்துக்குமாரு இவர்கள் காணி உதவியிருக்கிறார்கள் இவர்களென்றும் அவ்வச்சந்ததியாரை மதித்து நடப்பவர்

## வேளாளர் கார்காத்த மரபினர் காவிரிப்பூம் பட்டினம்

இவர்கள் பட்டருடனுள்ள கண்ணப்பர் வமிசபரம் பரையினர் பிற்காலம் கலந்துகொண்டனர். இவர்களில் கல்வி செல்வம் அதிகார கீர்த்தி ஞானம் ஒழுக்கம் நீர்வளம் நிலவளம் நன்னிலை உடையோர்.

## வேளாளர் மதுரை இராமநாதாபுரம் பாம்பன்

இவர்கள் வரும்போது தேவமார் அடிமைக்காரி குடிமக்கள் பெரும் பொருட்செல்வமுளராய் கரம்பன் புங்குடுதீவு நயனார்தீவிலும் குடியேறினரென்பதும் மந்திர வித்தை முதலியன உடையோரென்பதும் இவர் கடன் கொடுத்திருக்கும் கலிடண நறுக்கு ஓலைச்சுவடியானும் பிடிவாத ராசதகுணமுடையோர் ரேன்பதும் கட்டடியாவாசலில் குடியிருந்த விநாயகர் செய்கையாலும் பிள்ளையாபட்டர் இராச்சந்திரரின் மகன் மண்ணாச்சியை மனமிலாவிவாகஞ் செய்தவகையினாலும் வயிரமுத்தர் புகையிலைவெட்டிய கள்ளரை அவ்விரவு முழுவதும் மந்திரவித்தையால் நிற்க வைத்தமையாலும் (சுந்) தையலிபாலினாலும் தெரிகிறது. இப்போது கலப்பு விவாகஞ் செய்துள்ளார் வாதவூரன் ஞானன் சிதம்பரன் விநாயகர் வேலப்பா முத்துக்குமாரு இவர்கட்கு நிலமதிகமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேளாளர்

நெடுந்தீவு புங்குடுதீவு முதலிய இடங்களிலிருந்து பெருமக்களும் பட்டர் குலத்தில் விவாகஞ் செய்துள்ளார். ஆகையால் நாகர் குலம் சிறந்ததென்பது நன்கு பலப்படும்.

## பிராமணர் மாவிட்டபுரம்

தேசிகர் சின்னமனத்துளார் ஆண் சந்ததியும் அச்சுவேலி குடி விநாயகர் பட்டர் வெண்சந்ததியும் சேர்ந்தவர் விநாயகப்பட்டர் சந்ததியாரே இவ்வூர்க்கு குரு ஆட்சிமுறையார் ருராகையால் சைவக் குரு மார்கிடையாது.

## கட்டளைக் கலித்துறை

காசிபர் பாரத்துவாசர் வசிட்டரொடர்த்தரியா
தேசிகர் கோத்திரமாறெனும் சூத்திரத்துக்குமேலாம்
மாசிதில்லாநற்பெரிய மனத்துமாவிட்டபுரத்
தேசிகன் சின்னமனத்தாதி சைவருள் சேர்குலமே
பிரம்மஸ்ரீ ஐ.நாகலிங்கக் குருவின் அன்னையார்
சரமகவியிலொன்று
சின்னமனத்தான் செயும் விருந்திரசாற்றுருசி
அன்னைதனை விண்ணோ ரறிந்திருந்தால்
முன்னலைவாய்
வெற்பதனைக்காவி யுய்த்தவேலை கடந்தோ னமுதை
அற்பமெனத் தள்ளுவரேயாம்.

இது டாருதட்டாவல்லி சோழராசன் விருந்திற் கூறியவெண்டாவாம் 1808ம் ஆண்டிலிருந்து இருக்கு. கசுர். சாமம். அதர்வண மெனும் பகுப்பையுள நான்காம் திருநாளுற்சவமிச்சந்ததியாதே செய்து வருகிறார்கள். குருக்கள்வர்களின் சந்ததியார் பகைகொள்பவராதலின் ஊரார்க்கு முன்கொடுத்து வந்த மங்கலப்பேறு ஒன்றும் கிடையாமற் போயிற்று ஊரவர்களும் முன்காரியங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து நடத்தவில்லை இனியாவது முன் விஷயங்களை இருதிறத்தாரு மனுசரிப்பாராக.

## இராமசந்திரர் செய்யுளிற்குறிய புரோகிதர்

பிராமணன் இளையதம்பி இராமலிங்கன் காசினாதன்

இவர்கள் நாகமரபும் வைதிகரும் கலந்த பஞ்சாங்கம் பார்ப்பார் திவசம்திதி எழுதியிருப்பதாய்த் தெரிகிறது. கணேசபத்தியுடையோர் பட்டர்மரபிலும் பார்க்க கல்வியுடையோராய் இவர்களது பக்ததிமுறையிலும் புராணவெழுத்திலும் காண்கிறது. நாகபூஷணி ஆலய மூன்றாம் நாளுற்சவம் முற்காலமிவர்கட்கே. 1730ல் பறங்கியரசனாலும் பின் ஒல்லாந்தராலும் ஊரைவிட்டுக் கைத்தெப்பத்தால் காசினாதன் புன்குடுதீவு அடைந்து சிங்கஉடையாருதவிபெற்று நெடுந்தீவு இராமுமணியம் கேள்விக்கிசைந்து போய் நோலனரச வையணுகித் துளசித்தீர்த்தம் கொடுக்கும் சேவகமும் கோவிற் பூசையும் செய்தனர். இவர் சந்ததியார் நயினார்தீவிலிருப்பார் தவிர ஏனையோர் பல விடயங்களில் பிராமணராக விருக்கின்றனர்.

**இளையதம்பி மரபினர் 1860 வரையிலும் பிராமணராய் இருந்தனர்.**

**நயினை வடக்குப் பள்ளர்**

இவர்கள் படையாச்சிவகுப்போர் படவுதுறை இறங்கியவர் மரபார் தற்ததுபோது பலவிடவிவாகம் இவ்வூர் ஐபம்பெருமாள் கதிர்காமவுடையார் சந்ததியன்றியே தொன்று தொட்டது இப்போது அவர்கள் சுயாதீனமாக நினைவு

## கோவில்கள்

வீரபத்திரர்கோயில் முருகன் கோவில் காட்டுக் கந்தசுவாமி பிடாரி கோவில் விநாயகராவடம் ஐயனார்கோவில் நாகபூஷணி ஆலய வீதி நகரலத்தார் மடம் இரகுநாதமுதலியார்மடம் சுப்பையாமடம் ஐபங்கள் மடம் ஸ்ரீமாந் அம்பலவாண மணியக்காரன் மடம் ஸ்ரீக-மாரிமுத்துமடம் இவ்வூர் மடங்களாம்.

வித்தியாசாலை

நாகபூசணி வித்தியாசாலை, கணேசவித்தியாசாலை இந்துபோர்ட்

**நாகதுவீப மகத்துவம் முற்றிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை

**பூர்வீக சரித்திரம்**

நயினை நாகபூஷணி

# ஸ்தல வரலாறு

நயினையூர்.

சுந்தரர் ஐயாத்துரை (சோதிடர்)

அவர்களால்

வெளியிடப்பெற்றது

1957



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புரை

ஸ்ரீ சுந்தரர் ஐயாத்துரை அவர்கள் எழுதிய நயினை நாகபூசணி அம்மன்கோயில் வரலாற்று நூலைப் படித்துப்பார்த்தேன். இலங்கையிலுள்ள புராதன ஷேத்திரங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டுவரும் இக்காலத்து சரித்திரப்புகழ் பெற்ற இவ்வாலயமும் தலம், தீர்த்தம் மூர்த்தி என்பவற்றால் சிறந்து விளங்குவதோடமையாது சிற்பம், கோபுரம், இரதம் என்பவற்றாலும் சிறந்து விளங்குகின்றது ஈழத்துச் சைவர்களுக்குப் பெருமை அளிக்கின்றது.

இச் சிறந்த ஷேத்திர வரலாற்றை ஆராய்ந்து வெளியிடும் இந்நூலாசிரியர் சிறந்த சோதிடர் ஆவர் இந் நூலின் கண் ஆலயத்தைப்பற்றிய வரலாறுகளும் ஆலய குருமார் பரம்பரையின் வரலாறும் நன்று ஆராயப்பட்டுள்ளன. ஆமலும் ஆலயத்தில் நிகழும் ஐதீக முறைகளும் உற்சவ விபரங்களும், அவற்றின் தத்துவங்களும் நூலின் தன்மைகளமையச் சேர்க்கப்பட்டிருப்பது ஆசிரியரின் திறனை எடுத்துக்காட்டுகின்றது.

இந்நூல் ஏனைய ஈழத்தல வரலாறுகளுக்கு ஊக்கமளிக்குமென்று நம்புகிறோம்.

காரியதரிசி
வேதாகம நூல் நிலையம்    கு.பாலசுந்தரக்குருக்கள்
மாவிட்டபுரம்
24 - 5 - 57

---

நயினாதீவையே பிறப்பிடமாய்க்கொண்ட திரு.சுந்தரர் ஐயாத்துரைச் சோதிடரை நன்கு அறிவேன் அவர் நாகபூசணி நல்வரலாறு எனும் நூலுக்குப் பல சுருதிஸ்மிருதிகளும் பட்டமார் பரம்பரை கண்ணப்பர் வரலாறு மாவிட்டபுரம் அச்சகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பு நோத்தாரிசு உதவி வையாபாடல் தசீதிராமாயணக் கூற்று வாதுளாகம விதி சங்கராச்சாரியர் தரிசனம் இன்னோரன்ன பல விஜயங்களை எடுத்தாண்டுள்ளார் திருவிழாமகிமையையும் ஒருவாறு விளக்கி உள்ளார் அதன்றியும் ஆலய பஞ்சாயத்தாரில் ஒருவராயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீமான் வே.சுந்தரம்பிள்ளை விரும்பிய வண்ணம் தான் தொகுத்ததாகவே முதற்செய்யுளிற் செப்பி இருக்கின்றார் ஆதலாலிதனை எம் சைவசமயங்கள் யாவரும் உலகமாதாவாகிய ஸ்ரீ நாகபூஷணியம்பாளின் சரித்திரத்திலார்வங் கொண்டு வாங்கி வாசித்துணர்ந்துய்யுமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்
**ஐ.வைத்தியநாதக்குரு**
மாவிட்டபுரம்

22 - 5 - 57

ஸ்ரீ நயினை நாகபூஷணி தீர்த்த தல வரலாறும் மூர்த்தி விசேடம் தீர்த்த விசேடம் தலவிசேடம் இம்மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று விளங்குவதும் அதன் தத்துவார்த்த விளக்கமும் உண்மை அடியாற்கு பராசக்தி அருள் புரியும் அற்புத காட்சி மகிமையும் அத்தலத்தில் அடியார் கூட்டங்கள் சேவை செய்யவரும் காலங்களில் அடியார் கூட்டங்கள் தொண்டு செய்யும் வனப்புகளும் அதன் தத்துவ நியாயங்களும் சைவத்தின் வேதாகமவிதி ஒழுக்கங்களும் கற்றேற்கும் மற்றேற்கும் எளிதில் காட்சியளிக்கும்படி ஆக்கியோன் வேதாகம விதிகளில் ஆறு அங்கமுறைகளும் நன்கு கற்ற மகா மேதையும் சோதிட சிகாமணியுமான சுந்தர் ஐயாத்துரை அவர்கள் யாவராலும் என்றும் போற்றற்பாலாராவர்.

இங்ஙனம்
மாதகல் பதிவாழ்
*திரு.நா.அருணாசல தேசிகர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

பூமிகு நயினை நாக பூசணி தலவி சேடம்
தேமிகும் ஐதீ கத்தின் செய்திகள் மறையா வண்ணம்
பாசமிகு நூற்சான் றதி பரப்பியே தொகுத்தான் அவ்வூர்த்
தூமிகு பக்தன் ஐயாத் துரையெனுஞ் சோதிடன் காண் (1)

நானிலந் தன்னிற் செல்வம் நற்கலை சுகவாழ் வின்ன
கானிமிர் கமல மாது கலைமகள் துர்க்கை ஈவார்
தானிவவள் அனைத்தும் நாக பூஷணி தருமி ராகு
வானுறு கேது தோடம் மருவினேர் குறையுந் தீர்ப்பள் (2)

அன்னபண் பதனை மாந்தர் அம்மைநேர் கடன்பூண் டன்பின்
மன்னுமில் வாழ்க்கைப் போகம் வளர்மகப் பேறும் பெற்று
முன்னிய மகிழ்ச்சி பொங்க, முழுதுங்கண் கூடாக் கண்டும்
அன்னபூ ஷணியின் பத்தி யாக்குநூல் இதுவு மாமால் (3)

வண்ணார்பண்ணை
1 - 6 - 1957 **வித்துவான் சு.ந.சுப்பையாபிள்ளை**

### வெண்பா

நாகே சுவரி நயினை வரலாறு
ஓகோ எனவியப்ப ஓதினான் - தோகாய்கேள்
சொற்புலவன் ஐயாத் துரைசோ திடவல்லான்
பற்பலநூன் மேற்கோள் பகர்ந்து.

திருநெல்வேலி
சைவாசிரிய கலாசாலை
8-6-57

இங்ஙனம்
**சி.கணபதிப்பிள்ளை**
பண்டித சிகாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுசீர் விருத்தம்

சுந்தரரும் மேல்வருணத் தோகை
யொயிற் றேகையுந் தந்தோன்ற லாகத்
தந்தவுரைத்துரை யருஞ் சோதிடத்துரை
யையாத்துரைப் பேர்தரித்த சீலன்
சிந்தைபுதன் பொன்னை யன்ன சகலகலா
வல்லவள நத்தினத்தின் முத்தம்
வந்த கடல் புடை யுடுத்த
நயினை நாகேஸ்வரியின் வரலாறென்றை

வேறு

கத்திய ரூபமாகச் செப வெண்ணி
யாராய்ச்சிக் காக
மெத்திய விந்தியா மாவிலக்கை
யெவ்விடத்தும் மேவிப்
பத்திய ரூபமேற் கோளெடுத்
தச்சிற் பதிப்பித் தீந்த
வித்தவத் தினற்குச்
சற்பாபரணி நல்லாயுளீக

கலிவிருத்தம்

வந்த விவ்வரலாற்றை நயினை வாழ்
சுந்தரத்த ரையாத்துரைச் சோதிடர்
தந்ததால் நயினைச் சரிதம் பல
புந்தி கொண்டனம் மாபெரும் புண்ணியம்.

ஆ.தில்லைநாதப்புலவர்
சரவணையூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா

சீரார் நயினையென்னுந் தீவதனிற் கோயில் கொண்ட
பேராருணக பூஷணியின் - நேராரும்
நற்கதையை நாடியை யாத்துரையா நல்லறிஞன்
பொற்புறச் செய்தீந்தான்புவி.

வித்துவ சீரோன்மணி
பிரம்மஸ்ரீ சி. கணேசய்யர் அவர்கள்
புன்னாலைக்கட்டுவன்

வெண்பா

இன்பம் பெருக் எழில் நயினை வீற்றிருக்கும்
அன்பு அருள் நாகபூஷணியின் - மன்பேர்
வரலாறுகண்டே மகிழ்ந்திடுமின் என்றும்
தரைமீது வாழ்வு தழைத்து.

வித்துவான்
**சி.ஆறுமுகம்**
புங்குடுதீவு

கட்டளைக் கலித்துறை

செந்தமிழ்த் தெய்வச் சிலம்பொலிமாண் பால் திசையனைத்தும்
இந்திரன் பொன்னகர் போலிசையொக்கும் எழின் நயினை
வந்தருள் செய் நாகபூஷணியம்மை வளர் சரிதை
சுந்தரப் பாவலன் அய்யாத்துரை மன் தொகுத்தனனே.

**வித்துவான் க.வேந்தனார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்மாள் கோயில் நயினைப் பதியமைந்த
யோகமமான் பேருரைக்க யோசித்தார் - தாகம்மாய்
சுந்தர னையாத்துரையார் சொன்ன வரலாறிதனை
இந்தரமும் காண்போமினி.

இ. ஐயாத்துரை

நயினாதீவு, நாகபூஷணி பக்தன்.

இவ்வூர் நாகபூசணி யாத்திரை உற்சவகாலத்தில் தொண்டாற்றுமாறு அடியார்கட்கு உதவிபுரிபவர்கள் பின்வருமாறு.

தீவுபற்று கிராமாதிகாரி டீ ஆர்.ஓ.ஸ்ரீமான் கந்தையா அவர்கள்
நயினாதீவு கிராமவிதானை, ஸ்ரீமான் கா.க.சிவசிதம்பரம்
உபவிதானை, ஸ்ரீமான் நா.வே.சிவப்பிரகாசம்
கிராமச்சங்கசேமன், சமாதான நீதிபதி, வே.கந்தையா அவர்கள்
சங்கபோட் மனேசர் இ.பூபாலசிங்கம்
கிராம முன்னேற்றச் சங்கத் தொண்டர் படை
பொலிஸ் அதிகாரிகள்
கைவசம் பணமற்றோற்கு தாகசாநட்தி செய்பவர் அவ்வூர் றிசீஸ்ராரின் தேநீர்ச்சாலை. ஆலயத்திற்கு தெற்கே போகும்வழி.
ஸ்ரீமான் வே.ச.விஸ்வலிங்கம்

- இன்னும் பல அன்பர்களும் உண்டு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நயினை, நாகபூசணி ஸ்தல வரலாறு

விருத்தம் (தோத்தரம்)

நயினை மாநகர் நாக நாகேஸ்வரி
ஒயிலநாதி உற்பத்தி உலகுளோர்
பகில நாயடியேன் பகர் பாவிற்கு
கயமுகத்தனைக் கைதொழு தேத்துவாம்.

யாழ்ப்பாணமிருந்து தென்மேற்கே 93/4கலை அஷம்மிச சதுரமுள்ளதும் தீபகற்பமெட்டினும் அதி நேத்திரமாய் விளங்குவதும் நயினாதீவு, நாகதீவு, நாகநயினர்தீவு, நெயினாதீவு, நயினர்தீவு பூந்தோட்டம் மணிபல்லவம் எனப்பலராலும் பல நாமதேயம் பெற்றதும் தேவி காலோத்தரம் 64 பீடத்தில் இரத்தினபீடமாய்க் கண்டதும் இற்றைக்கு 3600 வருடங்களுக்கு முன் நெடுந்தீவு மேற்கில் கோட்டை கட்டி வசித்த வெடியரசன் அவன் தம்பி வீர நாராயணன் மனைவி நீலகேசியும் இங்குள நாகரத்தினத்திற்கு அதிபராய் வாழ்ந்த இடமும் சோழராசனுதவியுடன் மாநாய்கன் மாசாத்துவான் எனும் வணிகர் கண்ணகிக்கு காற்சிலம்பு செய்வதற்கும் இராச வனிதையர் அணிகலன்களுக்குமாக அவர்களது கப்பலில் மீகாமனையும் பரிவார ஏவலாளர்களையுமனுப்பி இரத்தினமெடுக்க ஷ வீர நாராயணனையும் நீலகேசியையும் பிடித்து அவர்களது பாய் மரத்தில் கட்ட வீரநாராயணனும் ஏனைய பாதவர்களும் உயிர் துறந்தனர். இந்த இடம் பரதவர் கல்லு, இப்போது பரவக் கல்லென வழங்கி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது நயினாதீவு கிழக்கு கரையில் கடலிலுள்ளது.

இங்குள்ள பரதவப் பெண்களுக்கு நாயகன்மார் இறந்ததினிமித்தம் இந்தியாவிலுள்ள சிந்து நாட்டிற்குத் தலைவரான கன்னியப்ப முதலியாருக்குப் பாசுரமனுப்பி அங்குள்ள திமில் மக்கள் கலியன், நாகன், வாதன இவ்வித திறந்தார் வந்து விதவை மாதரை மணஞ் செய்தனர் இதனால் நயினாதீவுத் திமில் மக்கள் இரு சாதிப்பிரிவினர். இதனால் ஏகமானேசர் இராமச்சந்திரன் கடற் பிழைக்கும் பரதவர் எனக்கூறியிருப்பது காண்க. இந்தியா முதலியார் அக்கால கோவிலாதீனத்தார். மனுப்படி நயினாதீவு வந்து தங்கியதால் கோவில் எசமான் முதலியார் வளவு என்று இப்போதம் கோவில் தெற்குப்பக்க இடத்திற்குப் பெயருண்டு.

**(அப்போது நீலகேசி புலம்பல்) விருத்தம்.**

மக்களிறந்த விடும்பையினும் மனையாளிறந்த விடும்பையினும்
மிக்க விடும்பை யொவ்வாத விதவையிடும்பை யெனவிளம்பித்
தக்கவதனலென் கழுத்திற்றலி நீதந்தனை யென்னத்
தொக்கமலர்ப் பூண் மார்பானைத் தொழுது பின்னுமிவை
சொன்னள்

இவ்வித நியதியினிமித்தம் உற்சவ நாள். 6 பரதவருக்கு, 7 குகனுக்கும் அங்கு வந்தது. இதன் நிர்வாகத்தை இப்போது உள்ள பரதவர் புங்குடுதீவு பிற இடங்களில் மாறி வியவகாரம் செய்தமையின் திருநாள் மாறிற்று. பாம்பன் பாலத்திற்கு வடபாகமாய் உள்ளது பூர்வ தீர்த்தம்.

**பாம்பு சுற்றிய கல், (கருடன் கல்)**

இது ஐயனார் கோவில் வடபாகக் கடலில் உள்ளது. இக் கல்லிலிருந்து சுமார் 11/4 மைல் தூரம் வடக்கிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியங்தீவில் ஓர் காலம் நாகங்கள் புஸ்பமெடுத்து வாயிற் கௌவி வந்து இவ்வம்பிகையைப் பூசிக்கும் பேறு இருந்தது இதை பகைவனான கருடன் தடைசெய்தது இதனால் கருடன் எரிந்து சாம்பராயிற்று இருகல்லும் இப்போதும் இருக்கிறது.

**(புளியந்தீவில் நாகேஸ்வரன் கோவில்) சரித்திரம்.**

இத் தீவுக்கும் அனலை தீவுக்குமிடையில் கால்வாயுள்ளது சோமசூரியர், அக்கினி, அம்புலி, இது சந்திரனுடைய தீவு, அனலை அக்கினி பகவான் தீவு, பருதி சூரியனது தீவு, என்பது தசீதி இராமாயணக்கூற்று. பிற்காலம் நயினாதீவிலுள்ள கண்ணப்பன் சந்ததியார் அங்கு குடியேறி அப்பரம்பரையாரே இதனை நிர்வகித்து வருகிறார்கள் கோவில் இடித்த கல்லு ஊர்காவற்றுறை சங்கு மாலடியில் ஓர் கோட்டை கட்டி அழிந்து கிடக்கின்றது.

டச்சுக்காரர் காலத்தில் நாகபூசணி ஆலயத்தை இடித்து ஓர் படகிலேற்றி வரும்போது இத்தீவுத் துறையில் மரக்கல மோடாதது கண்டு ஓர் ஐந்தலை நாகலிங்கத்தை பாலுமி கொலம்பஸ்தீன் தூக்கி கரையினில் வீசினான். அதை அனலைதீவு வாசி ஸ்ரீமான் ராமுடையானும் நாகப்பனெனும் கண்ணப்பன உரிமையாளனும் கண்டு எடுத்து தமது நாகனக்காடு எனும் காணியில் நிலை நாட்டினார். அவ்விலிங்கம் வழிபாடு செய்துவந்து இப்போது சிவலிங்கம் வைத்ததின் பின் பலிபீட அருகில் பூசைக்கமர்த்தி இருக்கின்றது.

**சூரியனிறக்கம்**

அதனருகாமையில் சூரியனிறக்கமெனும் ஓர் நிலமுண்டு. ஓர் யுகத்தில் சூரிய பகவான் பூமிக்கு நெருங்கி வந்து காட்சி கொடுத்ததாகத் தசீதி இராமாயணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகேஸ்வரப் படலத்தில் கூறுவது. வட்டுப் புலவர் நா.ஐயர் கூற்று.

[புளியந்தீவு லிங்கம் நயினாதீவிலுள்ளதால் பூர்வம் சேர்க்கப்பட்டன]

நயினாதீவு வடக்கு ஐயனார் கோவில்

இம்மாசாத்துவானை வேதப்பன் கண்ணப்பரென்பார் காவிரிப்பூம் பட்டினமிருந்து வரும்போது நயினாதீவு வடகிழக்கு மூலையில் வந்திறங்கினர். ஓடம் வந்து அதில் தங்கியதாலின்றும் ஓடத்திடல் என்றும் அவரது லிங்கத்தை அந்நிலத்திலே தாபித்து வைத்தனர். இதனால் இவ்வூரில் முதலாவது ஸ்தானம் கண்ணப்பருக்கென்றறிக இவ்விடத்தில் 7 கப்பல் திரவியம் கட்டப்பட்டிருக்கிறதென்றும் ஐயனார் காவல் என்றும் அன்னாளில் இருந்த செப்புத்தேர் கடலில் மறைந்ததென்றும் கர்ண பரம்பரையில் உண்டு அன்னாள் எழுதிய கல் உடைக்கப்பட்டு அரைவாசி அம்மன் பீடத்திலும் அரைவாசி கோவில் வாசலிலும் கிடக்கிறது.

தலைவிசேடம்.

இந்தியாவிலிருந்து பாம்பன் கணவாய் வழியாக வந்த நாகர் வம்மிசத்தினர் இத்தீவில் மலையிருப்பதால் இவ்விடத்தில் உள்ள மலைக்குகையில் வசித்து வந்தனர். அக்காலத்திலித்தீவ 9மைல் சுற்றளவுடையதென்றும் நெடுந்தீவிற்கும் இதற்குமிடையில் நந்தித்தீவென ஒன்றிருந்து கடல் கொண்டதென்றும், கிழக்கே எல்லைக்கல் மேற்கே பாக்குத் தொடுவாய், வடக்கே ஓர் கால்வாய் முற்காட்டிய பாம்பு கெருடன் கல் தரையாயிருந்ததென்பது தசீதி இராமாயணம்.

இதனால் குறிகட்டுவான் அருகு உவான் மேற்கு உவாந்துறை இதனால் இவ்வூரில் எழுவான், படுவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது மாம்பழ வடிவமாயிருக்கிறது. இவ்வூர் பழங்குடி நாகர் இதனாலன்றே மண்தோன்றிக் கல்தோன்றக் காலத்து மாநாயக்கன் முன் கண்ட மூத்த குடி என நயினாதீவு தெற்குள் ஒரு குடும்பத்தைக் கண்டு நாகரத்தினம் கொள்ளும்போது கூறியுள்ளார். இது மாநாயக்கர் கல்வெட்டிலிருக்கிறது.

நாகர் வம்மிசத்தினரும் நாயனார் பட்டரும் ஏக எசமான் இராமச்சந்திரரும், வசித்த இடம் தெற்குப் பகுதியே. இராமச்சந்திரருடைய இடம்(கலடு) நிலம். பட்டர் வசித்த இடம் மண்ணிப்புளி எனச் சொல்லினும் பட்டர் வளவளவெனவே இங்குளபாலரும் பகர்வர்.

**(நாகரத்தினம்) நாகங்களில் நான்கு வருணமுண்டு.**
**நாவலர் மருகர், வித்துவ சிரோன்மணி**
**ஸ்ரீலஸ்ரீ.ந.ச.பொன்னபலமவர்கள் செய்யுட்படி.**

"நாகத்தின் சென்னி நடுவே இரத்தினம் என்பதற்கமைய" சர்ப்பங்களின் கருப்பையிலிருந்து நிதமும் சிரசேறிப் பக்குவ காலம் பூமியிற் கக்குவது, அதுவும் புண்ணிய பூமியில் வசிக்கும் புண்ணியவான்களுக்கே. திரவியம் 25ன் மேலானது. இதை இங்குள்ள நாகர் குலத்தவர் எடுத்து கிரயஞ் செய்வர். இவர்களில் அணி நாகர் மணி நாகர், முடி நாகர் என முத்திறப் பகுப்பாளருமுண்டு. அணி நாகர் தொழிலாளர், மணிநாகர் வியாபார வர்த்தகர், முடிநாகர் அரசுரிமை கப்பற்காடி உடையோர். இவர்கட்கே பிறதேச செல்வாக்குண்டு. இக்காலம் இந்நாகரது பூசையே உள்ளது. (நாகரது குலதெய்வம்) நாகேஸ்வரி.

**இலிங்க வரலாறு**
**இலிங்கம் ஐந்து வகை உடையது.**

சுயம்புலிங்கம். இது தான் தோன்றி, இந்தியா நர்சிங்கவர்மன் கூற்று. சுவாயம்பு லிங்கம் பிரம விட்டுணுக்களாலாயது 14000 வருஷத்துக்கு மேற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைவிகலிங்கம் விக்கினேஸ்வரன் கந்தரால் வைக்கப்பட்டது. ஆரிடலிங்கம் இருடிகளாலாக்கப்பட்டது. மானுடலிங்கம் மனிதனால் தாபிக்கப்பட்டது.

முறையே ஒன்றினுக்கொன்று மேலேற்றமாம். பொன்னாவலை, பொன்னாவளை. (தசீதி ராமாயாணம்) வல்லிக்காடு விட்டுணுலக்குமி இருந்த இடம். சுவாயம்பு லிங்கம் நாகபூஷணி விட்டுணுவால் வைக்கப்பட்டது.

### நாகேஸ்வரி, நாகபூஷணி

நாகர் பூசித்தமையால் பின்னாளில் நாகேஸ்பரி என்னும் நாமம் போகர்ஜெனனசாகரநூலில் திரிபுரசுந்தரி என்பது

### ஸ்சுலோகம்

நாகராரேஸ்பரியநமாலாயபுஷ்பம் சமர்ப்பயாமி
நாகபரமேஸ்வரியே யாடீருஞ்சல் (அம்பிகாபட்டர்)
நாகமணியும் பரமர்பாகமுறுமேகசிவ நாகயீஸ்பரியம்மையே
(முத்துக்குமாரு புலவர்)
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காலத்தில் நாகபூஷணியெனும்
நாமம் வந்தது.

முன்னுள்ள நாகர் பூசை செய்தமையாலும் சற்பங்கள் பூசை செய்தமையாலும் சத்திசிவரூபலாவஸ்துவாய் மதுரைநகர் சத்திபோலிருப்பதாலும் கறைக்கண்டனுக்கு மூத்தவளே என அபிராமிப்பட்டரும். சத்தியாய் சிவமாகி என திருவிளையாடலினு மிருப்பதால் பொருமானவர்கள் திருவாக்குமொத்ததுணிபாகும்.

### மாநாயக்கன் மாசதத்தர் வருகை

மதுரை வைசியர் புராணத்துள் 64 வைசியரும், காவிரிப்பூம் பட்டினம்(புகார்) இது மூன்று பக்கமும் கடல் ஓர் பக்கம் ஊர். எல்லை இப்போது கிழக்குப்பக்கமிழந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனது. திருகோணமலை (போலாயது) போவதும் மதுரை வருவதும் நயினாதீவு வருவதும் அம்பிகைக்கு நித்திய நைமித்திய வாசனதிவகை உகந்தளிப்பதும் ரத்தினங்களை கிரயங்கொடுத்து வாங்குவதுமாயிருந்தகாலத்து நாகர்களை வசியப்படுத்தி உங்களது வணக்கத்திற்கு நல்ல ஆலயமைத்து மானசபூசையின்றி கிரியா பூசை செய்யவும் முறைதெரிந்த ஓர் பட்டரையும் மலர்மாலை தூபமிட தேவாராதி ஓத சைவ பண்டாரமாகிய ஓர் வேளாண் மரபாளனையும் அம்பிகை தொண்டாற்ற அழைத்து வருகிறோடிமன மாநாயக்கனும் அவன் மைத்துனனை மாசோட்டானும் நாகர்களுக்கு கூறி ஏனைய 62 வைசியருக்கு ரத்தினம் கொடுக்கப்படாது அவர்கள் எங்களிடம் வாங்கி விற்கலாம் என்றனர்.

## பட்டர் வருகை

பட்டர் வருகை சுமார் வருடம் 1800 கண்ணப்பன் வருகையும் அதே. நாகரது மனவிருப்பமைய தனவசியரிருவரும் மதுரையினின்று பட்டர் வம்மிச பரம்பரையுள்ள, சம்பந்தப்பட்டர், வையக்கரைப் பட்டர், அத்தியயனப்பட்டர், பிள்ளைப் பட்டர், பாம்புக்குட்டிப்பட்டர் எனும் வகுப்பாளரில் நித்திய நைமித்திய கருமமுடித்து முறையே காயத்திரி செபிப்பவரும் உலகத்தில் மழைவருவிக்க தேவாதி தேவர்கள் நிதமும் மண்ணுலகில் வந்து ஸ்ரீ நாகபூஷணியைத் தரிசித்து மேற்செல்லவும் பசுக்கள் பால் சுரக்கவும் வேதியர் தருமமாறும் செவ்வனே நடக்கவும் கிராமத்திலுள்ளோர் நன்கு வாழ்க்கை செய்யவும் உழவுத்தொழில் கிரமமாகவும் பூமிப்பாவம் பிறர் கொடுமையற்றிருக்கவும், நித்தியமும் நடுப்பகலில் வலது தோளில் ஓர் கலப்பையை வைத்து சூரியபகவானை நோக்கி ஆகுதிசெய்து வருபவரான பாம்புக்குட்டிப் பட்டர்மரபிலுதித்த பிரமஸ்ரீ இராமசந்திரர்பட்டர் புதல்வர் நாயனார்பட்டரையும் சோழவழநாடும் நதிபெருகுமிடமும் அந்நாளிலே, புகார் எனும் புனைபெயருள்ளதும் துறைமுகவர்த்தகமுடைய நகருமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிப்பூம் பட்டினத்தே செட்டிமாருராகிய இடத்தே உள்ள (வேளாளர் வரலாறு) எனும் நூலிற் சொல்லிய 18 வகை வேளாளரில் (தொண்டை மண்டலம் வரிசை மூவாறு) 25வது கார் காத்த குலமரபினனை ஸ்ரீமான் வேதப்பன் கண்ணப்பன்) என்பாரையும் அனேக பரிசல்களீந்து ஸ்ரீ நாகபூஷணி யம்பாளுக்கு தொண்டாற்றுமாறு அழைத்துவந்து நித்திய நைமித்தியம் நன்குபெறவும் மலர்வாசனை பூவகை ஐந்துவிதம் கொடுக்கவும் பாக்கள் ஓதவுமாகவே யமைத்தனர். அன்னர்கட்கு நாகர்களே இல்லமைத்துக் கொடுத்தனர். நாகருமிவர்கள் செய்கையை விரும்பினர்.

**பட்டரது ஓஞ்சற்பா வாழி மேற்காட்டிய விஷயத்தை உணர்த்துகிறது.**

சீர்வாழி சிவசமயம் வாழி வாழி
தேவாதி தேவுமல்லாத் தேவும் வாழி
பார்வாழி மாதமும் மாரி வாழி
பசுக் குலம் வேதியர் தருமம் பலவும் வாழி
நீர்வாழி நயினைநக ருறைவோர் வாழி
நீடாயுள்னன சொர்ணம் நிறைந்து வாழி
ஏர்வாழி இராமச்சந்திர மகிபன் வாழி
இனம் வாழி இன்னூஞ்சல் வாழிமாதோ.

இச்செய்யுளில் தேவர்களை விரும்பியதால் வீரவாகு தேவரும் நயினை வந்தமையால் வீரபத்திரர் கோவிலுக்கு மேற்கு அருகில் இந்த நினைவும் வழிபாடுமுண்டு.

வேதியர் தருமம் நாகபூஷணிக்கு 3ம் நாளாக இருந்து 4ம் நாளாக மாறிற தற்போது அற்றுப்போய் நான்குவேத நினைவு மற்று அதிதி பூசையும் விலகின 1940 ஆண்டு இதனாற்றான் ஆலய வழக்குகள் நடந்தன. எசமான் பரிபாலனம் மாறின.

ஏர்வாழி என இது கருமமியற்றும் கண்ணப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்கூறி இனம் வாழியெனத் தம்மினம் பிற்போக்காய் சில காலத்தில் கண்ணப்பனுரிமையை உண்டாககுமென இப்பெரியார் மனச் சித்தத்தின்படி கூறியிருத்தல் கவனிக்கற்பாலது.

நாகர் சாதியாரில் ஓர் பகுதி பிராமணர் உண்டு.

நயினாதீவு தோமபேடு கோயிற் கணக்கு இவைகளினாலும் இற்றைக்கு 3600 வருடங்களுக்கு முன்னுள வையா பாடலினுமறியலாகும்.

**வையாபாடல்**

''நச்சுவிழி மடவார்கள் வாசஞ் செய்யும் நாகர்நயினாதீவில் வாழுவோரும்'' மலையாளம் ஸ்ரீ சங்கராசாரியார் தரிசனைக்கு போயிருக்கிறார்கள். யாதெனில் தற்போது 33வது சங்கராசாரியார் காலம் மைசூரில் இருக்கிறது அக்காலப் பிராமணரில் சமஸ்தர் சட்டம்பூ வைதிகர் பஞ்சாங்கர் கொங்கணர் நம்பூரி இப்படி பல வகுப்புண்டு. இதில் பிற்காலம் நயினாதீவில் பிள்ளையாபட்டர் இராமச்சந்திரர் சட்டம்பியாகவும் இங்கிருந்து நெடுந்தீவு குடியேறின இராமலிங்கன் காசிநாதன் பஞ்சாங்கனாகவும் இருந்தமை காண்க. இதனால் யாழ்ப்பாணத்திலும் கொக்குவில் பருத்தித்துறை மட்டுவில் இவ்விடத்து ஐயமாரே பஞ்சாங்கராயின்றுமுள்ளார்.

இதனால் பட்டருக்கு முன்பும் நயினாதீவில் நாகர் குலமுதுள்ளதாகவும், பிராமணர் இருந்ததாகவும் பிற்கால பட்டரின் 30 தலைமுறையினரும் நாகபூஷணி ஆலய ஏக எசமான் இ.இராமச்சந்திரர். இவ்வூர் அரசன் இராமகிருஷ்ண முதலி மகன் தியாகுடையாரும் பாரி புகனியாருக்குமுள்ள 8 வனிதையரில் இருவரை மணஞ் செளய்தமையாலும் நன்கறியக்கிடக்கின்றது.

ஸ்ரீமான் கண்ணப்பர் புங்குடுதீவு மேற்குப்பகுதியில் உள்ள வரும். திருநெல்வேலிச் சில்லாவிலிருந்து அவ்வூர் தென்துறையில் வந்து இறங்கியவரும் அங்கிருந்து தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயை விரோதித்து நானாவிதமான இரத்தினங்களோடும் ஏவலாட்களோடும் தனிநாவாய் பிடித்து வந்தவருமான ஸ்ரீ பரமானந்த முதலி மகன் இரகுநாத முதலி வம்மிசத்தில் விவாகம் முடித்து பாரி பெரியநாச்சியுடன் நயினை மேற்கு (கூப்பிட்டானிலுப்பை) எனும் காணியில் இல்லமர்ந்தி வசித்தனர். அங்கிருந்து வரும்போது பிராமணர் தண்ணீர் குடிக்கப்படாதென மன நினைத்து அவ்வம்மை அங்கிருந்து குடத்தண்ணீரோடு வந்து குறித்த இடத்தில் கூபமுண்டாக்கி தண்ணீரெடுத்துச் சமையல் செய்தனர். இப்போது அக்கூவல் காட்சியழிக்கின்றது. (நிலமும் மரபாருடன் நிற்கிறது) இம்மண்ணுக்கு கடன் ஒட்டல் வெலியாத்துமாறியாடல் இவ்வகை விபத்து ஒன்றும் இல்லாதிருத்தல் நிலஞ் செய் புண்ணியம். (இராமாயணம்)

அக்காலம் சங்கராச்சாரியார் தரிசனம் யாழ்ப்பாணப் பகுதி பிராமணர் பார்க்க போகும் வழக்கம் இருந்தது இப்போது. எங்கும் குருமாராய் விட்டபடியால் குறைவானது கோத்திர சூத்திரமில்லை கர நியாசம். அங்க நியாசம். பூத சுத்தி. கிரியாகெமனம். முத்திரைவகை நன்கு தெரிந்தோர் அபூர்வம். மேற்காட்டிய பட்டரின் 8ந் தலைமுறை அம்பிகாபட்டர் 9ந் தலைமுறை சங்கரபட்டர் இவர்கள் காலத்தில் கொக்காபட்டர். கோணரி பட்டர். கொங்கணி பட்டர் இம்மூவரும் சகோதர முறையினர். இவர்கள் இந்தியாவிலிருந்து நாகபூஷணி தரிசனம் செய்யவும் மேற்படியார் ஆதரவு பெறவும் நயினையூர் வந்தவிடத்து இவர்களுக்கு ஆவன செய்திவர்களை யாழ்ப்பாண மழைத்துப்போய் ஆங்குள பெரியமனுஷர் கோவிலதிகாரிகள் கல்விமான்கள் தனவந்தர்கள் நட்புப் பெற்று கொக்காபட்டரை விளவேலியிலும். கோணரி பட்டரை அராலியிலும் கொங்கணிபட்டரை நீர்வேலி கோப்பாயிலுமாக ஆங்காங்கு இருக்கவேண்டியதற்கு நாகபூஷணி அர்ச்சகரான பட்டர் வாய்ச்சொல் உதவியும் அருளாயது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்ஙனமின்றேல் பிற்காலம் நாகபூஷணி உற்சவத்திற்கு கோப்பாய் கொங்கணிபட்டர் சந்ததியைச்சார்ந்த பிரமஸ்ரீ கா.பரமசாமிக்குரு உதவிவராதென்பதை அறிக.

(கடவுண்மாமுனிவர் வாதவூரர்புராணம்)

மேற்படி பட்டரின் 19ம், 20ம் தலைமுறையினராய் பிள்ளையார்பட்டர் காலத்து வேதப்பட்டர், விநாயகபட்டர் நயினாதீவு நாகபூஷணி தரிசனைசெய்யவந்து அக்கால எஜமான் பட்டரிடம் தமது குறையை விண்ணப்பிக்க அவர் ஆகவேண்டியது யாதெனவினாவித் தமது குல பிற்போக்கையும் ஆலோசித்து இவரை யாழ்ப்பாணம் அழைத்துப்போய் நன்மக்கள் சகவாசமும் விநாயக பத்தியுமுள்ள அச்சுவேலிக் கிராமத்திலமரச் நெடுந்தீவு, புங்குடுதீவு, அனலைதீவு எழுவைதீவு, நயினாதீவு, கரம்பொன் ஆகிய கிராமங்களையு மாங்குள பெரிய மனுஷர் உதவிகளோடும் அந்தந்த இடத்து உற்சவாரம், பிரதிட்டை, தீட்சை முதலியவற்றுக்கும் செய்விக்குமாறும் அங்குள்ளார்க்கு விளக்கப்படுத்தி வந்தனர். இன்னும் இப்பரம்பரையார்க்கே இருந்து வருகிறது.

**(அச்சுவேலி பிள்ளையார் விநாயகப்பட்டரா லாக்கப்பட்டது, அச சந்ததியே குமாரசாமிக்குருக்கள்)**

குடிப்பிறப்பு கல்வி செல்வம், ஒழுக்கம் எனும் நான்கு பிரிவில் ஒழுக்கமேனும் நான்காவது, இக்காலம், கொண்டொழித்தது. ஏனைய மூன்றும் பிறவினலாயது. குறித்த பட்டர்கள் போல் இவர்கள் இருக்காதிருப்பினும் இப்போது நாகபூஷணி பழைய தொண்டாற்றுபவர், ஊர் அந்தணற்குமவர்கட்குமுள்ள இடைக்குரோத மேற்பட்டகாலத்து, மாசம் 10, 15 பவுணுக்கும் அர்ச்சகர் ஒழுங்கு படுத்தக்கூடிய வகையில் ஊரவர்களும் நினைக்க பிரமஸ்ரீ.மு.வைரவநாதக் குருவை ஏற்படுத்தியது. இவர் போல் முத்திரைவகை, கரநியாசம், அங்கநியாசம், பூதசுத்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியாகெமனம். அழுத்தமாய் திருத்தமாய்ச் செய்வரேனு மாசையால் விரும்பினார். இத்தொண்டாற்றுபவர்களுக்கு இவ்விஷயம் தெரியாதேல் மலிவே பார்ப்பர். (பஞ்சாயுதம் விரும்புவர்) ஆதலால் கோயிலதிகாரிகள் குருபிராமணர். மேளகாரர். பண்டாரம் பூவகைவிதம் பூசைவிதங்கள். தாசிநடனவகை இவையாவும் கற்பதோடு பரதவசாத்திரம். சிற்பசாத்திரம் இவைகளும் தெரியவேண்டும். இவ்வகை ஆராய்ச்சி வல்லுனரே பஞ்சாயுதம் சமஸ்தானத்தும் இடம் பெறுவர் தேசமறிந்தவராகவும் வேண்டும்.

### நாகபூஷணி ஆலய இடமும் விசேடமும்

தற்போது பப்பரவன் சல்லி எனும் காணி 56 பரப்புக்கொண்ட இடத்திலமந்திருக்கின்றது. பெரிஜயன்சல்லி. ஊடுதிடல். புடுக்கத்திடல் எனும் பகுதியும். கேணிக்குளியும் சேர்ந்து 150 பரப்பு சுமார் விஸ்தார நிலத்திலிருக்கிறது. (அருச்சுனன் தீர்த்த யாத்திரை செய்யும்போது இவ்விடம் வந்தானென்றும் நாக கன்னிகையை மணந்தானென்றும் அவன் மைந்தனது பெயரையே இங்கிட்டானென்றும் பப்பரவாகன் சல்லி பப்பரவனாயது இது பூர்வ பாரதக்கூற்று. ஏனைய பாண்டவரும் ஸ்ரீராமன் நளன் காகபுசுண்டார். போகர். தேரையர், கொங்கணர். புலிப்பாணியர் தன்வந்திரி பல சித்தரும் பட்டினத்தடிகள் மருதப்பிரான் நளன் குபேரன் இலட்சுமி சரஸ்வதி பிமைன் விட்டுணுக்களும் வந்து இவ்வம்பிகையை வழிபட்டதாக ஐதீகமுண்டு.

### (புத்த பகவான் வருகை)

தற்போது 241ம் புத்த பகவானின் காலம் நாகராசன் எனும் நான்காவது புத்தபகவானே நயினாதீவுக்கு இற்றைக்கு 2400 வருடங்களுக்கு முன் நாக தீவெனும் பெயரமைந்த காலத்து இங்கு வந்து ஸ்ரீ நாகபூஷணி வழிபாடு செய்து மாநாகன் குலநாகன் எனும் மருகற்கும் மாதுலற்கும் இடையே பாகபங்காயுள்ள உரிமைச் சிம்மாசனத்தை மருகருக்காக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலைக்கும் ஏனைய பணிப்பெண் தோழியற்கும் ஈடவற்கும் அறநிலையான வினைப்பிடகம் அபிபிடகம் அபிதரம் பிடகமெனும் புத்தர் மத நூல்களை உபதேசித்துப் புத்தர் திடல் புத்தர் பள்ளம் சந்தணை திருவசந்தணை எட்டுவாரச் சந்தணை எட்டிக்குளம். தற்போது செட்டிக்குளம் இந்த இடமிருந்தே சேல சைத்தியம் எனும் புட்டந்தாழ்வுக்குப் போனான். எட்டிகுளம், செட்டிக்குளம் நயினாதீவு கிழக்கு.

### நாகராசன் எனும் புத்தர் போன இடம்

(பெர்ராவில்) வேரவில், இந்த இடம் போய் காகுத்தனதீவு விட்டுணு பிரமாலயம் இன்றுமுள்ள காக்கைதீவு (யமன்தீவு) இப்போது எருமை தீவு என வழங்குகிறது. புத்தர் திடல் இந்த இடம் வைகாசி மாதம் பூரணையன்று அட்சய தீர்த்தத்தில் அன்னமிட்டு எடுக்க எடுக்க குறையாதது. இத்தருமம் மணிமேகலை செய்தது. அவ இட்ட நாமம் மணிபல்லவம், பல்லவர், மறவர் பல சாதி மக்களும் ஓர் காலம் இங்கு வசித்து நாகர்கோவில் பூநகரி பருத்தித்துறை உடைப்பாதியாமிடங்களில் குடியேறினதாக காவியம் பகர்கின்றது.

சந்தணை எனும் நிலம் புத்த பகவானின் குதிரைக்காரன் சந்தகனுக்கு விடப்பட்டது. திருவசந்தணை ஓர் பெண்ணுக்கு விடப்பட்டது இவ்விடம் விட்டுணு மகாலட்சுமியிருந்த இடம்.

எட்டுவாரச் சந்தணை, இந்த இடம் அனலையெனும் பெண் அத்தீவிலராட்சி செய்து வீடமைத்து பின்னிங்கிருந்ததாக மகாவம்மிசக் கூற்று தற்போது அனலை ஆலம்புலமெனும் காணி முன் சிங்களாத்தி அடைப்பு அவ்வூரிலுள்ள சம்பாதி, சடாயு எனும் கழுகுகள் தவஞ்செய்ய நயினையூருக்குவந்தன இப்போதும் சம்பாதித்துறை, சடாயுத்துறை அனலையூர் மேற்கு கடற்கரையில் இருக்கின்றன. இவ்வூருள நயினைபட்டர் ஓர்காலம் அனலை நகரில் நயினைகுளம் எனும் இடத்தில் தங்கியதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலமந்த இடத்தில் ஐயனார் ஆலயமும் பட்டரது பெயர்க்குளமும் உண்டு. தேவிகாலோத்தரம் இரத்தினத் தீவு என்பதில் இத்தீவும் அமைவது காண்க. இவ்விதபாகுபாடுகளை நயினை வாசிகளும், பிறதேசமக்களிற் சிலருமறியாததினிமித்தம், பட்டர் என்றால் பிராமணனா? வேறுசாதியா, பரிகாரியா? பண்டாரம் என்றால் யார் சங்கு ஊதுபவரா? பூக்கட்டுபவரா?

காரைநகரில் சைவரையே பண்டாரமென்பது. பண்டாரம் பண்ணேடு ஊதுபவர் திருச்செந்தூர் (போற்றி) உட்பூசை பட்டர் அர்ச்சனை உற்சவாரம்பம். நம்பூரி மடப்பள்ளி, அத்தியயனம் வேளாளற்கும் பட்டர்மாருக்கும் பின்னுளகாலம் வாது வந்தமையால் ஒருவர்க்கொருவர் சாதிப்பிரட்சணம் செய்யத் தலைப்பட்டு 1864ல் கலப்பு மணமாகினர். இதை பிறதேச வாசிகள் நன்கறிவது.

மாநாயக்கர் பௌத்திரன் ஐந்தலை நாகங் காட்சி கண்டவர்.
ஸ்ரீமான் அரு வீராச்சாமி செட்டியார் தரிசனைக்காட்சி.

**விருத்தம்.**

அண்டகோடிகளெலாமொருதலையில் நீ சுமந்தருளுதலினால
ல்லவோ
அம்புயப்பிரமன் படைக்கத்தொடங்கினாலகிலமும்
சிதைவிலாமல்
புண்டரிக லோசனன் பாதுகாக்கின்றான் புராந்தகன் சங்கரித்துப்
புகழ்மருவுகின்றன் இணங்கிநீ தயைசெய்து புரியாதிருந்தனை
யெனில்
எண்டிசைகளும் புவியும் கிரிகளும் எப்படி நிலைத்திருக்கும்
எவ்விதத்தினிலந்த மூவர் தொழிலீடேறும் ஈசனரவிந்த பாதத்
தொண்டர்கணிறைந்திடு மிலங்கை நயினாதீவு துதிசெயும்
படியமர்ந்தோய்
சுரலோக லோகேந்திரர் நரலோக புவனேந்திரர்
தொழவேறு நாகேந்திரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகையை தையலியரசியின் கப்பல் மாலுமிகள் நயினா, மீரா, பறனாந்து டொன்சுவா முதலிய பிறதேச சாதித மதத்தினரும் தொழுகை செய்தவராயும் கப்பலோடும்போதும் நேர்கடன் கட்டுபவராயும் அவர் ஊக்காலம் பாடிய அம்பாவகையினாற் தெரிகிறது. "அறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய இறைவிதன் மலரடி இறைஞ்சி எத்துவாம்" என்ற செய்யுட்படி உள்ளது.

## ஒல்லாந்தர் காலம்

இரண்டாம் முறை ஒல்லாந்தர் மேற்படி ஆலயத்தை இடிக்க வந்தவிடத்து பிரஞ்சீக்கு கதிரித்தம்பி நொத்தாரிசு இராமச்சந்திரர் முதல் மகன மாதா கோவிலென்றும் தான் சங்கிடுத்தமென்றும் வைபிள் வாசித்து காட்டி இடிக்க விடாது தடுத்தனர் அக்காலத்திற்தான் அம்பிகையை மேற்குக் கடற்கரை ஆலம் பொந்தில் வைத்ததும் உற்சவமூர்த்தியை பப்பரவனாலடியில் ஓர் கிணற்றில் வைத்ததும் இப்படி 12 வருஷம் பூசையற்றுக் கிடந்தபோது ஸ்ரீ இராமச்சநதிரனும் மகனும் இரட்டங்காலி முருகபிரானாலயத்தில் உற்சவம் செய்துவந்தனர்.

## சந்ததி ஆதின தர்மகர்த்தா

இக்கோவிலருச்சகராக 19 பட்டர்கள் இருந்திருக்கிறார்கள். இதில் அம்பிகாப்பட்டர் காலத்தில் நாகரத்தினம் ஊரிரலற்றுப்போக சர்ப்பமும் காடும் குறைந்தன. இங்குள்ள மீதி ரத்தினங்களையும் நாகரிடம் கிரயம் கொடுத்துத வாங்கி மதுரைநகர் தனவசியர்பாற் சென்று பூசை உரிமைகளையோ ஆதீன உரிமைகளையும் அவர்களால் பலப்படுத்தி கண்ணப்பருக்கு நான்கிலொரு பங்கும் தமக்கு மூன்று பங்கும் ஆட்சியுமாக அமைத்ததுமன்றி வைரவர் ஐயனார் உரித்து அர்ச்சனைப் பணம் உண்டியல் கண்ணப்பருக்கே நிந்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்கள் பூசையால் வழுவவிடல்

பட்டர் மரபினர் பிற்காலம் எசமான் பதவியை மாத்திரம் கைக்கொண்டு அரச பதவிகளிற் சேர்ந்து கிராமச் சட்டம்பூவாகவும் நொத்தாரிசு உடையார் விதானைமார் பதவியிலீடுபட்டமையாலும் அவ்வூர் வேறு பிராமணர் பூசைசெய்தனர் பின் அவர்கள் நெடுந்தீவு வன்னிப்பகுதி செல்ல இராமச்சந்திரர் மைத்துனி மகனான இளையதம்பி உடையார் சகோதரன் இவர்களே 1790ல் இருந்து 1808 வரையும் பூசைசெய்தனர். 1808ல் இருந்து 1817 வரை புங்குடுதீவு முருகேசு ஐயரும் பிறரும்ம பூசை செய்தனர். அக்காலம் கண்ணப்பனின் ஆதீனர் வேளாள அம்பலவாணர் ஒழுக்கம் குறைவுள்ள ஐயமாரைத் தண்டித்தனர் இதையறிந்து பிரம்மஸ்ரீ கதிரித்தம்பி சின்னக்குட்டிக் குருக்கள் உதவிகொண்டு அச்சுவேலி போய் சின்னமனத்துளார் சந்ததியும் வேற்படி,

## நொத்தாரிசுக்கு காசி உடையார் கூறியது.

குருக்களுக்கு மருகர் முறையினருமாகிய பிரம்மஸ்ரீ கா.கணேசஐயர் குமாரசாமி ஐயரையும் சகோதரிமாரையும் அங்கிருந்து நன்னாளில் அழைத்து வந்து தமது சந்தணை நிலத்தில் இல்லமைத்து குடியேற்றி ஆகவேண்டிய நிலமபுலமாதியன கொடுத்துத் தனதுரிமையாளரைவிட்டு புத்தடர்திடல் திருவசந்தணை வல்லிக்காடு குடலைப்போய், நரிதூக்கி, கருமான்றிப்புலம் அரக்குத்தோட்டம், குமிழடி ஆதியாங் காணிகளையும் பிராமணர்களுக்கு சேர்த்துவிட்டவரும் நொத்தாரிசுவேயாம் இவரங்கிருந்து அழைத்துவரும்போது அவ்வூர் வேளாளன் காசி உடையார் 40 இறைசால் 9 கலிபணம் கடனுக்காகவும் தனது கோயிலை விட்டு சொல்லாமல் போகிறார்களென்றும் பெரிய குமாரத்தி பளள எல்லையில் எல்லோரையும் தடுத்தனர். அது கண்டு நொத்தாரிசுக்கு காசிஉடையார் சொல்லிய கலிவெண்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்காணும் நொத்தார் நீர் ஐயெட்டு இறைசாலும்
நேரும்கலிபாண மொன்பானுமே பாரில் வட்டி
வேண்டாம் தருவிரென மிக்கமதிப்பாம் நறுக்கு
ஈண்டெழுதித்தாரும் இனியேகலாம் [பனையே
பூண்டபணம் வாங்க ஒரு மாதத்துள் மடப்பளியான் சுப்
தாங்காதனுப்பத் தடையெதுண்டோ.
நீங்கள் சொன்னால் போறேனிது தருமம்
புண்ணியத்துச்செய்கைகட்கு மாறேன்யான் செய்யவல்லேன்
[மனனுடையார்

மடப்பள்ளிச் சுப்பன் செலவிற்கும் உடையார் பணத்திற்கும் அவ்வூர் வேலப்பன் பெண்குழந்தை வசம் வாங்கி அச்சுவேலி கொண்டுபோன 100 கலிபணத்திற்கும் வீடு கட்டும் செலவிற்காக நரிதூக்கி, கிழக்கிற்காடு, மக்கிக்தரை ஆகிய மூன்று காணிகளும் விற்றுச் செலவு செய்தனர்.

**அந்திய விருத்தம்.**

பூமேவும் திருநயினை நகரில் வாசன்
பூசுரன்சீர் காசியப கோத்திரத்தோன்
தேமேவும் யசுர்வேத சாகையுள்ளோன்
திவ்விய வாகத்தம்ப சூத்திரத்தோன்
பாமேவும் புகழ இராமச்சந்திரற்குப்
பாரிமுதலி ராமசாமி பயந்தபாலன்
மாமேவும் நற்கதிரித்தம்பி நொத்தார்
வருகர தைப்பபுசமரனடி பேரனானே.

**இவரது மகனும் ஆலய கர்த்தாவுமாகிய சின்னத்தம்பி நொத்தாரின் கால அந்தியச் செய்யுள்.**

சீர்பெற்றிலங்கு மன்மத வருடம் மார்கழித்தேதி
அறுநான்கு செவ்வாய் என்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையாம் சிவகோத்திரம் வந்த கதிரீத்தம்பி
[தந்த சின்னத்தம்பி
வையகம் வாழ்வு விட்டே கைலாயம் மருவினானே.

என்றிருக்கும் செய்யுளையும் கண்ணுற்று நோக்கும்போது அறிஞர்கள் முன் இக்காலத்தாரது கல்வி செல்வங்களையும் பின் குறைவுற்றதையும் நன்கணர விதியுண்டு இதுகாலம் பிராமண ராகவிருந்து உத்தியோக விருப்பினால் குலமாறிய கூற்றேயாம்.

யாழ்ப்பாணம் ஐயன் தெரு பிராமண முதலியார். இராமேஸ்வரம் பாற்கவ ஐயர் உமாபதி ஐயருக்கு கொடுத்த தாண்றிப்புலம் செங்களுநீரோடை இக்கடை நிலம் 9 கொண்ட உறுதி மேற்படி கதிரித்தம்பியே எழுதியவர்.இவர் பிராமண குலத்தவர்.எவர்க்கும் பரோபகாரியாயிருன்தனர் என்பதும் திருமுருகாற்றில் 12 ஏடுகளும் மதுரை மீனாட்சி பாடலிலும் சமஸ்கிருத வகையிலும் தெரிந்தவர்ட காயத்திரி செபிப்பவர். இப்பிரதிகளை ஸ்ரீமான் நயினை வே.சங்கரப்பிள்ளை வசம் உருத்திராட்ச மாலையுடன் கண்டேன். சரிதங்கள் பற்றி வட்டம் திடல் இவர் வீட்டில் மேற்கு சார் எல்லையிலிடுருந்து சைஷ ஆலய பரிபாலன விஷயங்கள் ஓலைச்சுவடி மூலம் கிடைத்தன. ஸ்ரீமான் சின்னத்தம்பி நொத்தார்.1830-ம் ஆண்டிலிருந்து 1855-ம் ஆண்டு வரைக்கும் சின்னத்தம்பி நொத்தாரிசும் முத்துக்குமாரு ஆறுமுக உடையாரும் முருகப்பனுமாக கேதவிலாதீன கர்த்தாராயிருந்தும். நொத்தாரிசு பேருக்கும் கோவில் பேருக்குமாக சின்னத்தம்பி நொத்தாரிசே புங்குடுதீவு நயினாதீவு முதலிய இடங்களில் கிரய நிலங்கொண்டும் தரும சாதனம் செய்வித்தும் தான் செய்தும் நெடுந்தீவில் கொம்பர் வளவு. கூட்டப்பாலை. நெளுவினியாதியம் எனும் காணிகளை ஸ்ரீமுரகா் வசம ஒற்றி வாங்கியும் நாரந்தனையிலும் கிழக்கு கரம்பொன் காளிகோவிலடி முதலிய இடங்களில் தரும் சாதனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வித்தும் காணிகளை விட்டிருக்கிறார். தேர் சப்பறம் முதியனவும் கோவிலுக்கு உறுதிகளும் வெராலே ஆக்கப்பட்டன.

1855-ம் ஆண்டிலிருந்து 1940 வரையும் ஏக எசமான் இராமச்சந்திரனது 3-ம் மகன் இராமலிங்கம் புதல்வன் ஸ்ரீமான் சின்னத்தம்பி விதானை கார்த்திகேசர் சின்னத்தம்பி வேலாயுதன் இராமச்சந்திரர் முத்துக்குமாரு இரகுநாதர் சரவணமுத்து உடையார் நாகநாதர் வேலுப்பிள்ளை முத்துக்குமாரு பரமலிங்கம் கதிரித்தம்பி கந்தையா பரமசாமிக்குருக்கள் வயிரவநாதக்குருக்கள் நாராயணப்பிள்ளை வைத்தியலிங்கம் இவர்கள் மூலியம் பரம்பரை சபையாய் அக்காலதீவுபற்று மணயகாரன்மார்மேற்பார்வையுடன் நடந்து வந்தது ஆலயபரிபாலனம். இதை அவ்வூர் வசிப்பவர்கள் முன் பூசை செய்த இளையதம்பி உடையார் பெண் வழித்தோன்றலானவரும் ஆசிரியருமான ஸ்ரீமான் ச.நா.கந்தையாவும் அதைச்சார்ந்த ஸ்ரீ.ஆ.நாகலிங்கமும் கதிரித்தம்பி நொத்தார் 5-ம் பேர்வழிகாரனான சின்னத்தம்பி மனன் ஸ்ரீமான் துரைச்சாமியும் கண்ணப்பர் வம்மிச ஸ்ரீ க. வேலாயுதமும் கோவில் பராமரிப்பு (க.கந்தையாபிள்ளையும்) 1939-ல் வழக்குத் தொடர்ந்து றீசீவர் ஸ்ரீமான் துரையப்பா அவர்கள் செவ்வனே நடாத்தி வந்து அரசினராலமைக்கப்பட்ட நவாயுத கமிட்டியில் பாரம் கொடுத்தனர்.

இவர்களில் பட்டர் பரம்பரையாா ஸ்ரீமான் ப.கந்தசாமி கா.ஆறுமுகம், இ.ச.இரகுப்பிள்ளை. கண்ணப்பர் பரம்பரை நா.வே.பொன்னம்பலம் இவர்களும் காலத்திற்குக் காலம் வருடந்தோறும் ஒரவராய் வரும் பஞ்சாயுதகாரரும் ஒருங்கு சேர்ந்தே வைஷ ஆலய பரிபாலனம நடாத்துகிறார்கள்.

இதில் ஸ்ரீமான்.செ.ம.ஸ்ரீகாந்தா (வடமாகாண அதிபர்)அவர்களும். காலஞ்சென்ற ஸ்ரீ.வே.சுந்தரம்பிள்ளையும். டியாறோ செ.சிவஞ்ஞானம் அவர்களும் ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்களுமாய் உண்டாக்கிய ரதம் மேலானது. இற்றைக்கு எழுபது வருடத்திற்கு மன் கோயிற்பணமாக இருப்பினும் வட்டு நகர் இளைந்தளைய சிங்கமாப்பாண முதலி இராகுநாத மணியகாரனுதவியால் கருங்கற்றிருப்பணியும் நாட்டுக்கோட்டை கஸ்தூரி நாயக்கர் வல்லிபுரம் பிரம்மஸ்ரீ மு.இரத்தின ஐயருதவியால் சுற்று மதில் கோயில் கோபுர வேலைகளும் நடந்தன இக்கால பராபத்தியகாரர் நவராத்திரி திருவெம்பாவை உற்சவம் நித்திய பூசை நடத்த நெற்கொடுத்தல் இவைகளை முறையே செய்து வந்தனர்.

## விருத்தம்.

ஈட்டவல்லது பல்வகைக் குடிகளுமீட்டடி
உளட்ட வல்லது பல்வகைப்போகமு மூட்டிக்
காட்டவல்ல விப்பரை பதிகாட்டி யொண்கயிலை
நாட்வல்லது நாகநாயகெஸ்பரி நயினை இது 19ம்
பட்டர்.

பிள்ளையார் பட்டர் செய்யுள் இவர் ஓர் சட்டம்பூ

## காலச் செய்யுளி.

இச்செய்யுள் மதுரைமாநகர் யான் 1947ம் ஆண்டு சென்றபோது இவ்வாலயத்தை மேற்பரிபாலனம் செய்த செட்டிமார் இல்லிலிருந்து தமியேனுக்கு கிடைத்தன. 400 வருடங்களுக்கு முன் நாகர் குலவாசிதையலியாசியும் மகன் ஸ்ரீ சுந்தரமுதலிக்குப் பட்டம் சூட்டும்போது இறுதியாக சொல்லிய யாவும் எமது மனதிற்கு ஞாபகமூட்டுகிறது.

அமைச்சியலும் வேளாளன் அங்காடி குலம்புன்கை சேர்ந்து
பண்ணைக்
கமச்செயலற் றிருந்திடினும் நம்மூரிலிவன் குலமே
கலம்பைபூட்டப்
எமக்குமதுவுவப்பாகும் என்மகனே சுந்தரனீ இராசவாட்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்குள தென்றுன்னாதே யூர்நாகயீஸ்பரிக்கு நம்புவாயே.

இதனது தாற்பாரியம் நயினாதீவு வேளாளன் புங்குடுதீவு மேற்குப் பகுதியில் பண்ணையாளர் குடியில் விவாகஞ்செய்து அவ்வூர் வாசியாயிருப்பினும் இவ்வூரில் ஏர்பூட்ட இங்குள்ளார் பிராமண குலமாதலால் முறையான வேளாளனுக்கே ஏர் பூட்டு நயினையூரிலின்றும் வழங்கி வருதல்காண்க. இச்செய்யுளில் நான் காமடியில் ஊர்நாகயீஸ்பரி தீ வென்பது புலப்படுகிறது.

**ஈழமண்டல மதகம் கலித்துறை ம.க.வேற்பிள்ளை ஆசிரியர்**

அச்சுவேலி கணபதிப்பிள்ளை சோதிடர்.

முன்னமோர் கோவணந்தட்டினிலிட்டு முயன்றடிமை
தன்னைமதிக்கச் செய்தோன்தில்லைவாழும்
சபேசனிடம்
துன்னியொளிருமொரு நாகபூஷணி தொல்லை
முன்னாள்
மன்னத்தவஞ்செய் நயினையூமீழ நன்மண்டலமே.

**நெடுந்தீவு தனிநாயகமுதலி வேளாளன்.**

சேயூரமர் தொண்டை நாட்டானுழவன் திருந்தரவப்
பாயூருங்கண்ணற் கரியானெளிரும்பாதம் புயத்தை
பேயூரும் தஞ்சமெனும் தனிநாயகனேங்கு கடல்
வாயூருமம்ம நெடுந்தீவு மீழநன் மண்டலமே

காஞ்சிபுரத்திற்கு 20மைல் தெற்கே உள்ள தொண்டைநாடு செய்யூர் இருமரபுந்துய்ய தனிநாயக முதலியாரும் மற்றும் முதலிமார்களும் ஓர் காலம் இந்தியா சென்று அங்குள பெரயவர்களுடன் நாகபூஷணியார் தரிசனத்திற்கு வந்ததாகவும் காவியம் பகாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவிலே 9ம் திருநாள் செய்துவந்த ஸ்ரீமான் நாகனாதபிள்ளை யென்பார். இந்தியா சென்றபோது யாத்திரையில் பல தேச பெரிய கனதனவான்களை நாகபூஷணி தலயாத்திரைக்கு அழைத்து வந்தனர். இவர் காலம் 150 வருடமாதம்.

**நாகபூஷணி வழிபாடு எதனால் வேண்டுமென்பது?**

நால்வகைத் தோற்றம், எழுவகைப்பிறப்பு, எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதங்களில் மக்கட்பிறப்பெ உயர்ந்தது. புத்தி தத்துவம் பற்றுககோடாகப் பலஸ்மிருதிவகை தவவலிமையாற் கற்றோர் இக்காலாவரை சிலரைப்போல் அடக்கன்முறை செய்தாட்சி புரிவது முன்வழக்கத்திலுமுண்டு நந்தனார், தில்லைமூவாயிரவர் எல்லை ஏகினபோது சிதம்பரம், நந்தநீ குலத்திதற்கேற்பக்காடன், மாடன் கறுப்பனை வணங்குவதையவிட்டு சிவனை வழிபட உருத்தில்லையே என்றார் அது நந்தனுக்கு தவபுத்தி இல்லையேல் நடப்பதென்ன அதுபோல ஆன்மாக்கள் ஆதி காலத்தில் சூரியன் சந்திரனையே கண்கண்ட தெய்வமெனை வணங்கி வந்தனர். அது காலச்செய்யுள் பின்வருமாறு.

தில்லையிலிருந்து நயினாதீவு தில்லை வெளியிற்றங்கி வடக்குப் பக்கமாகப் போனதென ஐதீகம் இப்போது உற்சவாரம்பத்திற்கு முன் இங்கேயுள்ள ஆல்யத்து வேள்வி செய்தே உற்சவாரம்பம் செய்வது வழக்கம்.

**கலித்துறை.**

கண்கொண்ட தெய்வமென்றிச்சகம் போற்றும்
கதிரவனை
விண்கொண்ட மீன்கள் விரும்பும் மணாளனை
வெங்குசனை
பண்கொண்ட புந்திபொன் பார்கவனைச் சனி
பாம்பிரண்டை
எண்கொண்ட தெய்வமென்றே நிதம்போற்றி
இறைஞ்சுவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்கள் முதலிற் சூரிய சந்திர குருவிச்சை அம்புலி மகன் பிறகு நாகம். பின் மற்றைய ஐந்து கிரகங்களும் சந்திரர் சூரியருக்குள் அடங்கியவை. ஆதலின் அதனை விடுத்து சூரியசந்திரன் கிரகண காலத்தில் மறைக்கும் சக்தி வாய்ந்ததும் பூமியை தாங்குவதுமான ஆதிசேடனையே, குருவிச்சை அம்புலிமகன் ஓர்கல்லு. இவற்றை வழிபட்டபின், நாக வணக்கம் செய்யத் தலைப்பட்டனர். இவ்வணக்கம் தோன்றிய இடம் மலையாளம் நாகநயினார் கோவில் கன்னியாக்குமாரிக்கு அடுத்த நாகர் கோவில் அன்னாளில் நாகர்குடிகொண்ட நயினாதீவு வடமராட்சி நாகர்கோவில் புளியம் பொக்கணை புதூர் கொக்கட்டிச்சோலை என்பனவாம். இதனால் நயினாதீவு இலங்கையில் முத் வழிபாடுதானமென்றும் பாடல் பெற்ற தலம் கதிர்காமம் முதலிய தலங்களுக்கும் முற்பட்டதென்று மறியக்கிடக்கின்றது. இவ்விஷயங்களை நாகர் கோவில் எசமான் முருகுப்பிள்ளைவைத்தியரிடம் இருக்கும் கப்பற் திருவிழா வேட்டிலும் பார்த்தெழுதியுள்ளேன். அன்னார் பூருவமும் மலையாளவூராய் நாகர் வழிபாடாற்று பவராயிருக்கின்றனர். குறித்த இடமெல்லாம் நாகேஸ்பரி நாக வழிபாட்டின் பிற் காலத்தில் தான் பிள்ளையார், கந்தசாமி, சிவன், முத்துமாரி, கண்ணகி, ஐயனார்,வீரபத்திரர், விட்டுணு வழிபாடுகளும் ஆலயங்களும் வந்தன. இந்தியாவில் விநாயகராலயமே சந்திரனுக்கு 27 நட்சத்திரங்களுக்கும் பாரியார் -ரோகிணி தான் பட்டத்தேவி. தவிர பிள்ளையார் கோவில் இல்லை நாயன்மார் தேவாரம் பாடிய காலத்தில் இந்த இடம் கிரியா பூசையாயில்லை. இதற்குரிய தனிப்பத்ததி இல்லை. இதற்கு சண்டேசுரர் அனுமதி வழிபடுவதற்கு அவசியமில்லை. நவக்கிரக மண்டலத்திற்கு முன் சூரிய சந்திரன் நளவருஷ கும்பாபிஷேகத்திற்கு கோவில் கட்டியும் பலனில்லை. கோபுரம்முளந்தாளளவு வந்துயர்ந்ததால் கோபுர பிரிட்டை இல்லை இதை செய்த சிற்பி ஆலய எசமான்மார் பூசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகம் முதலிய இன்னல் ஏதுக்களாலாயது இராகு கேதுக்களால் உள்ள சாபம் நிவர்த்தியடைய வேண்டின் குலபுத்திரர் குரு புத்திரர் தவ வலிமையாற் பெற விரும்புவர் இத்தலத்திற்கு வந்து வழிபடினிவ்வம்மையார் அருளால் நினைப்பவன் விரும்பினோற்குச் சித்திக்கும்.

## நாகபூக்ஷணி திருவூஞ்சற்பா 9-ம் செய்யுள்

கருநாகம் செந்நாக மிரண்டும் தங்கள்
கவலைகளை முறையிட்டுன் பாதம் நின்று
வருமுலகில் மாந்தருக்கு முன்னூளாலே
வரும் பிணிகள் போகமதை மனது மாற்றிப்
பிரிவதனைச் செய்யுமெங்கள் வரத்தை யம்மே
பிஞ்ஞகனும் நீக்குவரோ உம்மை யன்றி
அரியயற்கு மஞ்சோமே நயினையூர் வாழ்
அம்பியை நாகேஷ்வரியே யாடீரூஞ்சல்.

இச்செய்யுளாலும் இராகு கேது கிரகங்களின் தீவினை நீக்குவதற்கு இவ்வம்பிகை வழிபாடு மனிதப் பிறவிகளுக்கு அதி முக்கியமென்பதறிக. 8-ம் செய்யுளில் ஏழு கிரகாதிபரும் வழிபடுகிறார். ஆதலால் இராகுவைப்போல கொடுப்பானுமில்லை கேதுவைப்போல கெடுப்பானுமில்லை. என்ற பழமொழியும் உலக வழக்காய் இருக்கிறது. மானுடரில் எவர்க்காவது வாழ்நாளிலித்திசை ஒன்று வராது விடுவதில்லை. இலங்கையில் கரையோரங்களில் சேனிப்பவர்கட்கும் இரண்டு தலைமுறைக்கு முன் பொருட் குறைவுற்றவற்கும் நாகபூஷணியருளிலிருந்து இத்திசையில் ஒன்றாவது நடக்க அதுவும் கேந்திர முச்சமாட்சி பெறின் உத்தியோகம் வியாபாரம் முயற்சிமாற்றம் இடமாற்றம் பொருமை பதவி நிச்சயம் வரும் பிள்ளையாபட்டர் காலந் திருவிழா. ஐந்து நாள் உற்சவாரம்பம் செய்து ஆறாம் நாள் ரத உற்சவமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிழா மகிமை.

1-ந் திருவிழா மூர்த்தி தம்ப விம்பம் கும்பம் என்பனவற்றை குறித்து சுழிமுனை நாடிவகையாய் தெற்பைக் கயிறு கொடிச்சீலை இடபம் சூலம கீறிப்பின் கயிறு மூன்றின் மூலமாய் மூர்த்தியை ஆவாகானம் செய்து ஆன்ம கோடிகளுக்கு அருள் சுரப்ப ஆகாயம் பார்க்க மேலேற்றுவது. இது இராச்சந்திரர் சந்ததியாரே செய்து வருகிறார்கள்.

2-ந் திருவிழா சக்தி சிவம் இரண்டையும் முறையே அனுட்டித்து ஒன்றுபடுத்தி சொற்கம் பாதலம் மத்தியென்ற முப்பிரிவாற்கும் அருள்பாலிப்பது, இது இவ்வூர் (ஸ்தபதி தெய்வன் மரபினற்குரியது)

3-ந் திருவிழா ஆணவம், கன்மம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் உண்டாக்குவது. இது நயினை கொழும்பு வாசிகட்குரியது.

4-ந் திருவிழா இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் உண்டாக்குவது. இது நயினை கொழும்பு வாசிகட்குரியது.

5-ந் திருவிழா படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்து விதபஞ்ச கிருத்தியமாக பிரமா விட்டுனு உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என ஐந்தொழிலியற்றல் பஞ்சகிருத்தியம் இதுவும் ஏகஎசமான் இராமசந்திரர் பரம்பரையாற்குரியது.

6-ந் திருவிழா காமாக்குரோத லோபமோகம் மதமாச்சிக மெனும் ஆறுகுற்றங்களையும் களைந்து ஆன்மாக்கட்கு அருள்புரிவது. இது கண்ணப்பர் பரம்பரை ஆதிக்கத்தாற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7-ந் திருவிழா சப்தமாதர் சப்தசுரம் ஏழுகடல் இவைகளைகிரியா கமளமாயியற்றி அம்பிகை சிவபூசை செய்வது அன்றுதான் நயினாதீவில் ஓர் பழைய நாகம் எடுப்பது அம்பிகை. 32 அறம் செய்வதும் அந்தநாளே. இரத்தினம் பூர்வ புண்ணிய வசத்தால் வெடியரசன் மரபாளற்கே கிடைத்திருக்கின்றது.

8ம் திருவிழா இந்திரன் அக்கினி யமன் நிருதி வாயு வருணன் குபேரன் ஈசரனன் எனும் திக்குபாலகரை ஆராதித்து அட்டநாகம் அட்டயானை ஐராவதம்ம முதலியதும் கற்பகதரு காமதேனு இவைகளை வருவிப்பது இத்தருநாளும் நயினையூரில் கண்ணப்பன் சந்ததியில் அவதரித்த ஸ்ரீமான் க.மா.அவர்கள் சந்ததியாற்கே இருக்கின்றன.

9ம் திருவிழா நவக்கிரகங்களை பூண்டல மழைத்துமன்பதை கட்குவேண்டியவரம் அவரவர் நல்வினை தீவினைக்கேற்ப அருள் பாலிப்பதும் ஆன்மா முதலிலிருந்து இடபம் மயில் சற்பம் காராம்பசு அன்னம் குதிரை யானை நாகம் கடா இவைகளில் ஊர்ந்து 9ம் நாள் அம்பிகையை ஓர் கோவிலுக்குள் வைத்து இழுப்பது போன்று மேலுலக வாசிகள் காண இரவிரல் ஓர் காட்சி தருவது இதுவும் தவபலமுடைய புன்-மேற்கு பரம்பரை நாகனாதபிள்ளை வம்மிசத்தாற்கே உண்டு.

10ம் இது அம்பிகை மானுட ரூபக் கோவிலிலமர்ந்து ஞானோதயமாக காட்சியளித்து உலாவருதல் இத்தினம் குரு எசமான் திருநாள் உபயகாரர் பட்டணதல உருவகமுறையாம். தீர்த்தம் இது அம்பிகை அருளல் ஆன்மாக்களுக்கு செய்யும் தீர்த்த தினம் இப்படியெ திருநாள் பத்தும் செய்பவர் அந்தந்த விழாவிற்கு உரியபேற்றை தப்பாது அடைவர் என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11ம் நாள் கப்பற் திருவிழா. இது பரதவருடையது. குடத்தனை நாகர்கோயில் போல் விசேடம் பெற்றது.

இந் நூல் தொகுத்ததின் காரணம்.

**விருத்தம்.**

சென்னையூராவி சென்ற வெம்சுந்தரம்
முன்னையூழ் வலியாலானி மாசத்தில்
என்னை அம்பிகையின் வரலாறு நூல்
பன்று வென்ளுரைத்தான் பலனென்னவோ. (1)

**இவை சுந்தரம்பிள்ளை இந்தியா யாத்திரை சென்றது.**

செல்லு மிந்தியா சென்ற போதத்தல
எல்லை பூர்வத்தியற்கை முன்னங் குள
நலலோர் முன்வரலாறு நயினையூர்க்
கில்லையா தேவிக்கே நீயியம் பென்றான். (2)

**எனது பூர்வீக கன்மம்.**

சந்திரன்ரவிதன் னொடுபாம்புற
வந்துதோன்றுத மளையாலயத்துளான்
சொந்தவில்லங்கி ருந்தசுருதிகள்
சுந்தரன் சேய்சுமக்க வித்தானதே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(இயலிசை நாடகம் கற்காத் தவக்குறை)**

முத்தமிழ்க்கலை முற்றகத்துக் கற்காப்
பித்தன் செய்த பனுவற் பிழை கற்ற
வித்தகற்கு விளங்கினும் பாலிற் கல்
சுத்தம்பார்த்துப் பருகுவார் தொன்மையோர்

இங்ஙனம்
சு.ஐயாத்துரை
சோதிடர்

**நயினை**

இது தற்போது சுற்றளவு 7மைல் சதுரமாகும். இங்கு வசிப்பவர் பிராமணர், வேளாளர், கம்மியர், நாவிதர், வண்ணார், படையாட்சி, வகுப்பார், பள்மக்கள், பறையர், இஸ்லாமிகளும், இத்தீவில் தென்கிழ மூலையில் உ ண்டு.

**புத்தாலயமும் இரண்டு இடமுண்டு**

**இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் குடிசன மதிப்பு**

**அக்காலச்செய்யுள்**

பாரிப் பார்ற் புரோகதரிற் குடியிரண்டு அதிற்
பதிந்த குடிபார்ப்பாராய்யறுபத்தைந்து
காப்பான வேளாளா குடி ஐயெட்டுக்
கடற்பிழைக்கும் பரதவர்கள் மூவைந்து
கோப்பாண கொரவலர் தச்சர் குடியோர் மூன்று
ஈரங்கொல்லி குடி மூன்று ஏனக் கடி இரண்டு
தோப்பேறி குடி பதின்மூன்று அன்னியர் குடி யேழு
தொகை நயினை நகர்க்குடி நூற்றைம்பதாமே
தற்போது 1000 குடி வரை உத்தேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இங்கு நிலம் கூடியவர்களால் குறைந்தவர்க்கும் குறைந்தவர்களால் நிலம் கூடியவற்கும் துயர் இருக்கின்றது. இதுவும் இறைவியின் திருவிளையாடல்.33ம் அறம் இதனைன 32இன் தரும்ம முதலியார் அன்னை மூவுலகும் நீ யாகையால். சிந்தா குலம் கொண்டுதிரிய நான்முறையோ என சிறிமான் ஸ்ரீமுத்துக்குமாருப் புலவர் செப்பியதை நாடோறும் மறந்தே வருகிறார்கள். அம்பிகை நினைவூட்டுவாளாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

எமது குடும்ப குலவிளக்காய் திகழ்ந்த அமரர் ஐயாத்துரை சரவணபவன் இறைபதம் அடைந்த செய்தி கேட்டவுடன் ஓடிவந்து உதவிபுரிந்த உறவுகள், அயலவர்கள், நண்பர்களுக்கும், தொலைத்தொடர்பின் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், அந்தியேட்டி சவுண்டிகர நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்தவர்களுக்கும் இம் மலரினை அழகுற அச்சிட்டுதந்த கொழும்பு பிறிண்டர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சா வழி

ஜயாத்துரை + கமலாம்பாள்
(அமரர்) (அமரர்)

- நல்லம்மா (அமரர்)
- அம்பிகாவதி (அமரர்)
- கதிர்காமலிங்கம் (அமரர்)
- சரவணபவன்
- சுந்தரலிங்கம்

இளையதம்பி + மனோன்மணி
(அமரர்) (அமரர்)

- மங்கையற்கரசி
- கனகசபாபதி

சரவணபவன் + மங்கையற்கரசி →

- கடம்பமலர் + விமலராஜா → கௌரி
- கலாநிதி + சுந்தரகுமார் → பிரணவன், பிரணவி
- கௌரிபாலன் + காயத்திரி → பவன், ராம்ஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".



இதுவே உலக நியதியும், எனது படைப்பின்
சாராம்சமும் ஆகும்.

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**

யாழில் ... 0771974875

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org